# உதய சூரியன்

UTHAYASOORIYAN උදයසූරියන්

Source for reading hunters

உதயசூரியன் (களம் 02 - உதயசூரியன் - 01) (29 ஆகஸ்ட் 2013) பக்கம்: 32 விலை: 20/=




## சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கும் நாய் திருமணம்



## எல்லாம் நடிப்பக்காகத்தான்!




# எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் நவநீதம்பிள்ளையின் அறிக்கை!

## ஆமியில் சேர்ந்தா 35,000 ரூபாய் தாறன் என்று சொன்னாங்க!




# எல்லாம் நடிப்புக்காகத்தான்!

பிரபல சிங்களத் திரைப்பட நடிகரும் அரசியல்வாதியுமான சனத் குணதிலக்க அண்மையில் பௌத்த துறவற வாழ்க்கையை ஆரம்பித்தார். ஹங்குராங்கெத்த விமலரட்ன தேரர் என்ற பெயரில் பௌத்த பிக்குவாக புதிய பரிணாமம் எடுத்துள்ளார்.



பென்தர சபுகொட விஹாரையில் சனத் குணதிலக்க தனது பௌத்த துறவற வாழ்க்கையை ஆரம்பித்துள்ளார்.

எனினும் இந்த பௌத்த துறவற வாழ்க்கை நிரந்தரமானதல்ல பௌத்த மத வழிபாட்டு முறைகளின் சகல நியதிகளையும் பின்பற்றி ஒரு வார காலம் மட்டுமே துறவறத்தை பேணப் போவதாக அவர் அறிவித்துள்ளார்.



துறவற வாழ்க்கையின் மகிமையை அறிந்து கொள்ளவும் எதிர்காலத்தில் நடிக்க உள்ள திரைப்படமொன்றிற்கான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும் இவ்வாறு பௌத்த துறவறத்தை தழுவிக் கொள்வதாக துறவறம் பூணுவதற்கு முன்னதாக சனத் குணதிலக்க ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

நடிகர் சனத் குணதிலக்கவின் இந்த தற்காலிக துறவறத்திற்கு பௌத்த பிக்குகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

முழுச் சங்க சமூகத்தையும் அவமரியாதை செய்யும் வகையில் சனத் குணதிலக்க பௌத்த பிக்குவாக துறவறம் பூண்டுள்ளார் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

நடிப்பு நோக்கத்திற்காக துறவறத்தில் நுழைவது ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

உலக ஆசைகளைத் துறந்து மெய்யான அர்ப்பணிப்புடன் பௌத்த பிக்குவாக மாறியிருக்க வேண்டும்.

மாறாக அனுபவம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பௌத்த துறவறத்தை பூணுவது கண்டிக்கப்பட வேண்டியது என சோபித தேரர் தெரிவித்துள்ளார். மேலும் பௌத்த துறவறத்தின் மீது அக்கறையுடையவர்கள் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்க மாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.






# கண்ணியமாக நடந்து கொள்ளுங்கள் பரீட்சார்த்திகளிடம் வேண்டுகோள்!


பெருந்தோட்டப் பகுதியில் நூற்றி அறுபதிற்கும் மேற்பட்ட சிறுவர் கழகங்களைக் கொண்டுள்ள பிரிடோ சிறுவர் கழக வலையமைப்பு, இம்முறை க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகள் அனைவரும் தங்கள் பரீட்சைகளை சிறப்பாக எழுதி வெற்றி பெறவேண்டுமென வாழ்த்தி தோட்டங்கள் தோறும் பிரார்த்தனைகளை அண்மையில் நடத்தியது.

கல்வியில் முன்னேறுவதே அனைவரினதும் தற்போதைய ஒரே இலக்காக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதும் பரீட்சைகளில் வெற்றிபெற வேண்டுமானால் அதற்கு போதியளவு முன்னேற்பாடுகளும் திட்டமிடலும் அவசியம் என்பதை ஞாபகப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

இந்தப் பிரார்த்தனைகளில் பல பொது மக்களும் கலந்துகொண்டு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் மலையக சமூகம் அக்கறையாக உள்ளது என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

மேலும் அண்மைக்காலமாக பரீட்சைகள் முடிவடையும் தினத்தில் உடைகளுக்கு மை தெளித்தல், அவற்றை சேதப்படுத்தல், பாடசாலை உபகரணங்கள், கட்டிடங்களுக்கு சேதம் விளைவித்தல், மாணவர்களுக்கிடையில் மோதல்களை ஏற்படுத்திக் கொள்ளுதல் உட்பட பல அநாகரீகமான செயல்பாடுகளில் மாணவர்கள் ஈடுபட்ட பல சம்பவங்கள் அண்மைக்காலங்களில் நடைபெற்றுள்ளன.

பாடசாலை என்பது நமக்கு இதுவரை கல்வியை பெறுவதற்கு வழிவகுத்த, நமது எதிர்கால நலனுக்கு உறுதுணையாக இருந்த ஒரு நிறுவனமாகும். எனவே பாடசாலைகளை பாதுகாப்பது நமது தலையாய கடமை. நமது பாடசாலை வாழ்க்கை முடிந்துவிட்டாலும் தொடர்ந்து பாடசாலை, நம் எல்லோரினதும் பொதுச் சொத்தாக இருக்கும் என்ற உணர்வை மாணவர்கள் வளர்த்துக்கொள்வது அவசியம்.



எனவே பரீட்சைகள் முடிவடையும் நாளில் மேற்கண்டவாறான அநாகரிகமான நடத்தையில் ஈடுபடுவதை தவிர்த்து நமது மலையக சமூகம் நாகரீகமடைந்து முன்னேறிவரும் சமூகம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் என அனைத்து மாணவ, மாணவிகளிடமும் பிரிடோ வேண்டுகோள் விடுத்துள்ளது. இம்முறை உயர்தர மாணவ, மாணவிகளின் நடவடிக்கைகள் அடுத்துவரும் மாணவ, மாணவிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழும் வகையில் அமையவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரிடோ சிறுவர் கழக வலையமைப்பின் சார்பில் பொகவந்தலாவை கேர்கஸ்வோல்ட் கீபி, சுடர் ஒளி சிறுவர் கழக செயலாளர் செல்வி என்.தர்ஷினி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

**கே.புஸ்பராஜ்**

---

# மத்திய மாகாண தேர்தல்! அரங்கேறும் சுவாரஸ்யங்கள்

நீறுபூத்த நெருப்பாக இருந்த தொண்டமான், திகாம்பரம் முறுகல் கடந்த வாரம் வெடித்து பல சேதங்களை ஏற்படுத்தி விட்டது. மலையக தேர்தல் வரலாற்றில் கரும்புள்ளியாக அமைந்த இவ்வன்முறைச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடும் விசனத்தை வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி, புத்திஜீவிகள், சமூக நிறுவனங்கள் என பலராலும் கண்டிக்கப்பட்ட, விமர்சிக்கப்பட்ட திகா, தொண்டா மோதல் முடிந்ததாக தெரியவில்லை. தேர்தல் மேடைகளிலும் பத்திரிக்கை அறிக்கைகளிலும் இருதரப்பும் மோதலை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது முதல் இன்று வரை 200 இற்றும் மேற்பட்ட தேர்தல் வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதற்கு மத்தியில் மலையக தேர்தல் களத்தில் பல சுவாரஸ்யமான சம்பவங்களும் நடந்தேறி வருகின்றன.

**தனி விருப்புவாக்குக்காக அல்லோலகல்லோலப்படும் வேட்பாளர்கள்**

இ.தொ.கா. கண்டியிலும், மாத்தளையிலும் தனித்து சேவல் சின்னத்தில் களமிறங்கியிருப்பது அனைவரும் அறிந்ததே. முதன்மை வேட்பாளர் எவரும் நியமிக்கப்படாத நிலையில் தம்முடைய வெற்றிக்காக இவ் வேட்பாளர்கள் கடும் பிரயத்தனதுடன் சில கைங்கரியங்களிலும் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் கிடைக்கின்றன. ஒரு வாக்காளனுக்கு 3 விருப்பு வாக்கு இருக்கும் நிலையில், குழுவாக செல்லும் போது எம்மில் மூவருக்கு உங்கள் விருப்பு வாக்கை கொடுங்கள் எனக் கேட்கும் வேட்பாளர்கள் பின் தனியாகச் சென்று எனக்கு மாத்திரம் ஒரு விருப்பு வாக்கை செலுத்துங்கள் என மற்றவர்களுக்கும் விழும் வாக்கை தடுத்து வருகின்றனராம். இதற்கு மேலாக ஆசிரியர்கள், அதிபர்கள், வர்த்தகர்களுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு தமக்கு மட்டும் விருப்பு வாக்கை அளிக்கும்படியும் தமக்கே மக்கள் செல்வாக்கு அதிகமாக இருக்கின்றது என தனி விருப்பு வாக்கு கேட்டு அல்லோல கல்லோலப்படுவதாகத் தெரியவருகின்றது. பதவி ஆசை என்னென்ன குத்துக்கரணங்களையும், குழிபறிப்புக்களையும் செய்கின்றது என பாருங்களேன்.

**வேட்பாளரை விரட்டிய மக்கள்**

பிரதேசசபை உறுப்பினரான குறித்த வேட்பாளர் இம்முறை மாகாண சபை தேர்தலில் போட்டியிடுகின்றார். அவர் தம் சகாக்களுடன் மாத்தளை மாவட்ட தோட்டம் ஒன்றிற்குச் சென்று வாக்கு கேட்டுள்ளார். அப்போது அத்தோட்டத்தைச் சேர்ந்த ஒருவர் அவ்வேட்பாளரிடம் "இப்போதுதான் எம்மை தெரிந்ததா? மழைகாலத்தில் பெரும் அவதிப்பட்டோம். அரச நிவாரணத்தை பெற கடிதம் ஒன்று கேட்டதற்கு நீங்கள் கூறிய பதில் ஞாபகமிருக்கின்றதா?" எனக் கேட்டுள்ளார்.

கடிதம் கேட்டதற்கு எம்மை தெரியாது எனக் கூறிவிட்டீர்கள். எமக்கு உதவ வேண்டிய நீங்களே காலைவாரிவிடும் போது உங்களுக்கு நாம் ஏன் ஆதரவு தர வேண்டும்? தயவு செய்து இங்கிருந்து போங்கள் என முகத்திலடித்தால் போல் கூறியுள்ளார். அப்பதிலை சற்றும் எதிர்பார்க்காத அவர் தலையை தொங்கப் போட்டுக்கொண்டு வந்துவிட்டாராம்.

**வீழ்வது நாமாயிருப்பின் வீழ்த்துவதும் நாமாயிருப்போம்**

'வீழ்வது நாமாயிருப்பின் வீழ்த்துவதும் நாமாயிருப்போம்' இவ்வாசகம் சேவல் சின்ன வேட்பாளர் ஒருவரின் போஸ்டரின் கீழே காணப்பட்டது. இதன் அர்த்தம் என்ன என்பது அந்த வேட்பாளருக்கே வெளிச்சம்!

தமிழர்கள் தமக்காக குரல் கொடுக்கக்கூடிய தமிழ் பிரதிநிதித்துவத்தை தக்கவைக்க சிந்தித்து செயற்படுவது தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அவசியம் எனக் கருதுகின்றோம். ஆக களைகட்டி வரும் மத்திய மாகாண சபைத் தேர்தலில் இடம் பெறும் சுவாரஸ்யமான விடயங்களை தொடர்ந்து எதிர்பாருங்கள்.

**எம்.தாசன்**

**தரமான சித்திர இசை சேவைகளுக்கு**

01. பாடசாலை / பாலர்பாடசாலை / வியாபார நிறுவனங்கள் போன்றவற்றிற்கு சுவர் ஓவியங்கள் வரைவதற்கு விளம்பரபாதைகள் வடிவமைப்புக்கும்
02. தரம் - 1 முதல் 13 வரையான மாணவர்களுக்கான ஓவியம் வரையும் பயிற்சியும் பாடக்குறிப்பும் (புதிய பாடத்திட்டத்திற்கு அமைய)
03. வீடுகளுக்கான வரவேற்பு அறைக்கான அலங்காரம் (இந்தியன் முறையில்)
04. சிற்ப சித்திர பயிற்சிகளும் சுயதொழில் வாய்ப்பும்
05. மங்கல விழாக்களுக்கான அலங்காரம் (ஆட்டிபிசன் வேலைப்பாடுகள்/ பெண்டசி இசைகுழுவிற்கும்)

தொடர்புகளுக்கு:
வர்ண இசை ஓவிய சங்கம்
தலவாக்கலை. 077 - 8044849

# தேனிலவில் மோப்ப நாய்கள்!



திருமணம் மகிழ்ச்சிக்குரியது! சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அங்கீகாரம்.

மரபுரிமை நகரமான கண்டியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற திருமணங்கள் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளன.

சுமார் இரண்டு மணிநேரத்திற்குள் நிறைவடைந்த இந்த திருமண வைபவம் கண்டி, அஸ்கிரிய மைதானத்தில் கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

இலங்கை வாழ் மக்களின் பார்வையை மட்டுமன்றி உலகவாழ் மக்களின் பார்வையையும் இந்த திருமணங்கள் ஈர்த்து விட்டன.

**சரி அப்படி என்னதான் நடந்தது?**

பொலிஸ் மோப்பநாய் பிரிவைச் சேர்ந்த 8 ஜோடி நாய்களுக்கு பதிவுத்திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

அதுமட்டுமன்றி அதில் மூன்று ஜோடி நாய்கள் தேனிலவுக்காக நுவரெலியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த விசித்திரமான திருமண வைபவத்தில் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களிலிருந்து சுமார் 2000 பேர் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை பொலிஸ் மோப்பநாய் பிரிவு 1949 ஆம் ஆண்டு இரண்டு நாய்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த பிரிவில் தற்போது 262 மோப்ப நாய்கள் இருப்பதாக பொலிஸ் திணைக்கள புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் சேவையில் மோப்ப நாய்களின் பங்கு அளப்பரியதாக இருந்து வருகிறது.

யுத்த காலத்தில் வெடிப்பொருட்களை கண்டுப் பிடிப்பதற்காக மோப்பநாய்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

அதற்கு பின்னர் மிதிவெடிகளை கண்டுபிடிப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கும் மேலதிகமாக கொலை, கொள்ளை, போதைப்பொருள் விநியோகம் மற்றும் பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை கண்டுபிடிப்பதற்கும் தற்போது இந்நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளின் பாதுகாப்பிற்காகவும் இலங்கை பொலிஸ் மோப்ப நாய்கள் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாலைத்தீவில் நடைபெற்ற சார்க் நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கலந்துகொள்ளும் உச்சிமாநாட்டுக்கான பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கை பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகளினால் பயன்படுத்தப்படும் மோப்ப நாய்கள் பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

பயங்கரவாதிகள் பதுக்கி வைத்திருக்கும் வெடிகுண்டுகளை மோப்பம் பிடித்து கண்டு பிடிப்பதில் வல்லமை பெற்ற நாய்களே இந்த மாநாட்டின் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி கம்பஹா நீதிமன்றத்தில் வெடிகுண்டு ஒன்று இருப்பதாக பொலிஸ் அவசர சேவைக்கு கிடைத்த தொலைபேசி அழைப்பையடுத்து பொலிஸார் மோப்ப நாய்களுடன் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதுமட்டுமல்ல இரத்தினபுரியைப் பதறவைத்த தொடர் கொலைகளின் சூத்திரதாரிகளை கைது செய்வதற்கும் இந்த மோப்ப நாய்களே உதவின.

இதுபோன்று பல்வேறு குற்றச் செயல்களை கண்டுபிடிப்பதற்கும், அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கும் இந்த மோப்ப நாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நமது நாட்டை பொறுத்தவரையில் கண்டி பொலிஸ் மோப்ப நாய் பிரிவிற்கு பெல்ஜியம், நெதர்லாந்து, பிரித்தானியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து தலா 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் 100 மோப்ப நாய்கள் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டன.

இந்த மோப்ப நாய்களின் இனத்தை பெருக்கிக் கொள்ளும் நோக்கிலேயே திருமண ஏற்பாடுகள் நடத்தி வைக்கப்பட்டதாக அஸ்கிரிய பொலிஸ் மோப்ப நாய் பிரிவு அறிவித்துள்ளது. நாய்களுக்கு வைபவரீதியாக இலங்கையில் திருமணங்கள் நடத்திவைக்கப்பட்டமை இதுவே முதன்முறையாகும் என்றும் கூறப்படுகின்றது.

அஸ்கிரிய மைதானத்தில் மணமேடை, தோரணம் அமைக்கப்பட்டிருந்ததுடன் பொலிஸ் பேண்ட் குழுவினரும் வாத்தியங்களை இசைத்து வைபவத்தை மெருகூட்டினர்.

20 ஜோடி மோப்பநாய்கள் தங்களுடைய சீருடையுடன் பல்வேறு நிறத்திலான கண்ணாடிகள் அணிவிக்கப்பட்டு மணமேடைக்கு அழைத்துவரப்பட்டன.

அதில் எட்டு ஜோடி நாய்களுக்கு திருமணம் நடத்திவைக்கப்பட்டது. ஏனைய ஜோடிகளுக்கு பதிவுத் திருமணம் நடத்தப்படாதது ஏனென்று தெரியவில்லை.

இந்த வைபவத்தில் பிரதான விருந்தினராக பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை வைத்திய பீடத்தின் பேராசிரியர்கள் சிலரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் என்.பீ.அம்பன்வலவும் கலந்து கொண்டனர்.

இந்த திருமணத்தில் சாட்சியாளர்களாக அந்த மோப்ப நாய்களை பார்த்துக் கொள்ளும் பொலிஸ் உறுப்பினர்களே கையொப்பமிட்டமை விசேட அம்சமாகும். எங்களால் பார்த்துக் கொள்ளப்படும் இந்த இருவரின் குட்டிகளையும் நாங்கள் முறையாக பார்த்துக்கொள்வோம் என்றே சாட்சியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சாட்சிகள் கையெழுத்திட்டதன் பின்னர் திருமணத்திற்கான மணியோசை எழுப்பப்பட்டது. அதன்பின்னர் அலங்கரிக்கப்பட்டிருந்த நாய் ஜோடிகள் மணமேடைக்கு அழைத்துவரப்பட்டன.

திருமணம் முடிந்ததன் பின்னர் அதில் மூன்று ஜோடிகள் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தின் மூலமாக நுவரெலியாவுக்கு தேனிலவுக்காக அழைத்து செல்லப்பட்டன.

பொலிஸ் பிரதானிகள் முன்னிலையிலேயே திருமணம் நடத்தி வைக்கப்பட்டதுடன், இந்த திருமண வைபவத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், விருந்தினர்களுக்கும் பாற்சோறுடன் விருந்துபசாரம் இடம்பெற்றது.

மோப்ப நாய்களின் திருமண வைபவம் ஊடகங்களில் இடம்பிடித்துக் கொண்டதையடுத்து அதற்கான எதிர்ப்புகள் கிளம்பத் தொடங்கிவிட்டன. இந்த திருமண வைபவமானது சிங்கள கலாசாரத்தை கேவலப்படுத்துவதாக அமைந்து விட்டதாக கலாசார அமைச்சர் டி.பீ.ஏக்கநாயக்க தனது விசனத்தை தெரிவித்துள்ளார்.

மனித வாழ்க்கையில் மிகவும் முக்கியமான திருமண பந்தத்தை குறைத்து மதிப்பிடும் வகையிலேயே இந்த திருமணம் நடத்தி வைக்கப்பட்டதாகவும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இது 2000 வருடங்கள் பழைமையான சிங்கள கலாசாரத்தை குறைத்து மதிப்பிடுவதாக அமைந்திருந்தது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, இந்த திருமண வைபவத்திற்கு எதிராக பொலிஸ் திணைக்களத்திற்கு முன்பாக சிங்கள ராவய அமைப்பினரால் செவ்வாய்க்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாடோடி

# எனது பணிகள் தொடர வேண்டுமானால் என்னை வெற்றிபெறச் செய்யுங்கள்



நான் மத்திய மாகாண சபை உறுப்பினராக இருந்த காலங்களில் பல பயன் தரும் அபிவிருத்தித் திட்டங்களை மேற் கொண்டுள்ளேன். எனது சேவைகள் தொடர வேண்டுமென்றால் அது மக்களின் கைகளிலேயே தங்கியிருக்கிறது என இ.தொ.கா.வின் உப தலைவரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான உதயகுமார் தெரிவித்தார்.

அண்மையில் அக்கரப்பத்தனையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

மலையக மக்களுக்கு பயன் தரக்கூடிய பல்வேறு அபிவிருத்திப் பணிகளை நான் ஆற்றியுள்ளேன். குறிப்பாகக் கூறினால் பாடசாலைக்கு நீர்த்தாங்கிகளை வழங்கியமை, தோட்டப் புறங்களுக்கான பாதைகள் புனரமைப்பு, தோட்டங்களுக்கு நீர்வசதிகளை பெற்றுக் கொடுத்தல், முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கத்திற்கு தகரங்கள், கதிரைகள் வழங்கியமை, இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கியமை என எனது பணிகளை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

இதுபோல எனது சேவைகள் தொடர வேண்டுமாயின் மக்கள் என்னைத் தொடர்ந்தும் அரசியலில் வைத்திருக்க வேண்டும்.




# மக்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்டவர்களை தெரிவு செய்யுங்கள்

வாரிசு அரசியலால் தொடர்ந்து அடிமைப்படுத்தப்பட்டுள்ள மலையகத் தமிழ் அரசியலுக்கு நல்லதொரு மாற்றத்தினை ஏற்படுத்தும் தேர்தலாக எதிர்வரும் மத்திய மாகாணசபைத் தேர்தலை மலையகத் தமிழ் மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளரும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

மஸ்கெலியா மொக்கா தோட்டத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசியபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ஒவ்வொரு தேர்தலிலும் மலையகத் தமிழ் மக்கள் உரிய அரசியல் பிரதிநிதித்துவத்துக்கு வழிவகுத்த போதும் இந்த அரசியல் பிரதிநிதித்துவங்களினால் உரிய சேவைகள் மலையகத் தமிழ் மக்களுக்குக் கிடைக்காத காரணத்தினாலே இன்று மலையகத் தமிழ் மக்கள் தமக்காக உண்மையாக சேவை செய்யக்கூடிய பிரதிநிதிகளை எதிர்வரும் தேர்தலில் வெற்றிப்பெறச் செய்வதற்கான முனைப்பினைக் காட்டத் தொடங்கியுள்ளனர்.

மலையக அரசியலில் ஜாம்பவான்களாக திகழ்ந்தவர்களுக்கு இன்று இறங்குமுகம் ஏற்பட்டுள்ளதால் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு எதிர்வரும் தேர்தலில் மலையகத் தமிழ் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்பதை நாம் உறுதியாக நம்புகின்றோம்.



மலையகத் தமிழ் ஆசிரியர் சமூகம் சார்பாக இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் எனக்குச் சந்தர்ப்பம் வழங்கியுள்ளார். இதனை ஆசிரியர் சமூகம் உட்பட சகல தரப்பினரும் அங்கீகரிக்கும் வகையில் தேர்தல் முடிவுகள் அமைய வேண்டும்.

மலையகத் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களைத் தெரிவு செய்வதில் வாக்காளர்கள் அக்கறை செலுத்த வேண்டும். மக்கள் மத்தியில் அனுதினமும் இல்லாமல் திடீரென தேர்தல் காலங்களில் மாத்திரம் முகங்காட்டுகின்றவர்கள் குறித்தும் வாக்காளர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் வேட்பாளர்கள் மூவரும் அதிகப்படியான விருப்புவாக்குகளுடன் வெற்றிப்பெறும் பட்சத்தில் மத்திய மாகாணத்தில் அமைச்சுப் பதவிகளையும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படப் போகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.




உங்கள் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய அருமையான தொழில் வாய்ப்பு

(தனியார்) நவீன கப்பல் புனர்நிர்மான வேலைகளான சாதாரண ஊழியர்கள், பெயின்டர், வெல்டர், வடு, தச்சு, விமான நிலையத்தில் (தனியார்) கிளினிங் / கேட்டரிங் / லொன்றி போன்ற பிரிவுகளுக்கு 18–50 வயதான ஆண், பெண் ஊழியர்கள் தேவை. தொழிலுக்கேற்ப சம்பளம் 18,000/= - 40,000/=

தொடர்புகளுக்கு முந்துங்கள்
☎: 077-0734757

Apply New Jobs...

பிரதான தொழிற்சாலைகளில் நிரந்தரமானதும் கவர்ச்சி கரமான சம்பளத்துடனும் வெற்றிடங்கள் சம்பளம் 18,000/=, 25,000/=, 35,000/= (ஜேம், குளிர்பானம், ஜோகட், தேயிலை, க்ளவுஸ்) போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர் / லேபல் / பொதியிடல் / தரம்பிரித்தல் போன்ற பிரிவிற்கு 18–50 வயது வரையான ஆண், பெண் தேவை. மற்றும் தனியார் பிரிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் வெற்றிடங்கள் உண்டு. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் கல்வி அறிவு அவசியம் இல்லை வருகை தரும் தினமே தொழில் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு ☎: 077-8508118

## ஓர் இரவு நேரம்...

ஒருவன் தன் மூன்று வயது மகன்
தூங்கிக் கொண்டிருக்கும்போது
தன் மனைவியின் மேலுள்ள
கோபத்தில் அவளைக் கொன்று
யாருக்கும் தெரியாமல்
பிணத்தை புதைத்து விட்டான்.
மறுநாள் காலை மகன் எழுந்து
அம்மாவைப் பற்றி கேட்டால்
என்ன சொல்லி சமாளிப்பதென்று
ஆலோசனை செய்தான்.
ஆனால், மகன் அம்மாவைப்பற்றி
கேட்கவில்லை.
இரண்டாம் நாளாவது கேட்பானென
நினைத்தான்.
ஆனாலும் கேட்கவில்லை.
வழக்கம்போல மகன்
சந்தோசமாகவேயிருந்தான்.
இவனுக்கு குழப்பம் அதிகரிக்க,
மூன்றாம் நாள் மெதுவாக மகனிடம்
பேச்சுக்கொடுத்தான்.
''உனக்கு நம்ம வீட்ல ஏதாவது
மாற்றம் தெரியுதா?
ஏங்கிட்ட ஏதாவது கேக்கணும்
போல இருந்தா கேளு''
மகன் மெல்லக்கேட்டான்,
''மூணுநாளா அம்மா ஏன் உங்க
பின்னாடியே நிக்கிறாங்கப்பா?''




ஒரு இளைஞன்
பஸ் சிக்னல்ல
நிக்கும் போது
பக்கத்தில் கார்
உள்ளே இருந்த
பொண்ண பார்த்து
ரசிச்சான். உடனே
பக்கத்தில் இருந்த
பெரியவர் சொன்னார்,
தம்பி அந்த பொண்ணு போற
கார் 5 இலட்சம்.
உடனே இளைஞன்
சொன்னான்,
ஐயா! நான் போற பஸ் 20
இலட்சம்.



## நல்ல முன்யோசனைதான்

இரண்டு காதலர்கள் தற்கொலை
செய்ய முடிவெடுத்து மலை
உச்சிக்குச் சென்றனர்.
இருவரும் கண்ணை மூடிக்கொண்டு
குதிக்கத் தயாராகினர்.
காதலன் முதலில் குதிக்க,
காதலி 'காதலுக்குக் கண்ணில்லை
என்பதை உணர்ந்துவிட்டேன்' என்று
கூறிக்கொண்டு பின்வாங்கி
விட்டாள். பாதாளத்திற்குப் போய்க்
கொண்டிருந்த காதலன்,
'தெரியும்டீ உங்களப்பத்தி'
என்று கூறிக்கொண்டு
முதுகில் மறைத்து
வைத்திருந்த பாரசூட்டை
விரித்துக்கொண்டு பறந்தான்.

# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க



## இதுல யார் நல்லவங்க?

ஒரு டாக்டர் நமக்கு நோய் இருக்கணும்னு
ஆசைப்படுவார்!!
ஒரு வக்கீல் நமக்கு நெறைய பிரச்சினை
இருக்கணும்னு ஆசைப்படுவார்!!
ஒரு மெக்கானிக் நம்ம வண்டிக்கு நிறைய கோளாறு
இருக்கணும்னு ஆசைப்படுவார்!!
ஆனா ஒரு உண்மையான திருடன் மட்டும்தான் நம்ம
நெறைய காசு பணத்தோட இருக்கணும்னு ஆசைப்
படுவான்!!!
இப்ப சொல்லுங்க மக்களே இதுல யார் நல்லவங்க???

## இது தப்பாச்சே.....!


பொலிஸ் : நீ எங்க தங்கி இருக்க ?
பையன் : எங்க அப்பா அம்மா கூட.
பொலிஸ் : உங்க அப்பா அம்மா எங்க தங்கி
இருக்காங்க?
பையன் : என் கூட தங்கி இருக்காங்க.
பொலிஸ் : நீங்க எல்லாரும் எங்க தங்கி இருக்கீங்க ?
பையன் : நாங்க எல்லாரும் ஒன்னாதான் தங்கி
இருக்கோம்.
பொலிஸ் : உங்க வீடு எங்க இருக்கு?
பையன் : எங்க பக்கத்து வீட்டுக்கு அடுத்து இருக்கு.
பொலிஸ் : உங்க பக்கத்து
வீடு எங்க இருக்கு?
பையன் : சொன்னா
நம்ப மாட்டீங்க.
பொலிஸ் :
பரவாயில்ல, சொல்லு.
பையன் : எங்க வீட்
டுக்கு அடுத்து இருக்கு.
பொலிஸ் : டேய்
பையன் : ஏன் சார்,
டென்ஷன் ஆகுறீங்க?
நான் எதும் தப்பா
பேசிட்டனா...?



*செயல்படும்போது அதற்குத் தேவையான சக்தி கிடைக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அந்த நினைவில் உங்களுடைய சிந்தனையையும் செயலினையும் ஒருமுகப்படுத்துங்கள். வெற்றி நிச்சயம் உண்டு.*
- எம்.ஆர். காப்மேயர்

*தன்னம்பிக்கை, துணிவு, பயம் - இந்த மூன்றில் முதல் இரண்டும் அழகான, உயர்வான வாழ்க்கையை அமைத்துத் தருகின்றன. தன்னம்பிக்கை இருந்தால் துணிந்து காரியத்தில் இறங்கி செயல்பட முடியும், தன்னம்பிக்கை இல்லையென்றால் அது பயத்தைத்தான் பரிசாகத் தருகிறது. பயந்தவர்கள் எதிலும் ஈடுபட மாட்டார்கள். துணிச்சலுடன் காரியத்தில் ஈடுபட்டிருப்பவர்களில் நீங்களும் ஒருவராக இருக்க வேண்டும்.*
- நிசயரி

## படித்ததில் வலித்தது



கண் தெரியாதவர் - நான்
தோற்றத்தை பார்த்து ஏமாந்தது கிடையாது...

காது கேளாதவர் - நான்
ஒட்டு கேட்டதே கிடையாது...

வாய் பேசாதவர் - நான் பொய்
பேசியதே கிடையாது...

குள்ளமானவர் - நான் யார் முன்னும்
தலை குனித்து நின்றது கிடையாது...

கை இல்லாதவர் - நான் யார்
குறையையும் பார்த்து கை கொட்டி சிரித்தது
கிடையாது...

கால் இல்லாதவர் - நான் காசு பணம்
வந்ததும் கால் மேல் கால்
போடுவது இல்லை...

அதனால்தான்
எங்களை மாற்றுத்திறனாளி
என்கிறார்கள்...
நீயோ ஊனம் என்கிறாய்...

எங்களால் செய்ய இயலாத செயல்களை
செய்யும் நீதான் ஊ --!! அந்த
வார்த்தையை உபயோகிக்க மாட்டேன்.
ஏனென்றால் அந்த வார்த்தையின்
வலி எனக்குத் தெரியும்!!!



உன் மனைவியும், மாமியாரும்
புலிக்கிட்ட மாட்டிகிட்டாங்கன்னா
முதலில் யாரை காப்பாற்றுவாய்?
இதிலென்ன சந்தேகம்...
புலியைத்தான்...

கபாலி : நாளைக்கு நான் பெரிய நகை
கடையை திறக்க போறேன்.

கோபாலு : அப்படியா நாளைக்கு நல்ல
கூட்டம் வரும்னு சொல்லுங்க.


கபாலி : போய்யா... பூட்டை
உடைக்கிறதுக்கெல்லாம் கூட்டம்
சேர்க்க முடியுமா...?




நாம் இன்று என்ன நிலையில் இருக்கிறோமோ,
அந்நிலையை நமக்கு அளித்தது நமது
எண்ணங்கள்தான். நமது இன்றைய
நிலை நமது எண்ணங்களாலேயே
ஆக்கப்பட்டிருக்கிறது.
-புத்த பகவான்



ஆழ்மனதின் சக்தியை அதிகப்படுத்துங்கள்.
அப்படி அதிகப்படுத்தியதால்தான் ஐசக்
நியூட்டன், பெல், விவேகானந்தர், காந்திஜி
போன்ற பல மனிதர்கள் உருவானார்கள். எனவே
நல்லதைச் செய்துகாட்ட என்னால் முடியும் என்பதை ஆழ்
மனதிற்குச் சொல்லிச் சொல்லி உங்கள் மன உறுதியைப்
பலப்படுத்துங்கள்.
ரோன் ஹொலண்ட்


இ.தொ.கா ල.ක.කො
CEYLON WORKERS CONGRESS
100
ஐயா
அவர்களுக்கு
பிறந்த தின வாழ்த்துக்கள்
வர்த்தகக்குழு - ஊவா மாகாணம்

# தாயின் கள்ளக்காதலனால் துஷ்பிரயோகப்படுத்திக் கொல்லப்பட்ட ஒரு வயதுக் குழந்தை



பச்சிளம் மொட்டுகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்வதும் அவ்வாறு துஷ்பிரயோகப்படுத்திய உலகம் அறியாத பிஞ்சுக்குழந்தைகளைக் கொன்று வயலிலும் ஆற்றிலும் வீசிவிட்டுச் செல்வது தொடர்பான செய்திகளுக்கு இன்றைய ஊடகங்களில் பஞ்சமே இல்லை.

இவ்வாறான சம்பவங்கள் ஒரு நாளைக்கு ஒன்றேனும் வரும் என்ற நிலை மாறி பக்கத்துக்கு ஒரு செய்தி என்று வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறு காமுகர்களின் பசிக்கு இரையாகும் அதிகமான உயிர்கள் தனக்கு என்ன நடந்தது என்பதையே அறிந்துகொள்ள முடியாத பருவத்தில் உள்ளமையே பரிதாபகரமான விடயம்.

இவ்வாறானதொரு சம்பவம் கடந்த 16 ஆம் திகதி வெலிமட பொரகஸ் என்ற பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

அனுஷா சந்துனி என்ற ஒரு வருடமும் இரண்டு மாதங்களுமேயான குழந்தை தனது தாயின் கள்ளக் காதலனால் 'பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெயசித்ராவின் முதலாவது மகளுக்கு 5 வயது. இரண்டாவது மகள் அனுஷா. தனது திருமண வாழ்க்கை முறிந்து போனதால் இரு பிள்ளைகளையும் தனது தாயிடம் ஒப்படைத்துவிட்டு வரக்காபொல பிரதேசத்தில் உள்ள ஒரு வீட்டுக்கு, வீட்டு வேலைக்காரியாகச் சென்றாள் ஜெயசித்ரா.

அங்கு வீட்டு வேலை செய்து கொண்டிருக்கும் போது அதே வீட்டில் வேலை பார்த்த சூரசேன என்பவருடன் ஜெயசித்ராவுக்கு தொடர்பு ஏற்பட்டது. சிறிது காலத்தில் இவர்களது இந்த முறையற்ற தொடர்பை வீட்டுக்காரர்கள் அறிந்து கொள்ள ஜெயச்சித்ரா, சூரசேன இருவரும் வேலையை விட்டு அனுப்பப்பட்டார்கள்.

இவ்வாறு வேலை பறிபோன ஜெயசித்ரா தனது தாயின் பாதுகாப்பில் இருந்து இரண்டாவது மகள் அனுஷாவை அழைத்துக் கொண்டு சூரசேனவின் ஊரான உடபுசல்லாவ, ரக்குவானைக்குச் சென்றாள்.

அங்கு அவர்களது குடும்ப வாழ்க்கையை நடத்துவதற்கு வருமானமோ வழியோ ஒழுங்காக அமையாததால் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் வெலிமட பொரகஸ் பிரதேசத்துக்குச் சென்றார்கள். அங்கு அன்றாட கூலி வேலைகளைச் செய்து தமது வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தார்கள்.

தனக்கு ஒரு விடிவுகாலம் ஆரம்பித்து விட்டது என்று எண்ணி புதிதாக தனது வாழ்க்கையை ஆரம்பித்த ஜெயசித்ரா, துரதிர்ஷ்டவசமாக கடந்த 16 ஆம் திகதி நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். சூரசேன ஜெயசித்ராவை வெலிமடை வைத்தியசாலையில் அனுமதித்து அவளுக்குத் தேவையானவற்றைச் செய்து விட்டு அனுஷாவைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்றான்.





அவ்வாறு வீட்டுக்குச் சென்ற சூரசேன மீண்டும் 17 ஆம் திகதி அதிகாலை அனுஷாவைத் தூக்கிக்கொண்டு வைத்தியசாலைக்கு ஓடி வந்தான். மகளுக்கும் திடீரென்று என்னமோ நடந்துவிட்டது என்று வைத்தியசாலையில் அனுமதிக்கிறான்.

வைத்தியசாலையில் அனுஷாவைப் பரிசோதித்த வைத்தியர்கள் அனுஷாவின் உயிர் பிரிந்து நீண்ட நேரமாகிவிட்டதை உறுதிப்படுத்துகிறார்கள். அத்தோடு சூரசேனவும் காணாமல் போய்விட்டான்.

சூரசேன காணாமல் போனதும் குழந்தையின் இறப்பும் சந்தேகத்துக்கிடமாக இருந்ததால் வெலிமட நீதவானின் உத்தரவின் பேரில் பிரேத பரிசோதனைக்காக அனுஷாவின் உடல் பதுளை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

பிரேத பரிசோதனை முடிவுகளின் படி குழந்தையின் தலையில் பலமாக அடித்ததனாலும் மூளைக்கு அதிக இரத்தம் சென்றதனாலும் குழந்தையை பாலியல் ரீதியாக தொந்தரவு செய்ததனாலுமே இந்த மரணம் நேர்ந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

அது மாத்திரமன்றி உடம்பில் சிகரெட்டால் சுட்ட வடுக்கள் காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

சில நாட்களின் பின் கைதான சூரசேன பொலிஸாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் "கடந்த 16 ஆம் திகதி ஜெயசித்ராவை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு வீட்டுக்குச் சென்ற பின்னர் வீட்டில் குழந்தையை நள்ளிரவு வரை பாலியல் ரீதியாக பல துன்புறுத்தல்களைச் செய்தேன். அப்போது குழந்தை பலமாகக் கத்த ஆரம்பித்தது. பக்கத்தில் உள்ளவர்களுக்கு கேட்டுவிடும் என்பதனால் கையைப் பொத்தி குழந்தையின் தலையில் மூன்று முறை தட்டினேன். அப்போது குழந்தை அமைதியடைந்து தூங்கிவிட்டது. இரவு இரண்டு மணியளவில் குழந்தையின் உடல் குளிர்ந்து காணப்பட்டது. அப்போது தான் வெலிமட வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றேன். அங்கு குழந்தையை ஒப்படைத்துவிட்டு நான் உடபுசல்லாவைக்குச் சென்றேன்" என்று குறிப்பிட்டுள்ளான்.

தந்தையே சொந்த மகளை வல்லுறவுக்குட்படுத்தும் இந்தக் காலத்தில் பெண் பிள்ளைகளை வைத்துள்ள தாய்மார் மிகவும் கவனமாக இருந்து கொள்ள வேண்டும்.

கன்னிப் பெண், பிஞ்சுக் குழந்தை என்ற வித்தியாசம் இல்லாமல் தமது வெறியைத் தீர்த்துக் கொள்ளும் அரக்கர்களிடம் இருந்து தமது பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

ஒரு விபரீதம் நடந்த பின்னர் அழுது புலம்புவதில் பயனில்லை. முக்கியமாக கற்பு என்றால் என்ன என்றே அறியாத சிறுவயது பிள்ளைகளின் நடவடிக்கைகளில் எப்போதும் அவதானமாக இருக்க வேண்டும். காமுகர்கள் அப்பிள்ளைகளின் அறியாமையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். எமது பிள்ளைகளின் அழிவுக்கு நாமே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்காமல் இருப்போம்.

பஹமுன அஸாம்

## படுத்த படுக்கையான 90 வயது தாயை பாழடைந்த கட்டிடத்தில் போட்டுச் சென்ற பாசக்கார மகள்



முதியோர் இல்லங்களும் வயதானவர்களுக்கான தனி குடியிருப்புகளும் சமீப காலமாக அதிகரித்து வருகின்றன. இதற்கு என்ன காரணம் என்பதற்கு இந்தியாவின் கொல்லம் மாவட்டத்தில் நடந்த இந்த சம்பவமே சாட்சி.

தங்களை வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை கடைசிக் காலத்தில் வைத்து காப்பாற்றுவதற்கு இன்றைய தலைமுறையினர் முன்வருவதில்லை. பாரமாக நினைக்கின்றனர் என்பதற்கு இதுவே சான்று.

கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில் குலத்துப் புழாவில் 90 வயதான மூதாட்டி ஒருவர் தன் மகள் - மருமகன் வீட்டில் சில ஆண்டுகளாக வசித்து வந்தார். இவருக்கு மகன் இருந்த போதிலும் அவர் கவனிக்க முன் வரவில்லை.

மகளோ தன் தாயை தானே பார்த்துக் கொள்வதாகக் கூறி வீட்டு வேலைக்கு உதவியாக வைத்து கொண்டார். ஆனால் சில நாட்களுக்கு முன் அந்த மூதாட்டிக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையானார். இது மகளுக்கு பாரமாக போய்விட்டது. உடனே சகோதரனை அழைத்து தாயை தூக்கிச் செல் என்று கூறியுள்ளார். பெத்த மகனோ கண்டு கொள்ளவில்லை.

இதனால் பெத்த மகளும் தன்னால் முடியாது என்று கூறி தன் வீட்டு அருகே இருந்த பாழடைந்த கட்டடத்தில் ஆடுகள் கட்டப்பட்டிருந்த கொட்டிலில் போட்டு விட்டார்.

இதை பார்த்து அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தலையிட்டுள்ளனர். ஆனால் அப்பெண்ணின் உறவினர்களே ஆர்வம் காட்டாததால் உதவ நினைத்தவர்களும் பின் தங்கினர்.

ஆட்டுக் கொட்டிலில் மூதாட்டி ஒருவர் அவதிப்படுவது பற்றிய தகவல் வெளியானதும் தன்னார்வ நிறுவனம் ஒன்று அம் மூதாட்டியை தூக்கி சென்று கொட்டாரக்கராவில் உள்ள முதியோர் இல்லத்தில் சேர்த்துள்ளது.




# கண்பார்வை அற்ற வாலிபரின் சாதனை



அதிவேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டி கண்பார்வையற்ற வாலிபர் சாதனை படைத்துள்ளார்.

ஸ்கொட்லாந்தின் எடின் பர்க்கைச் சேர்ந்த ஸ்டாரட்கன் (வயது39), கண்பார்வையற்றவர். கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட விபத்தில் தோள்பட்டை எலும்பு உட்பட முதுகில் 2 இடங்களில் எலும்பு நொறுங்கியது. இதனால் அவரது உடலின் வலதுபுறத்தில் பக்கவாதம் ஏற்பட்டு உடல் ஊனமுற்றவர் ஆனார். இருப்பினும் தன்னம்பிக்கையை இழக்காத ஸ்டாரட்கன், மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் தேர்ச்சி பெற்றார்.

இவரது தந்தை ஜியோப் இவருக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்றபடி வழிகாட்டுவார், இன்டர்காம் மூலம் தந்தை கொடுக்கும் தகவலின்படி மோட்டார் சைக்கிளை நிறுத்துவார்.

இவ்வாறு தொடர்ந்து பயிற்சி பெற்ற இவர், சமீபத்தில் ஷன்பர்க் நகரில் மணிக்கு 167.1 மைல் வேகத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டி சாதனை படைத்துள்ளார்.

# உலகிலேயே மிக அழகான குதிரை



துருக்கியில் இருக்கும் இந்தக் குதிரைதான் உலகிலேயே மிக அழகான குதிரை என்ற பெயரை வாங்கியுள்ளது. தங்க கலரில் இருக்கும் இக்குதிரை வீதியில் நடந்து வந்தால் ஏதோ தங்கத் தேர் நேரில் வருவது போல் ஜொலிக்கும். இதன் நிமிர்ந்த நடையும், ஒய்யாரமும் ஜொலி ஜொலிப்பும் பார்ப்பவர் மனதை கொள்ளை கொள்ளும்.

# ஆரோக்கியமாக வாழும் 123 வயது ஆதிவாசி மனிதன்



பொலிவியா நாட்டில் ஆதிவாசி மனிதன் ஒருவர் 123 வயதுடன் வாழ்ந்து வருவதாக அந்நாட்டு அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

பொலிவியாவின் பிரேஸ்குயா என்ற மலைப் பிரதேசத்தில் கார்னிலோ புளோரஸ் லாவூரா என்பவர் வாழ்ந்து வருகிறார்.

கடந்த 1890 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16 ஆம் தகதி பிறந்த கார்னிலோவுக்கு 3 பிள்ளைகள் 16 பேரன் - பேத்திகள், 39 கொள்ளுப்பேரன் - பேத்திகள் இருக்கிறார்கள்.

பற்களை இழந்தாலும் கூட நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படும் கார்னிலோ, எவ்வித உதவியும் இன்றி வெகுதூரம் நடக்கிறார்.

இவருடைய நீண்டகால ரகசியம் பற்றி கூறுகையில்; நரி, கீரி இறைச்சியை அதிகம் விரும்பி சாப்பிடுவது, நீண்டதூரம் நடப்பது ஆகியவைதான் என்கிறார். மேலும் புரதசத்துள்ள தானியங்கள் அவ்வப்போது பன்றி, ஆட்டு இறைச்சி உண்பேன் என்றும் தெரிவித்துள்ளார். இவருக்கு பிறந்தநாள் சான்று இல்லை என்பதால், வெறும் வாய்மொழி தகவல் மூலம் கின்னஸ்சாதனைக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

# எலும்புகளால் ஆன தேவாலயம்



செக் குடியரசு நாட்டில் செட்லெக் என்ற இடத்தில் ஒரு தேவாலயம் உள்ளது. இதை சேர்ச் ஆப் போன்ஸ் அதாவது எலும்புகளால் ஆன தேவாலயம் என்று அழைக்கின்றனர். 40 ஆயிரத்திற்கும் அதிகமானோரின் எலும்புகள் சேகரிக்கப்பட்டு ஆலயம் முழுக்க ஒரு இடம் பாக்கி இல்லாமல் பல வடிவங்களில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் இந்த பகுதியில் தொடர்ந்து யுத்தம் நடந்து வந்துள்ளது. அப்போது ஏராளமானோர் இறந்து போயினர். இறந்தவர்களை புதைப்பதற்கு போதிய இடவசதி இல்லாமல் ஏற்கனவே புதைத்து மண்ணோடு மண்ணானவர்களின் எலும்புக் கூடுகளை வெளியே எடுத்து அந்த இடத்தில் இறந்தவர்களின் உடலை புதைத்தனர். எடுத்த எலும்புக் கூடுகளை என்ன செய்வது என்று யோசித்தனர். கை எலும்பு, கால் எலும்பு என தனித்தனியாக பிரித்து அவற்றை சர்ச்சுக்குள் அலங்கார மணிகள் தொங்க விடுவதைப் போல் அழகுற அமைத்து விட்டனர்.

தொங்கு சர விளக்குகள், பக்கவாட்டு விளக்குகள், மதுக்கிண்ணங்கள், எலும்புகளை கடித்தபடி இருக்கும் மண்டை ஓடு என கற்பனையை இஷ்டத்துக்கு தட்டிவிட்டு அழகுபடுத்தி விட்டனர்.

போரில் எவ்வாறெல்லாம் காயம்பட்டு இறந்திருக்கக் கூடும் என்பதை காட்டும் விதத்தில் எலும்புகளால் ஆன கண்காட்சியையும் அமைத்துள்ளனர்.

இந்த சேர்ச் வாரம் ஏழு நாட்களும் திறந்திருக்கும். சேர்ச்களில் வழக்கமாக நடைபெறும் பிரார்த்தனை கூட்டம் உட்பட அனைத்து நிகழ்ச்சிகளும் நடைபெறும். ஆனால், ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 24, 25 ஆம் திகதிகளில் மட்டும் மூடியிருக்கும்.

# இது தான் அது!






படத்தில் இருப்பதைப் பார்த்து இது ஏதோ ஒரு ஏவுகணையோ? பீரங்கி குண்டோ? என நினைத்து இதை ஏன் வீட்டில் வைத்துள்ளனர் என்று தானே எண்ணுகிறீர்கள்? அது தான் இல்லை. இந்த பீரங்கி குண்டை அக்கு வேறு ஆணி வேறாக பிரித்தால்... அட... நான்கு நாற்காலி ஒரு குட்டி டேபிள் எல்லாம் ஒரு நிமிடத்தில் தயார்! வேண்டாத போது அப்படியே அடுக்கி நிறுத்தி வைத்தால் பார்க்க புதுமையாகவும் இருக்கும். இடத்திற்கு இடமும் மிச்சமாகும் அல்லவா? உட்கார்ந்து யோசித்து செய்திருப்பாங்கனோ?

# நண்பன் என்ற போர்வையில் நயவஞ்சகன்

## தியத்தலாவையை உலுக்கிய கொடூரச் சம்பவம்



அன்று ஞாயிற்றுக்கிழமை, 18 ஆம் திகதி, கடிகாரம் 8 மணியை கடந்து சென்று கொண்டிருந்தது. தியத்தலாவை எல்லேகம பகுதியே பெரும் களேபரமாக இருந்தது. "என் அன்பு மகளை இன்னும் காணவில்லை"என்ற இரேஷிகாவின் தாயின் குரல் அனைவரையும் கலங்க வைத்துக்கொண்டிருந்தது.

நேரம் இரவு 9, 10, 12 என வேகமாக சுழன்று கொண்டிருந்தது. நேரம் செல்லச் செல்ல அனைவரின் முகத்திலும் பயம் தெரிய தொடங்கியது.

சரி! யார் இந்த இரேஷிகா? அவள் எங்கு சென்றாள் எனும் வினாக்களுக்கு விடை இதுதான்.

தியத்தலாவை எல்லேகம பாசல்கந்த பகுதியைச் சேர்ந்த இரேஷிகா ஒலினி சத்துராணி (8 வயது). எல்லேகம வித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி கற்கிறாள். எப்போதும் துறுதுறுவென இருக்கும் இரேஷிகாவிற்கு அம்மா, அப்பா, சகோதரன், சகோதரி தான் உலகம்.

வீட்டின் செல்லப்பிள்ளையான இரேஷிகா மீது குடும்பத்தினர் உயிரையே வைத்திருந்தனர். இந்த நிலையில், இரேஷிகாவின் தந்தையின் நண்பனான நவீன் பிரியங்கரகே (39 வயது) இரேஷிகாவின் வீட்டிற்கு அடிக்கடி வருவதும், கதைத்துக் கொண்டிருப்பதும் வழமை.

இரேஷிகாவின் வீட்டிற்கு அருகில் உள்ள 'கராஜ்' ஒன்றில் நவீன் வேலைசெய்து வந்தான். மனைவியை விட்டுப் பிரிந்து தனிமையில் வசிந்து வந்த நவீன் இரேஷிகா வீட்டுக்கு சென்று நட்பு பாராட்டி வந்ததால் அவர்களுடன் நெருக்கமான உறவை கொண்டிருந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. தியத்தலாவை இராணுவ முகாம் பெரஹரா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அன்று மாலை இரேஷிகா வீட்டுக்கு வந்த நவீன் தன் நண்பனான இரேஷிகாவின் தந்தையுடன் கதைத்துக் கொண்டிருந்தான்.

இவர்களின் சம்பாஷணைக்கு மத்தியில் இரேஷிகா குறுக்கிடுவதும் விளையாடுவதுமாக இருந்தாள். இன்று மாலை தியத்தலாவை இராணுவ முகாமில் பெரஹரா இருக்கிறது. நான் போகிறேன். இரேஷிகா நீயும் வருகின்றாயா? என அச்சிறுமியிடம் நவீன் கேட்க அவளும் "அப்பா நான் நவீன் மாமாவுடன் பெரஹரா பார்க்கப் போகின்றேன்" என அடம்பிடிக்க ஆரம்பித்தாள்.

இரேஷிகாவின் தந்தையும் தன் நண்பனை நம்பி தன் மகளை பெரஹரா பார்க்க அனுப்பிவைத்தார். பெரஹரா பார்த்துவிட்டு சிறிது நேரத்திலேயே கொண்டு வந்து விட்டு விடுகின்றேன் என வாக்கு கொடுத்தான் நவீன். பெரஹரா பார்க்கப் போகும் சந்தோஷத்தில் அழகிய உடை உடுத்தி உற்சாகதின் உச்சத்திற்கே சென்றிருந்தாள் இரேஷிகா. தனக்கு மிகப்பெரிய அநியாயம் நடக்கப் போவதை அறியாமல் நவீனுடன் பெரஹரா பார்க்கச் சென்றாள் இரேஷிகா.

தன் நண்பனுடன் பெரஹரா பார்க்கச் சென்ற மகள் நீண்ட நேரமாகியும் வீடு வராததால் இரேஷிகாவின் குடும்பம் குழப்பமடைந்தது. நவீனை தொடர்புகொள்ள பலமுறை முயற்சித்த போதும் அவனுடைய கைபேசி நிறுத்தப்பட்டிருந்தது.

நேரம் 10, 11 என வேகமாக சுழன்று கொண்டிருந்தது. நவீனுடைய வீட்டுக்குச் சென்று பார்ப்போம் என முடிவெடுத்த இரேஷிகாவின் தந்தை அங்கு சென்று பார்த்தபோது வீடு பூட்டப்பட்டிருந்தது.

அதிர்ச்சியடைந்த இரேஷிகாவின் தந்தை இனியும் பொறுமை காப்பது நல்லதல்ல என தியத்தலாவை பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

நேரம் செல்லச் செல்ல இரேஷிகாவின் குடும்பத்திற்கு பயம் அதிகரித்துக் கொண்டே சென்றது. இரவிரவாக தேடியபோதும் இரேஷிகாவை காணக்கிடைக்கவில்லை.

அடுத்தநாள் பொழுதும் புலர்ந்துவிட்டது. (திங்கட்கிழமை) எனினும் இரேஷிகா தொடர்பாக எந்தத் தகவலும் இல்லை. மீண்டும் நவீனின் வீட்டைப் பார்ப்போம் என அவனின் அறையை நோட்டமிட்டபோது இரேஷிகாவின் குடும்பத்தினர் அதிர்ச்சியின் உச்சத்திற்கே சென்றுவிட்டனர்.

அந்த 8 வய்து பாலகி பெரஹரா பார்க்க ஆசையுடன் உடுத்திச் சென்ற ஆடை அவ்வீட்டில் கிடந்ததுடன், அவ்விடத்தில் இரத்தத் துளிகளும் சிந்தியிருந்தன. தன் அன்பு மகளுக்கு ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டது என்பதை ஊர்ஜிதம் செய்துகொண்ட இரேஷிகாவின் குடும்பத்தினர் செய்வதறியாது திகைத்தனர்.

தன் அன்பு மகளுக்கு எதுவும் நடந்திருக்கக்கூடாது என உலகில் உள்ள அனைத்து தெய்வங்களையும் வேண்டினர்.

இரேஷிகாவின் குடும்பத்தினர், அயலவர்கள் அனைவரும் இரேஷிகாவை தேடும் பணியை துரிதப்படுத்தினர். அவர்களின் தேடுதல் வீண் போகவில்லை. நவீனின் வீட்டிலிருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள வயலில் அப் பச்சிளம் சிறுமியின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

தன் அன்பு மகள் நாசமாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டு கிடந்த காட்சியை பார்த்தபோது இரத்தமே உறைந்து போகுமளவில் இருந்தது.

இரேஷிகாவின் குடும்பத்தினர் கதறியழுததை பார்த்து கண் கலங்காதவர் யாரும் இருக்கமாட்டார்கள். அந்தக் கயவனை சபிக்காத உதடுகளே இருக்காது.

இரேஷிகாவின் கோரக் கொலையால் அந்த ஊரே சோகத்தில் ஆழ்ந்தது. இந்த கொலைக்கு காரணமான அந்த கயவனைத் தேடி தியத்தலாவை பொலிஸார் தேடுதல் வேட்டையை தொடங்கினர்.

சடலத்தை பிரேத பரிசோதனை செய்த வைத்தியர் இரேஷிகா கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்திற்குப் பின் அவள் கொலை செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

நம்பி வீட்டுக்குள் விட்ட நண்பன் உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்து நட்பை களங்கப்படுத்தியுள்ளதை யாராலும் ஜீரணிக்க முடியாது. நண்பன் எனும் போர்வையில் நயவஞ்சகமாக நடந்துகொண்ட அந்த கயவன் கடந்த 21 ஆம் திகதி ஜயமினிபுர பகுதியில் வீடொன்றில் மறைந்திருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டான். அக் கயவனுக்கு அதிகபட்ச தண்டனை கொடுக்கக் கோரி கடந்தவாரம் தியத்தலாவை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மைகாலமாக இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வருவதுடன் சிறுவர்களுக்கு ஆபத்தான நாடாக இலங்கை அடையாளப்பட்டிருப்பது வெட்கக்கேடான செய்தியே.

இன்று யாரையும் நம்பி வீட்டுக்குள் அனுமதிக்க முடியாத அளவிற்கு சிறுவர் துஷ்பிரயோகங்கள் மலிந்துவிட்டன எனும் கனமான செய்தியை இரேஷிகாவின் மரணம் எமக்கு சொல்லிச் செல்கின்றது.

தமிழில் - எம்.தாசன்
நன்றி - மௌபிம

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

# வித்யாதரம்


கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

இவ்வினாப்பத்திரம் யாழ். வலயத்தால் தயாரிக்கப்பட்டது.

சிறுவர் மலர்ச்சி

✱ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


01. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.




இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. AB|CD  2. AD|BC  3. AC|BD

02.




1. BC|AE|DF  2. BF|AD|CE  3. BE|AC|DF

✱ கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிலும் முதலிலுள்ள வாக்கியத்தின் மிகப் பொருத்தமான கருத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

03. நாம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமானால்,
1. ஒவ்வொரு நாளும் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.
2. நாம் பாடசாலைக்குப் போகாது படிக்க வேண்டும்.
3. நாம் பாடங்களை நன்றாகப் படித்து பாடப் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

04. எமது பெற்றோர்களை நாம் ஏன் கவனிக்க வேண்டும்?
1. முதியோர் இல்லங்களில் சன நெருக்கடி.
2. அது எமது கடமை என்பதால்.
3. மற்றவர்கள் எம்மைக் கேலி செய்வார்கள் என்பதற்காக.

05. தளவாடி முன் தற்செயலாகச் சென்ற நாய் பலமாகக் குரைக்கத் தொடங்கியது. அதற்கான காரணம்,
1. தளவாடியின் மீதுள்ள கோபத்தினால்.
2. நாய் தளவாடியைத் தனதாக்கிக் கொள்ளவிரும்பியமையால்.
3. இன்னுமொரு நாய் அதற்குள் இருப்பதாக நினைத்து ஏமாற்றமுற்றதால்.

06. உருவை நன்கு விபரிக்கும் விடையைத் தெரிவு செய்க.




1. போக்குவரத்து, விரைவு, எரிபொருள்
2. போக்குவரத்து, தாமதம், பழைமை
3. எரிபொருள், சிக்கனம், பழைமை

✱ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


07. 6 மீற்றர் தூரத்துக்குச் சீரான இடைவெளியில் நடுவதற்கு 7 கம்பங்கள் தேவை. 18 மீற்றர் தூரத்திற்கு அதே சீரான கம்பங்கள் நடுவதற்கு எத்தனை கம்பங்கள் தேவை?
1. 19 கம்பங்கள்  2. 21 கம்பங்கள்  3. 18 கம்பங்கள்

08. விமலாவினதும், கமலாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 40 வருடங்கள். விமலாவின் வயது கமலாவின் வயதிலும் 4 மடங்காயின் கமலாவின் வயது எத்தனை ஆண்டுகள்?
1. 10 ஆண்டுகள்  2. 8 ஆண்டுகள்  3. 12 ஆண்டுகள்


✱ 09ஆம் 10 ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட படத்தைக் கொண்டு வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.



09. இவ்வுருவில் ▦ என நிறந்தீட்டப்பட் பகுதிகளை வெட்டி நீக்கினால் எஞ்சியிருக்கும் உரு எது?




10. இவ்வுருவில் ▨ என நிறந்தீட்டப்பட்ட பகுதிகளை வெட்டி நீக்கினால் எஞ்சியிருக்கும் உரு எது?




✱ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் A தொடக்கம் F வரையும் ஆறு சொற்கள் தரப்பட்டுள்ளன. இச்சொற்களை யாதாயினும் கோட்பாட்டிற்கமைய இரு கூட்டங்களாக்கலாம். இச் சொற்கள் சரியாகக் கூட்டங்களாக்கப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

11. A - பேனா B - இசை C - நடனம் D - பென்சில் E - நாடகம் F - வரைகோல்
1. ABD CEF  2. BCE ADF
3. ACF BDE  4. BCD AEF

12. A - மாம்பழம் B - முள்ளங்கி C - கரட் D - அன்னாசி E - பீற்றூட் F - வாழை
1. ADF BCE  2. BDE ACF
3. AEF BCD  4. ACD BEF

✱ 13 – 14 வரையான வினாக்களுக்குக் கீழ்வரும் தகவலை வாசித்துச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


பிரசாத்தின் வயது தாயின் வயதின் 1 / 5 மடங்காகும். பிரணவியின் வயது தாயின் வயதின் 1 / 8 மடங்காகும். தற்போது பிரணவியின் வயது 5 எனின்,

13. தாயின் தற்போதைய வயது என்ன?
1. 40  2. 13  3. 30


14. இரு வருடங்களின் பின் பிரசாத்தின் வயது என்ன?
1. 10  2. 12  3. 8

15. ஒரு பண்ணையில் உள்ள முயல்களினதும் கோழிகளினதும் கால்களின் மொத்த எண்ணிக்கை 108 ஆகும். இப்பண்ணையில் 20 முயல்கள் காணப்படுமாயின், கோழிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
1. 18  2. 14  3. 20


16. ஆடு, மிருகம், மயில் இதனை விபரிக்கும் படம்.



★ 17ஆம், 18 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் வெற்றிடமாயுள்ள கூட்டுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து எழுதுக.

17. 



1. 24
2. 13
3. 10

18. 


1. V
2. Λ
3. O

★ கீழே தரப்பட்ட உருவைக் கொண்டு 19, 20 ஆம் வினாக்களுக்கான விடைகளைத் தெரிந்து கீறிடுக.


ஒரு சதுரமுகி ஒன்றின் மூலை ஒன்றிலிருந்து ஒரு துண்டு வெட்டப்பட்டுள்ளதைப் படம் காட்டுகிறது.



19. மூலை வெட்டப்பட்ட திண்மத்திற்கு எத்தனை விளிம்புகள் உள்ளன?
1. 12 2. 15 3. 18

20. மூலை வெட்டப்பட்ட திண்மத்திற்கு எத்தனை உச்சிகள் உள்ளன?
1. 10 2. 12 3. 8

21. சதுரமான கடதாசி ஒன்றை மடித்து ஒரு பகுதியை வெட்டி நீக்கியபின் அக்கடதாசியை விரித்துப் பார்த்தபோது இந்த உருவம் பெறப்பட்டது. இவ்வுருவைப் பெறக் கடதாசி எத்தனை முறை மடிக்கப்பட்டது?



1. ஒரு முறை 2. இரண்டு முறை 3. மூன்று முறை

22. முக்கோண வடிவமுடைய இந்தத் தகட்டினை ஆகக் குறைந்தது எத்தனை முறை மடிப்பதன் மூலம் ஒரு சதுரத்தினைப் பெறலாம்.




1. இரண்டு முறை 2. மூன்று முறை 3. நான்கு முறை

23. நகரம் A யில் வாழும் சனத்தொகை, நகரம் B யினதும் C இனதும் சனத்தொகையிலும் குறைவாகும். B யினது சனத்தொகை C யினது சனத்தொகையிலும் அதிகம். இதன் மூலம் கூறக்கூடிய சரியான கூற்று யாது?
1. கூடுதலான சனத்தொகை காணப்படுவது நகரம் A யில்
2. நகரம் C யை விட நகரம் B யில் கூடுதலான சனத்தொகை காணப்படுகிறது.
3. நகரம் C யில் காணப்படும் சனத்தொகையே மிகக் குறைவான தாகும்.

★ மரத்தினால் செய்யப்பட்ட பல்வேறு வடிவங்களின் இரு நிலைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து 24ஆம் வினாவுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

24. இலக்கம் 1 இற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள இலக்கம் எது? (..................................)




★ கீழ்க்காணும் ஒவ்வொரு செய்கைக்கும் உரிய வாக்கிய ஒழுங்கைத் தெரிவு செய்து கீறிடுக.

25. A - புகைவண்டியில் ஏறுதல்
B - புகையிரத மேடைக்குச் செல்லுதல்
C - நுழைவுச் சீட்டுப் பெற நிரையில் ஒழுங்காக நிற்றல்
D - புகைவண்டி ஆசனத்தில் அமருதல்
E - நுழைவுச் சீட்டுப் பெறுதல்
1. DECBA 2. BCEAD 3. EABCD

26. A - பூக்களைக் கண்டு அவற்றைச் சுற்றி வட்டமிட்டன.
B - அவை ஒன்று சேர்ந்து தேன்வதையை உருவாக்கின.
C - பூக்களுக்குத் தீங்கு செய்யாது தேனைக் குடித்தன.
D - அவை வதையில் சேர்த்த தேன் ஓர் அருமருந்தாகும்.
E - தேனீக்கள் பூக்கள் இருக்கும் இடங்களை நோக்கிப் பறந்தன.
1. CDEBA 2. EACBD 3. EDBAC

★ கீழுள்ள விபரத்தை விளங்கி 27 - 29 வரையான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

27. வகுப்பொன்றிலுள்ள ABCD எனும் 4 மாணவர்கள் விரும்பும் நிறங்கள் தரப்பட்டுள்ளன.
A யும் B யும் பச்சை, சிவப்பு
C யும் B யும் சிவப்பு, மஞ்சள்
D யும் A யும் கறுப்பு, பச்சை

27. பச்சை, சிவப்பு, கறுப்பு ஆகிய மூன்று நிறங்களையும் விரும்பும் மாணவன் யார்?
1. A 2. B 3. C

28. சிவப்பு நிறத்தை விரும்பாதவர் யார்?
1. B 2. C 3. D

29. C எனும் மாணவன் எத்தனை நிறங்களை விரும்புகிறான்?
1. 1 2. 2 3. 3

★ 30ஆம், 31 ஆம் வினாக்களில் காணப்படும் நிகழ்வின் படிமுறை ஒழுங்கை அவதானித்து விடையைத் தெரிவு செய்க.

30. நோய் ⟶ வைத்தியர் ⟶ மருத்துவம் ⟶ சுகம்
1. மருந்து 2. எழுதுதல் 3. பரிசோதித்தல்

31. விதை ⟶ மரம் ⟶ பூ ⟶ காய்
1. செடி 2. கனி 3. இலை

32. "கடற்கரையில் மழை பெய்தது" எனும் வாக்கியத்தை ○ + △ எனும் குறியீடு உணர்த்துமாயின் "மழை தினமும் பெய்தது" என்பதைக் குறிக்கும் குறியீடு,
1. ○ △ + 2. + ○ △ 3. + ✡ △

★ பின்வரும் பாடலைப் படித்து 33ஆம், 34ஆம் வினாக்களுக்கு விடை தருக.

அழகாய் விண்ணில் நீந்திடுவேன்
அல்லி மலரைச் சிரிக்க வைப்பேன்
இரவைப் பகலாய் ஆக்கிடுவேன்
இனிய ஒளியைத் தந்திடுவேன்

33. அழகாய் விண்ணில் நீந்துவது எது?
1. சூரியன் 2. நிலவு 3. நட்சத்திரம்

34. "சிரிக்க வைப்பேன்" என்பதன் கருத்து,
1. மலரச் செய்தல் 2. வாடச் செய்தல் 3. நகைக்கச்செய்தல்

★ சரியான விடையினைத் தெரிவு செய்து இலக்கத்தை எழுதுக.

35. காகத்தின் கூட்டில் எப்பொழுதும் காணப்படுவது?
1. முட்டை 2. குஞ்சு 3. சிறிய தடிகள்


36. கடற்கரையில் இருப்பவன் எப்போதும் காணக்கூடியது.
1. கப்பல் 2. கடல்நீர் 3. மீனவர்கள்

★ சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

37. உணவுச்சாலை ஒன்றுக்குச் சென்ற 5 நண்பர்கள் ரொட்டி, பருப்பு ஆகியவற்றுடன் 5 முட்டைகளையும் தருமாறு கேட்டனர். ஒரு முட்டையை அவிப்பதற்கு 5 நிமிடங்கள் செலவாகும் எனின், எத்தனை நிமிடங்களுக்குப் பின்னர் அவர்களுக்கு 5 முட்டைகளும் வழங்கப்படும்?
(..............................................)

38. அருணன் பாடசாலை செல்லும் போது அவனுக்கு எதிரில் மாலவன் வந்தான். மாலவனின் முகத்தில் சூரிய ஒளி பட்டதை அருணன் அவதானித்தான் எனின், அருணன் எத்திசையை நோக்கிப் பயணஞ் செய்தான்?
(..............................................)

ஒரு வண்டு பூவைத் தேடிச் சென்ற பாதை வருமாறு,



39. வண்டு இடது புறமா, வலது புறமா கூடுதலான தடவைகள் திரும்பியுள்ளது?
(..................................................)

40. வண்டு கிழக்குத் திசையாக எத்தனை தடவைகள் சென்றுள்ளது?
(..................................................)

# வினாத்தாள் - 2

1 1/4 மணி

* பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

கண்ட கண்ட இடத்தில் எச்சில்
துப்பக் கூடாது - நாம்
காலை வைத்து மிதித்து அதில்
நடக்கக் கூடாது
எச்சில் தொட்டி எதற்கு இருக்கு
மறக்கக் கூடாது - நாம்
எந்த நோயும் ஒண்ட இடம்
கொடுக்கக் கூடாது
ஒன்றுபட்டு நாட்டைத் தூய்மை
ஆக்கிட வேண்டும் - நோய்
இல்லாமல் நூறாண்டுகள்
வாழ்ந்திட வேண்டும்

1. இப்பாடலில் இடம்பெற்றுள்ள தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல்லொன்றினைக் குறிப்பிடுக.
.....................................................
2. பாடல் எதனை வலியுறுத்துகிறது?
.....................................................
3. பாடலில் வந்துள்ள அடுக்கு மொழியை எழுதுக.
.....................................................
4. "எந்த நோயும் ஒண்ட இடமளிக்கக்கூடாது" என்பதன் கருத்து யாது?
.....................................................
5. பாடலில் வந்துள்ள "காலை" என்பதன் ஒத்த பதம்?
.....................................................
6. நூறு ஆண்டுகள் முடிவில் எடுக்கும் விழாவின் பெயர் யாது?
.....................................................
7. எச்சிலை எங்கே துப்ப வேண்டும்?
.....................................................
8. "மறதி" இதன் எதிர்ப்பதம் யாது?
.....................................................

* சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ் கீறிடுக.
1. கோடாலி, கோடரி, கொடாரி, கோடாளி
.....................................................
2. தேத்தண்ணி, தேணீர், தெத்தண்ணி, தேநீர்
.....................................................

* பின்வரும் வாக்கியங்களிலுள்ள அடைமொழிகளை இனங்கண்டு எழுதுக.
1. அழகான குழந்தை சிரித்தது.
பெயரடை மொழி - .....................
2. பூனை மெதுவாகப் பாய்ந்தது
வினையடைமொழி - .....................

* பின்வரும் இடைவெளியில் பொருத்தமான இரட்டைக்கிளவியை வைத்து நிரப்புக.
(படபட, கமகம, சலசல, கலகல)
1. பயத்தினால் நெஞ்சு................என்று அடித்தது.
2. திருமண வீட்டில் பெண்கள் ........... எனச்சிரித்தனர்.

* பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தை எழுதுக.
1. நெஞ்சு புண்ணாதல்
.....................................................
2. ஒத்துப் பாடுதல்
.....................................................

* பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தை எழுதுக.
1. இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை
.....................................................
2. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்
.....................................................

* சரியான விடையைத் தெரிவு செய்து இடைவெளியை நிரப்புக.
1. சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டுச் சிறுவர்கள் பட்டாசு ................ மகிழ்ந்தனர்.
(கொழுத்தி, கொளுத்தி)
2. மத்தாப்புச் .............. வானவெளியில் ஒளி வெள்ளத்தைப் பரப்பின.
(சிதறல்கள், சிதரல்கள்)

* சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஆக்குக.
1. ஒல்லாந்தர்/வாழ்ந்தவர்/ஆவார்/இலங்கையை/ சின்னத்தம்பிப் புலவர் / ஆண்ட / காலத்தில்.
.....................................................

* பின்வரும் தொடரின் கருத்தினைத் தமிழில் எழுதுக.
1. Class Teacher
.....................................................
2. Give me a pencil
.....................................................
3. Please Listen to me
.....................................................

* சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1. වාඩිවෙන්න
.....................................................
2. අපි පත් කමු
.....................................................


* சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
1. நல்வாழ்வுக்கான கருத்துக்களைப் பெறக் கூடிய இடமல்லாதது,
1). கடை 2). கோயில்
3). பாடசாலை 4). ஆன்மீக நிலையம்
2. மழை வருவதை அறியக்கூடியவற்றில் பொருத்தமற்றது.
1). ஈசல் பறத்தல்.
2). எறும்புகள் முட்டை கொண்டு திட்டை ஏறுதல்.
3). எருமைகள் வானை நோக்கிக் கத்தல்.
4). மனிதர்கள் அமைதிகாத்தல்.
3. மின்தாக்கத்துக்கு உள்ளான ஒருவரை நீர் காப்பாற்ற வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் யாது செய்வீர்?
1). நீர் குடிக்கக் கொடுத்தல்.
2). பிரதான ஆளியை நிறுத்துதல்.
3). விரைவாக அவரை இழுத்தல்.
4). ஈரச் சாக்கினால் பிடித்தல்.
4. "எதிர்காலத்தில் எனது நாட்டுக்குப் பயனுடைய ஒருவராக வருவேன்" இக்கூற்றில் காணப்படுவது,
1). உடலைத் தளர்த்தல் 2). மலர்வு
3). மனவுறுதி 4). பிரார்த்தனை

புல்லைத்தின்று வளர்ந்திடுவேன் பாலை உமக்குத் தந்திடுவேன் நான் யார்?

5. மேற்கூறும் கூற்றுக்குப் பொருத்தமான விலங்கினம் எது?
1). கிளி 2). பசு
3). நாய் 4). பூனை
6. இலங்கைக்கு மேற்கே அமைந்துள்ள நாடு எது?
1). இந்தியா 2). மலேசியா
3). ஆபிரிக்கா 4). தாய்லாந்து
7. பௌர்ணமித் தினத்திலிருந்து அமாவாசை வரை சந்திரனில் ஒளியேற்றும் இயல்பு குறைந்து செல்வதை அழைக்கும் விதம்?
1). தேய்பிறை 2). வளர்பிறை
3). அட்டமி 4). நவமி
8. அங்கீகரிக்கப்பட்ட தரமான பொருள் என்பதை வெளிக்காட்டும் சர்வதேச தரக்குறியீடு.
1). SLS 2). IIT

3). ISO 4). ICT

9. அருகிலுள்ள மின்காந்தமானது அதிக அளவில் குண்டூசிகளைக் கவர உகந்த செயற்பாடுகளில் ஒன்று,



1). பற்றறிகளின் எண்ணிக்கையைக் கூட்டுதல்.
2). பற்றறிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
3). குண்டூசிகளைப் பசை போட்டு ஒட்டுதல்.
4). குண்டூசிகளைக் குளிரூட்டியில் வைத்தல்.

10. வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தாத காய்,
1). பூசணி 2). பப்பாசி 3). பயற்றை 4). புடோல்

11. அம்பக்கை, யாப்பகுவை, தலதாமாளிகை - இம்மூன்றும் பின்வருவனவற்றில் எதற்குப் பிரசித்தி பெற்றவை?
1). ஓவியம் 2). செதுக்கல் வேலைக்கலை
3). இலக்கிய நூல் 4). பிரார்த்தனை

12. உடலுக்குச் சக்தி தரும் உணவுக்கூறு,
1). இரும்பு 2). காபோவைதரேற்று
3). விற்றமின் A 4). புரதம்

13. அதிகளவு நீரின்றி வரண்ட பகுதிகளில் வளரக்கூடியது
1). நாகதாளி 2). கொகிலா 3). பூசணி 4). எலுமிச்சை

14. கோழி தனது முட்டையை அடைகாக்க எடுக்கும் காலம்.
1). 17 2). 21 3). 42 4). 80

15. பின்வருவனவற்றில் இலங்கை நாட்டுக்குரியது விலங்கினம்,
1). மரத்தவளை 2). ஷமனா 3). மயில் 4). கரடி

16. இலங்கையின் தேசிய அடையாள அட்டையை வழங்கும் நிறுவனம்,
1). இலங்கைப் பொலிஸ்
2). கல்வி அமைச்சு
3). இலங்கை ஆட்பதிவுத் திணைக்களம்
4). பிரதேச செயலகம்

17. வண்டுகள் மலரில் அமர்ந்து தேனை உறிஞ்சிக் குடிக்கும் போது அவற்றின் கால்களில் ஒட்டிக்கொள்வது,
1). புல்லி 2). அல்லி 3). காம்பு 4). மகரந்தமணி

18. எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் தீப்பிடித்தால் தீயை அணைக்கச் செய்ய வேண்டியது,
1). தண்ணீர் தெளித்தல் 2). மணலை அள்ளி விசுறுதல்
3). எண்ணெய் ஊற்றுதல் 4). கையால் அணைத்தல்

19. வெயிலில் கட்டித் தொங்கவிடப்பட்ட பலூன்கள் தொடர்ச்சியாக வெடிக்கத் தொடங்கின. இதற்குக் காரணம்,
1). வளி வெப்பத்தால் விரிவடைதல்.
2). வளி வெளியேற இடம் போதாமை.
3). வெயிலின் சூடு காரணமாக வெடித்தல்.
4). மெல்லிய இறப்பர் பலூன்களாக இருப்பதால்.

20. குளவி தனது வீட்டைக் கட்டிக் கொள்ளப் பயன்படுத்தும் பொருள்,
1). தும்பு 2). களிமண் 3). மணல் 4). தாவரஇலை

21. ஒருவித்திலைத் தாவரமாகக் கருதமுடியாத தவாரம்,
1). பப்பாசி 2). தென்னை 3). நெல் 4). கமுகு

22. இரசாயனப் பசளைகளில் ஒன்று,
1). கூட்டெரு 2). கொம்போஸ் 3). சல்பேற்று 4). சாணம்

23. தேசியக்கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டால் அதன் அர்த்தம்,
1). தேசிய துக்க தினம் 2). தேசிய சுதந்திர தினம்
3). தேசிய விடுமுறை 4). தேசிய சமாதானம்

24. ''மீன்பாடும் நகரம், காற்று மிதந்து வரும் நகரம்'' இந்த வரியுடன் தொடர்புபட்ட நகரம்,
1). சிலாபம் 2). மட்டக்களப்பு
3). ஆற்றங்கரை 4). நீர்கொழும்பு

25. வீட்டுத்தோட்டத்தில் சணல், செவ்வந்தி போன்ற தாவரங்களை வளர்ப்பதன் பிரதான காரணம்,
1). அழகு தரும் என்பது
2). தீமை செய்யும் பூச்சிகள் அதனை நாடிச் செல்லும் என்பது
3). யாரும் கேட்டால் கொடுக்கலாமென்பது
4). தலையில் சூடிக்கொள்ளலாமென்பது

26. இலங்கையிலுள்ள அழகிய நீர் வீழ்ச்சிகளிலொன்று,
1). கிரிந்திஎல 2). விக்டோரியா 3). மின்னேரிய 4). தியலும

27. எல்லாளனுடன் போர் புரிந்த சிங்கள மன்னன் யார்?
1). வலகம்பா 2). பண்டுகாபயன் 3). வசபன் 4).துட்டகைமுனு

28. யுனெஸ்கோவால் உலக அதிசயங்களில் ஒன்றெனப் பிரகடனப் படுத்தப்பட்டது,
1). இசுருமுனிக் காதலர் சோடி 2). தலதாமாளிகை
3). சிகிரியா ஓவியம் 4). யாழ்ப்பாணம்.

29. பின்வருவனவற்றில் கொழுப்புச்சத்து அதிகம் உள்ளது,
1). நிலக்கடலை 2). அரிசி
3). முட்டை 4). பொன்னாங்காணி

30. பற்சில்லு மூலம் ஊடுகடத்தப்படுவது,
1). கஸ்பார்வீல் 2). தையல் இயந்திரம்
3). ஆலை 4). கைக்கடிகாரம்

* பின்வரும் பிரசினங்களைத் தீருங்கள்.

1. $^1/4 + ^3/8$ =

2. 4 பேனாக்களின் விலை ரூபா 45 எனின் 1 டசின் பேனாக்களின் விலை யாது? ..............................

3. 400cm துணியிலிருந்து 1.85m துணிவெட்டி எடுக்கப்பட்ட போது எஞ்சிய துணியின் நீளம் யாது? ..............................

4. கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கிய அப்பா தற்போது புழக்கத்திலுள்ள பெறுமதி கூடிய தாட்காசொன்றைக் கொடுத்த போது மீதிப்பணமாக ரூபா 175 .25 சதம் கிடைத்தது எனின் சிட்டையின் மொத்தப் பொறுமதி யாது? ..............................

5. மீனா 8.40 மணிக்கு பாடங்கள் படிக்கத் தொடங்கி 2 மணித்தியாலயம் 45 நிமிடங்களுக்குப் பின்னர் நிறுத்தினாள். மீனா பாடங்களைப் படித்து முடித்த நேரம் யாது? ..............................

6. 535 வாழைப்பழங்களை ஆரம்பப்பிரிவுகளின் 5 வகுப்புகளுக்கும் வழங்கப்பட்டால் ஒரு வகுப்புப் பெறும் வாழைப்பழங்கள் எத்தனை? ..............................

7. 750g சீனியின் விலை ரூபா 45.00 ஆகும் எனின், 1Kg 250g சீனியின் விலைக்காக வழங்கப்பட வேண்டிய பணம் எவ்வளவு?
..............................


8. ஒரு மீற்றர் துணி 325 ரூபா வீதம் 2 1/2 மீற்றர் துணிக்கான செலவைக் காணுங்கள்?

9. தாங்கியொன்றில் நீர் நிரப்பலானது 10.45 மணித்தியாலத்திற்குத் தொடங்கியது. 2 மணித்தியாலயம் 40 நிமிடங்களில் தாங்கி முற்றாக நிரம்பியது. தாங்கியில் நீர் நிரப்பி முடித்த நேரம் யாது?
..............................

10. ஒரு தோட்டத்தில் பறித்த தேங்காய்கள் 1485 ஆகும். இன்னொரு தோட்டத்தில் பறித்த தேங்காய்கள் 2499 எனின் இருதோட்டத்திலும் பறித்த தேங்காய்கள் எவ்வளவு? ..............................

11. சதுர வடிவக்காணியொன்றின் பரப்பளவு $225cm^2$ எனின் அதன் ஒரு பக்க நீளம் யாது? ..............................

12. i. தரப்பட்ட உருவின் சுற்றளவு யாது? ....................
ii. தரப்பட்ட உருவின் பரப்பளவு யாது? ....................




13. 15 000 ரூபா மாத வருமானம் பெறுமொருவர் பணத்தின் 2 / 5 பங்கை உணவுக்கும் 1 / 5 பங்கை உடைக்கும் செலவளித்த பின் மிகுதியாக உள்ள பணத்தை வங்கியில் சேமித்தார் எனின், வங்கியிலிடப்பட்ட பணத்தொகை யாது? ..............................

14. இரு பூசணிக்காய்களின் நிறை 5Kg 300g ஆகும். ஒன்றின் நிறை 1Kg 175g எனின், மற்றைய காயின் நிறை யாது? ....................

15. பின்வரும் தலைப்பை நன்கு வாசித்துச் சரியான எழுவாய் பயனிலைகளுடன் கூடிய (வாக்கியம் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்) ஆறு வாக்கிங்கள் எழுதுக.

தேசியத் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் அன்று வெளியாகியிருந்தன. அதில் பிரிவு ஒன்றில் பேச்சுப் போட்டியில் நானே முதலிடம் பெற்றேன் என்ற செய்தி பத்திரிகையின் முன் பக்கத்தில் எனது புகைப்படத்துடன் இடப்பட்டிருந்தது கண்டு . . . . .



# அழகு...

உடல் நலம்...,
குழந்தை வளர்ப்பு...,
சாதனை மகளிர்...,
ஆலோசனை...,
உளவியல்...,

## சிநேகிதியே

தையல் கலையின் பரிமாணங்கள்
தருபவர் : திருமதி.ராஜேஸ்வரி குமார் - பண்டாரவளை


## பிரவீனா சல்வார்

தோள்பட்டையின் அளவு = 1,4/2 = 7
பின் உயரம் = 36 / 2 = 38
மார்பின் சுற்றளவு = 32 / 4 = 8 + 2 = 10
இடுப்பின் சுற்றளவு = 28 / 4 = 4
7 + 1 = 8
தோள்பட்டையில் இடுப்பின் சுற்றளவு = 15
கை உயரம் = 5
கையின் சுற்றளவு = 12 / 2 + 1 = 7
கழுத்தின் அகலம் = 4
கழுத்தின் உயரம் = 5-1/2
பின் கழுத்தின் உயரம் = 4
தேவையான துணியின் அளவும் மடிக்கும் முறையும்

* 60 புடைவை 2 மீற்றர் தேவைப்படும்.
* உயரப் பகுதியை 2 பகுதிகளாகவும் அகலப் பகுதியை முக்கோணங்களாகவும் மடித்துக் கொள்ளவேண்டும்.
* அப்புள்ளியிலிருந்து கீழ்நோக்கி 1/2 அங்குளம் குறித்து சரிவுக் கோடாக இணைக்க.
* தோள்பட்டையின் அளவிலிருந்து 1அங்குளம் கழித்து அப்புள்ளியிலிருந்து கீழ்நோக்கி குறிக்க.
* அப்புள்ளியிலிருந்து இடது பக்கமாக கோடொன்று கீறி அதிலிருந்து வலது பக்கமாக மார்பின் சுற்றளவை குறித்துக்கொள்ளவேண்டும்.
* தோள்பட்டையிலிருந்து இடுப்பு வரை உள்ள அளவை குறித்து அதிலிருந்து வலது பக்கமாக இடுப்பின் சுற்றளவை குறித்துக் கொள்க.
* முக்கோணத்திலிருந்து கீழ்நோக்கி உயரப் பகுதியை குறித்து வாட்டிவரை பெயாட் வடிவில் வரைக.
* கழுத்தின் அகலத்தையும் உயரத்தையும் குறித்து கழுத்தை வரைக.
* அக்குள் பகுதியை உள்நோக்கி வரைந்துகொள்ள வேண்டும்.

பின் பகுதி

* முன் அளவுப்படியே தோள்பட்டையின் 1 அங்குளம் உயர்த்திக் கொள்ள வேண்டும்.
* அக்குள் பகுதியை வெளி நோக்கி வரைந்து கொள்ள வேண்டும்.




# சரும அழகை கெடுக்கும் செயல்கள்



**சுடுநீர்**

உடலுக்கு புத்துணர்ச்சியை கூட்டுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும் சுடுநீர் குளியல், சருமத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

**அழுக்கான மேக்கப் ப்ரஷ்**

அழுக்கான மேக்கப் ப்ரஷ்களை பயன்படுத்தினால் சருமத்தின் தன்மை பாழாகக் கூடும். எனவே வாரத்திற்கு ஒருமுறையாவது மெல்லிய ஷாம்புவைப் பயன்படுத்தி ப்ரஷ்களை கழுவ வேண்டும். இதனால் அதில் இருக்கும் பாக்டீரியாக்கள் அழிக்கப்பட்டு, சருமத்தின் தன்மை காக்கப்படுகின்றது.

**தூக்கமின்மை**

சரியாக தூங்காவிட்டால் சருமமானது பாதிப்பிற்கு உள்ளாகும். மேலும் தோல் நிபுணர்கள் சொல்வது என்னவென்றால் ஒரு நாளைக்கு சரியாக எட்டு மணி நேரமாவது தூங்க வேண்டும்.

**பருவைக் கிள்ளுவது**

பருக்களை கிள்ளினால் பரு போய்விடும் என்பது இல்லை. அது தழும்பை ஏற்படுத்தி முகத்தின் அழகைக் கெடுக்கும்.

பருவைக் கிள்ளுவதால் பாக்டீரியா இன்னும் ஆழமாக முகத்தின் உள் சென்று, பருவின் ஆழத்தைக் கூட்டி முகத்தின் அழகை கெடுக்கும்.

இத்தகைய பருக்களைப் போக்குவதற்கு முகத்தை சுத்தமாக வைத்திருந்தாலே போதுமானது. எனவே அவ்வப்போது முகத்தை கழுவினால், பருவைப் போக்க முடியும்.

**அடிக்கடி தொலைபேசியில் பேசுவது**

முகத்தில் போனை அதிக நேரம் வைத்திருப்பதால், அதன் அதிர்வு முகத்தின் பொலிவை போக்கி பருக்களையும், தழும்புகளையும் ஏற்படுத்தி, முகத்தின் அழகைக் கெடுக்கின்றது என்று சமீபத்திய ஆய்வு கூறுகின்றது.

# ஆள் பாதி காலணி பாதி



தனு ரசாக்

'ஆள் பாதி ஆடை பாதி' என்பதை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அதேபோல், ஆள் பாதி காலணி பாதி என்று தற்போது ஒரு புதிய நடைமுறை வந்திருப்பது பற்றி அறிந்திருப்பீர்கள். என்னதான் நாம் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்தாலும் அதற்கேற்ற பாதணிகளை நாம் அணியாவிட்டால் அந்த ஆடைக்கேற்ற மதிப்பே இல்லாது விடும் என்கின்றார் நம் அழகியற்கலை நிபுணர் தனு ரசாக்.

சிலர் ஆடைகளில் காட்டும் அக்கறையை தமது காலணிகளில் காட்டுவதில்லை. அவர்கள் அநேகமாக எல்லா இடத்திற்கும் அணியும் காலணிகளையே அதிகம் உபயோகப் படுத்துவார்கள்.

சிலர் ஆடை நன்றாக மட்டும் இருந்தால் போதும் எதற்காக வீண் விரயம் செய்து காலணிகள் வாங்க வேண்டும் என நினைப்பதும் உண்டு. ஆயினும், எல்லா இடங்களுக்கும் நாம் இவற்றை அணியாவிட்டாலும் சில முக்கியமான விருந்து வைபவங்களுக்கோ, திருமண விசேடங்களுக்கு செல்லும் போதாவது இவற்றை கவனிப்பதில் தவறேதுமில்லை.



இதற்காக அதிக விலை கொடுத்தும் இவற்றை நாம் வாங்கவேண்டிய அவசியமில்லை. ஒவ்வொருவருக்கும் ஏற்ற விலைகளில் தற்போது சந்தைகளில் மிகவும் விலைகுறைந்த காலணிகளும் விற்பனையாகின்றன. அவற்றில் நாம் அணியும் ஆடைகளுக்கு மிகவும் பொருத்தமான காலணிகளை வாங்கி அணியலாம்.

இன்று பல நவீன வகைகளில் காலணிகள் சந்தைகளில் விற்பனையாகின்றன. சில காலணிகளின் விலையைக் கேட்டாலே ஆச்சரியமாக இருக்கும். அந்தளவிற்கு பல விலைகளில் இருக்கின்றன. ஆகவே, எமது வசதியைப் பொறுத்தும், எமது வயதிற்கு ஏற்றவாறும் இவற்றை நாம் சரியாக தெரிவுசெய்து அணிந்தோமானால் எமக்கென்றே ஒரு தனி அழகு ஏற்படுவதை நாம் அவதானிக்கலாம்.

சிலர் அனைவரும் அணிகிறார்கள் என்று தானும் குதிக்கால் உயர காலணிகளை வாங்கி அணிவதும் உண்டு. இவை சில நேரங்களில் உடல் உபாதைகளையும் ஏற்படுத்திவிடுகின்றன. அதனால் எமக்கு ஏற்ற சரியான பொருத்தமான காலணிகளை தெரிவுசெய்து அணிவது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

சிலர் அதிக உயரமாக இருக்கவேண்டும் என்பதற்காக இக் குதியுயர காலணிகளை வாங்கியும் அணிகின்றனர். பின்னர் குதிக்கால், மூட்டு வலி, இடுப்பு வலி என்பவற்றினால் அவஸ்தையும் படுவதை நாம் பார்த்திருக்கின்றோம்.

பாதங்களுக்காகத்தான் காலணிகளே தவிர, காலணிகளுக்காக பாதங்கள் இல்லை. ஆகவே, எமக்கு ஏற்றவகையில் நாம் தரமான, அழகான காலணிகளை அணிவதால் எமக்கும், எம் தோற்றத்திற்கும் ஒரு சிறப்பாக நாம் காலணிகளை அணிந்து செல்வோமாயின் அது பார்ப்பவரையும் எம்மையும் கவர்வதாக அமையும்.

## பாடல்



திரைப்படம்:- பட்டத்து யானை
பாடகர்:- கார்த்திக்
இசை:- எஸ்.தமன்
பாடலாசிரியர்:- நா.முத்துக்குமார்

என்ன ஒரு என்ன ஒரு அழகியடா
கண்ண விட்டு கண்ண விட்டு
விலகலடா
என்ன ஒரு என்ன ஒரு அழகியடா
கண்ண விட்டு கண்ண விட்டு
விலகலடா
கண்ண விட்டு கண்ண விட்டு
விலகலடா
மனசத் தாக்குற மின்னலும் அவதான்
மழையில் தெரியும் ஜன்னலும் அவதான்
கனவில் பூக்குற தாமர அவதான்
கதையில் கேக்குற தேவத அவதான்
என்ன ஊரு என்ன பேரு கேக்கலடா
எங்க போறா எங்க போறா பார்க்கலடா
எங்க போறா எங்க போறா பார்க்கலடா
முன்னாடி அவளும் பின்னாடி நானும்
ஒரு முற திரும்பிப் பாத்தா என்ன
துண்டான மனச ஒண்ணாக்கத் தானே
மறுபடி அவள கேட்டேனே
(என்ன ஒரு என்ன)
இராகு காலத்தில நல்ல நேரம் வருமா
ஒன்பது பத்தரையில் சிரிச்சா
பிள்ளையாரு கோயிலுக்கு
தேங்கா ஒண்ணு ஒடைக்க
மனசு வேண்டிச்சு புதுசா
இஞ்சு இஞ்சா இடைவெளி கொறைஞ்சு
இதயம் பறக்குது லேசா
இங்கிலாந்து ராணி போல தங்கத்துல
எழச்சு
வாழ வப்பேன் மாசா
அவளை பார்க்கிற யாருமே அவளை
மறந்தும் கூட மறப்பது சிரமம்
பீப்பி ஊதணும் நேரத்த சொல்லடி
பீபி ஏறுது சீக்கிறம் சொல்லடி

(என்ன ஒரு என்ன)
வா என் அழகே வா என் உயிரே வா
என் மயிலே ஓ...
என் மயிலே ஓ...
வா என் உயிரே வா என் அழகே வா
என் மயிலே ஓ... வா
என் மயிலே ஓ... வா
ஹோ தில்லை நகரா தேரடி தெருவா
அங்கிருக்கா உன் வீடு
'சாரதாஸ்' கூரப் பட்டுச் சேல
வாங்கித் தருவேன்
வெக்கப் பட்டு எனை தேடு
ஹே தன்னந்தனியா வாழ்வது பாவம்
வந்து மாலையப் போடு
தண்டவாளம் போல
நம்ம ரெண்டு பேருக்கிடையில்
நடுவில் எதுக்குடி கோடு
மனசில் கட்டுறேன் மாளிக வீடு
வாசல் கோலம் வந்து நீ போடு
வாசல் கோலம் வந்து நீ போடு
பீப்பி ஊதணும் நேரத்த சொல்லடி
பீபி ஏறுது சீக்கிறம் சொல்லடி

(என்ன ஒரு அழகியடா)

## இனி ஒவ்வொரு படத்திலும் வேஷ்டி, லுங்கியுடன் தனுஷ்



இனி மேல் தனது படங்களில் ஒரு பாட்டுக்காவது லுங்கி அணிவது என்று தனுஷ் முடிவு செய்துள்ளார்.

தனுஷ் செண்டிமெண்ட்கள் நிறைந்த மனிதராக உள்ளார். அவர் அண்மைக்காலமாக சினிமா விழாக்களுக்கு வேஷ்டி, சட்டை அணிந்து வருகிறார். ஆள் குச்சியாக இருப்பதால் வேஷ்டி, சட்டையில் கொஞ்சமாவது உடம்பு இருப்பது போன்று தெரிகிறது.

என்ன தனுஷ் இப்படி கெட்டப்பே மாறிப் போய்விட்டது என்று பலரும் அவரிடம் கேட்டனர்.

நான் ஒரு தமிழன். தமிழரின் பாரம்பரிய உடையான வேஷ்டி, சட்டையை அணிவதில் பெருமைப்படுகிறேன் என்று ஒரு பஞ்ச் டயலாக்கை விட்டு அனைவரின் வாயையும் அடைத்து விட்டார்.

இனிமேல் தான் நடிக்கும் படங்களிலும் ஒரு காட்சியிலாவது வேஷ்டி, சட்டை அணிந்து வருவது என்று தனுஷ் தீர்மானித்துள்ளார்.

வேஷ்டி, சட்டையை தவிர்ந்து தான் நடிக்கும் படங்களில் ஒரு பாட்டுக்காவது லுங்கி கட்டி ஆடுவது என்றும் முடிவு செய்துள்ளார் தனுஷ்.

என்னுடைய பல படங்களில் லுங்கி கட்டி நடித்துள்ளேன். அதிலும் குறிப்பாக ஆடுகளத்தில் ஒரு பாட்டு முழுவதும் லுங்கி கட்டித்தான் ஆடினேன். அது பெரும்பாலானவர்களுக்கு பிடித்திருந்தது என்று தனுஷ் தெரிவித்தார்.

## வித்யா பாலனுக்கு எதிராக போர்க்கொடி!



சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கை வரலாறு கதையில் உருவான, த டார்ட்டி பிக்சர்ஸ் படத்தில் நடித்து, தேசிய விருது பெற்றவர் வித்யாபாலன். அதனால், கர்நாடக இசைமேதை எம்.எஸ்.சுப்புலட்சுமியின் கதையில் உருவாகும் படத்திலும், அவரை நடிக்க அழைப்பு விடுத்தது, ஒரு பட நிறுவனம். ''சில்க் வேடத்தில் ஆபாசமாக நடித்த ஒரு நடிகை, எம்.எஸ்.சுப்புலட்சுமியாக நடிப்பதா...?'' என்று, சில பிரபல இசைக் கலைஞர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதனால், அப்படத்தில் நடித்தால், படம் வெளியாகும் நேரத்தில், போர்க்கொடி பிடிப்பர் என்று, அப்படத்திலிருந்து தாமாகவே வெளியேறிவிட்டார் வித்யாபாலன்.

## விதார்த்தின் அண்ணன் அஜீத்!



மைனா படத்திற்குப் பின் விதார்த் நடித்த படங்கள் ஓடாததால், அவரது ஹீரோ மார்க்கெட் சரிந்துவிட்டது. அதனால் முக்கிய கேரக்டர்கள் கிடைத்தாலும், நடிக்கத் துவங்கிய விதார்த், சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜீத் நடிக்கும் படத்தில் அவரது தம்பியாக நடித்து வருகிறார். அதன்பின், நிஜத்திலும் விதார்த்திடம் அண்ணன் போலவே பழகி வருகிறார் அஜீத். அதனால், ''நிஜத்தில் உடன் பிறந்த அண்ணன் இல்லாத எனக்கு இப்போது, அஜீத் என்ற அன்பான அண்ணன் கிடைத்துவிட்டார்...'' என்கிறார் விதார்த்.

## முனி - 3யில் கலக்க வரும் அஞ்சலி!



ராகவா லோரன்ஸின் இயக்கத்தில் 'முனி-3' திரைப்படத்தின் மூலம் மீண்டும் ரசிகர்களை கவர வருகிறார் நடிகை அஞ்சலி.

முனி, காஞ்சனா படங்களின் வெற்றியைத் தொடர்ந்து இதன் மூன்றாம் பாகமான 'கங்கா' படத்தை உருவாக்கி வருகிறார்.

ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் உருவாகி வரும் இப்படத்தில் டாப்சி, கோவை சரளா, தேவதர்ஷினி ஆகியோர் நடித்து வருகின்றனர்.

தற்போது, இதில் சிறப்பு தோற்றத்தில் நடிகை அஞ்சலி நடிக்கவுள்ளாராம்.

இயக்குநர் ராகவா லாரன்ஸுக்கும் தெலுங்கில் நல்ல வரவேற்பு உள்ளமையால், அஞ்சலி இப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டு தெலுங்கில் தனது மார்க்கெட்டை உயர்த்த முடிவு செய்துள்ளாராம்.

'இங்க என்ன சொல்லுது' என்ற படத்தில், வி.டி.வி. கணேஷின் மனைவியாக நடித்து வரும் மீரா ஜாஸ்மின் இந்த வேடத்தில் நடிப்பதற்காக, முன்னணி ஹீரோயினாக நடித்த போது வாங்கியதை விட கூடுதல் சம்பளம் பெற்றுள்ளார். ஆக, சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தால், இமேஜ் பார்க்காமல் எந்த நடிகருடன் மீரா ஜாஸ்மின் நடிப்பார் என்ற செய்தி கசிந்து விட்டதையடுத்து, மேலும் சில ஓல்டு ஹீரோக்களும் தங்களுடன் டூயட் பாட மீராவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.



க்கு

னிமா



# ஆர்யாவின் அடுத்த காதலி!

அவ்வப்போது, ஏதாவதுஒரு நடிகையுடன் ஜாலியாக ஊர் சுற்றுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார் ஆர்யா. அந்த வரிசையில், இதுவரை நயன்தாராவுடன், ''கிசுகிசு''க்கப் பட்டவர், இரண்டாவது உலகம் படத்திற்கு பின், அனுஷ்காவுடன் கிசுகிசுக்கப்பட்டு வருகிறார்.

இதையடுத்து, தனக்கு ஒரு நாள் படப்பிடிப்பு இல்லையென்றாலும் ஐதராபாத்துக்கு பறந்து விடும் ஆர்யா, அங்கு அனுஷ்கா நடித்து வரும் ராணி ருத்ரம்மா தேவி படப்பிடிப்பு தளத்திலேயே முகாம் போட்டு விடுகிறார். படப்பிடிப்பு தளத்தில் கிடைக்கிற சின்னச்சின்ன கேப்பில், ஆர்யாவுடன் அமர்ந்து பேசும் அனுஷ்கா, அவரை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, தன் அம்மாவின் கைப்பக்குவத்தில் அறு சுவை விருந்தளித்து பிரியாவிடை கொடுக்கிறார்.

## ஹொலிவுட் படமாகும் கோச்சடையான்!

ரஜினி இரு வேடங்களில் நடித்துள்ள படம் கோச்சடையான். அவதார் பட பாணியில் ஹொலிவுட் தரத்தில் தயாராகி வரும் இப்படம் தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி, ஜப்பான், ஆங்கிலம் என ஐந்து மொழிகளில் வெளியாகிறது. தற்போது லண்டனில் உள்ள ஸ்டுடியோவில் 'டப்பிங்' மற்றும் பின்னணி இசை, எபெக்ட்ஸ் என இறுதிகட்ட பணிகள் நடந்து வரும் நிலையில் கோச்சடையானை ஹொலிவுட் படம் போன்று பிரமாண்டமான முறையில் வெளியிட தற்போது திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர். அதனால், ஹொலிவுட் தரத்திற்கேற்ப, 'மோஷன் கேப்சர்' முறையில், படத்தின் காட்சிகளை உருவாக்கும் பணியும் நடக்கிறது.





# மீராஜாஸ்மினுக்கு ஓல்ட் ஹீரோக்கள் அழைப்பு!

போய்ஸ் படத்தில் அறிமுகமான சித்தார்த், பெரும்பாலும் நகரத்து கதைகளிலேயே அதிகமாக நடித்தவர். இப்போது, ஜிகர்தண்டா படத்தில் முதல் முறையாக மதுரை இளைஞராக நடித்துள்ளார். பீட்சா இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கியுள்ள இப்படத்தில், லுங்கியை மடித்துக் கட்டி, சண்டை காட்சிகளில் எதிரிகளை புரட்டி எடுத்துள்ள சித்தார்த்துக்கு, மாட்டை அடக்கும் காட்சியில் நடிக்க வேண்டும் என்பது நீண்டநாள் ஆசை. அதனால், அவரது ஆசைக் காகவே ஒரு ஷாட் மட்டுமே வந்து செல்வது போன்று, ஒரு சிறிய காட்சியை



# மாட்டை அடக்கிய சித்தார்த்!



## பாடல்

திரைப்படம்:- தளபதி
பாடியவர்கள்:- எஸ்.பி.பி. கே.ஜே.யேசுதாஸ்
இசை: இளையராஜா
பாடலாசிரியர்: வாலி

காட்டுக்குயிலு மனசுக்குள்ள
பாட்டுக்கென்றும் பஞ்சமில்லே
பாடத்தான்
தவிலைத் தட்டு துள்ளிக்கிட்டு
கவலை விட்டு கச்சைக் கட்டு ஆடத்தான்

(காட்டுக்குயிலு மனசுக்குள்ள)

எல்லோரும் மொத்தத்திலே சந்தோஷ
தெப்பத்திலே
தள்ளாடும் நேரத்திலே உல்லாச
நெஞ்சத்திலே ஹேய்...

(காட்டுக்குயிலு மனசுக்குள்ள)

போடா எல்லாம் விட்டுத் தள்ளு
பழச எல்லாம் சுட்டுத் தள்ளு
புதுசா இப்போ பொறந்தோமுன்னு
எண்ணிக்கொள்ளடா....டோய்..
பயணம் எங்கே போனால் என்ன
பாதை நூறு ஆனால் என்ன
தோட்டம் வச்சவன் தண்ணீர் விடுவான்
சும்மா நில்லடா...டோய்..
ஊதக் காற்று வீச
உடம்புக்குள்ள கூச
குப்ப கூளம் பத்தவச்சி காயலாம் ஹோய்..
தை பொறக்கும் நாளை விடியும் நல்ல
வேளை
பொங்கப்பாலு வெள்ளம் போல பாயலாம்
அச்சு வெல்லம் பச்சரிசி வெட்டி வச்ச
செங்கரும்பு
அத்தனையும் தித்திக்கிற நாள் தான்....
ஹோய்..

(காட்டுக்குயிலு மனசுக்குள்ள)

பந்தம் என்ன சொந்தம் என்ன
போனால் என்ன வந்தால் என்ன
உறவுக்கெல்லாம் கவலைப்பட்ட
ஜென்மம் நானில்லை.... ஹ.ஹா..
பாசம் வைக்க நேசம் வைக்க
தோழன் உண்டு வாழ வைக்க
அவனைத் தவிர உறவுக்காரன்
யாரும் இங்கில்லே..
உள்ள மட்டும் நானே
உசிரைக் கூடத்தானே
என் நண்பன் கேட்டால்
வாங்கிக்கன்னு சொல்லுவேன்
என் நண்பன் போட்ட சோறு
நிதமும் தின்னேன் பாரு
நட்பைக் கூட கற்பைப்போல
எண்ணுவேன்
சோகம் விட்டு சொர்க்கம் தொட்டு
ராகம் இட்டு தாளம் இட்டு
பாட்டு பாடும் வானம்பாடி நாம்
தான்....ஹேய்..

(காட்டுக்குயிலு மனசுக்குள்ள)

சிறுவர் பகுதி



# உழைப்பின் அருமை

ஒரு செல்வந்தர் தனது மகனுக்கு தொழில் மற்றும் படிப்பினை பெற்றுக் கொள்வதற்காக தனது நண்பரின் நிறுவனம் ஒன்றில் பணிசெய்ய தனது மகனை 6 மாத காலத்திற்கு அனுப்பிவைத்தார். அவர் மகனோ எந்த வேலையும் செய்யவில்லை. ஆனாலும் தனது நண்பர் மகன் என்பதால் அவரும் கண்டுகொள்ளாமல் 6 மாதம் கடந்தவுடன் ஒரு தங்க நாணயத்தை கூலியாக கொடுத்து அனுப்பினார்.

அந்த நாணயத்தை தனது அப்பாவிடம் மகன் கொண்டு வந்து கொடுத்தான். அதனை வாங்கிய அப்பா அதனை தூக்கி தூர எறிந்தார்.

அதைக் கண்ட மகனோ ஒன்றும் கண்டு கொள்ளாமல் தனது படுக்கை அறைக்கு சென்று விட்டான்.

மீண்டும் இன்னொரு தெரிந்த நண்பரிடம் 3 மாதத்திற்கு வேலைக்கு அனுப்பினார். அங்கும் இப்படித்தான். எந்த வேலையும் செய்யாமல் 3 மாதம் கடத்தினான். ஆனாலும் தனது நண்பர் மகன் என்பதால் அவரும் 2 தங்க நாணயங்கள் கொடுத்து அனுப்பினார். அதையும் அப்பாவிடமே கொண்டு வந்து கொடுத்தான். முன்பு போலவே அந்த 2 நாணயங்களையும் தூக்கி தூர எறிந்தார். அப்போதும் கண்டுகொள்ளாமல் மாடிக்கு சென்று விட்டான்.

சிறிது காலம் கழித்து அறிமுகம் இல்லாத ஒருவர் இடத்தில் வேலைக்கு சேர்த்து விட்டார். அங்கு 3 மாதம் வேலை செய்துவிட்டு 1/2 தங்க நாணயத்தை ஊதியமாக கொண்டு வந்து கொடுத்தான். முன்புபோலவே அதையும் தூர தூக்கி எறிந்தார். ஆனால், இம் முறை அவனுக்கு மிக பெரிய அளவில் கோபம் வந்து விட்டது.

இது என்ன தெரியுமா? எனது வியர்வை! எனது உழைப்பு! 3 மாதம் தூங்கமால் உழைத்து இருக்கிறேன் அதற்கான கூலி! இவ்வளவு அலட்சியமாக தூக்கி எறிந்து விட்டாய். நீ எல்லாம் ஒரு மனிதனா? வீட்டில் சொகுசாக படுத்துக் கிடக்கும் உனக்கு உழைப்பின் வலிமை தெரியவில்லை. தெரிந்தால் இதை எறிந்து இருப்பாயா? என்று கோபமாக கத்தினான்.

அப்பொழுது அப்பா சொன்னார் இதைத்தான் உன்னிடம் நான் எதிர்பார்த்தேன். முன்பு நீ உழைக்காமல் கொண்டு வந்து கொடுத்த தங்க நாணயத்தை நான் தூர எறிந்த பொழுது உனக்கு கோபம் வரவில்லை. காரணம் அப்போது உனக்கு உழைப்பின் அருமை தெரியவில்லை. இப்போது நீ உழைத்துக் கொண்டு வந்த இந்த தங்க நாணயத்தை நான் எறிந்த பொழுது உனக்கு இவ்வளவு கோபம் வருகிறது. காரணம் நீ கஷ்டப்பட்டு உழைத்து பெற்று வந்ததால் உழைப்பின் வலிமை உனக்கு தெரிகிறது. இதைத்தான் நான் உன்னிடம் எதிர்பார்த்தேன் என்று சொல்லி மகனையும், அந்த 1/2 பவுன் தங்க நாணயத்தையும் மாறி மாறி முத்தம் இட்டார்.

உழைக்காமல் எது கிடைத்தாலும் நிலைக்காது. உழைப்பின் அருமையும் தெரியாது.

உழைத்துப் பெற்ற பொருளை ஒருபோதும் மனம் இழக்க நினைக்காது. தகப்பனாக இருந்தாலும் மனம் தட்டி கேட்கத் தயங்காதே!

## தவளை மீன்!



இதன் உருவம் மீன் போல இல்லாமல், பாறை போன்றும், சில பகுதிகள் தவளை போலவும் இருக்கும். எதிரி இரைக்காக துரத்தும்போது இது பாறையின் மேலாக மறைந்து போக்கு காட்டி விடும். பாறைகள் இல்லாத இடங்களில் தவளை வடிவில் உடலை சற்று மாற்றிக் கொண்டு தப்பித்துவிடும். அதனால்தான் இதற்கு, 'தவளை மீன்' என்று பெயர் சூட்டியிருக்கின்றனர்.



## குப்பைத்தொட்டி

குப்பைத் தொட்டியில் எந்த வகைக் குப்பைகளை போட்டு வைத்தாலும், அதன் துர்நாற்றம் ஒரே மாதிரி தோன்றுவது ஏன்?

பொதுவாக குப்பைத் தொட்டியிலிருந்து வீசும் துர்நாற்றத்திற்குக் காரணம், குப்பையில் ஏற்படும் பக்டீரியா மற்றும் பூஞ்சைகள் ஆகும். இவை ஒருவித கரிம இரசாயனப் பொருட்களை வெளியேற்றுவதால் அந்த துர்நாற்றம் ஏற்படுகிறது.

குப்பை ஈர நிலையில் இருக்கும் போது இந்த துர்நாற்றத்தை நாம் அதிகம் உணர முடியும். வெவ்வேறு வாசனையுள்ள பொருட்களாக இருப்பினும், அவற்றை உண்ணும் நுண்ணுயிர்கள் வெளிப்படுத்தும் துர்நாற்றம் ஒரே மாதிரி இருப்பது போல நாம் உணருகிறோம்.

வீடுகளிலுள்ள குப்பைத் தொட்டிகளில் ''பாஸ்டருல்லா பெஸ்டிஸ்'' பக்டீரியா உள்ளிட்ட நுண்ணுயிர்களே அதிகம் உருவாகிறது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வகை பக்டீரியாக்கள் குறிப்பிட்ட பிளேக் நோயைப் பரப்புவதால் அவற்றை உடனடியாக அகற்றிவிடுவது நல்லது.

## தாய்மையின் வலி



* மனித உடல் 45 யூனிட் வரை உள்ள வலியை மட்டுமே உணரும். ஆனாலும், பிரசவத்தின் போது ஒரு பெண் 57 யூனிட் வலியை உணருகிறாள்.
இது ஒரே நேரத்தில், 20 எலும்புகள் உடையும் போது உணரப்படுவதற்கு சமம்.
தாய்மைக்கு ஈடு இணை உலகில் ஏதுமில்லை
'தாய்மையை உணர்வோம், போற்றுவோம்'

## குழந்தையின் அழுகை



மனிதனின் முதல் பாஷை ''சைகை'' என்பார்கள்.
அது உண்மையில்லை. அழுகையே மனிதனின் முதல் பாஷை என்பதை குழந்தைகளைக் கவனித்தால் தெரிந்துவிடும்.
அது பேசிப்படிக்கும் வரை, தன் தேவைகளை அழுகையின் மூலமாகவே வெளிப்படுத்தும்.
சில குழந்தைகள் அழுது அடம் பிடிக்கும்போது கண்ணீரே வராது.
அது நம்மை ஏமாற்றும் போலி அழுகையாகும்.
ஆனால், பிறந்த குழந்தைகளுக்கு சில மாதங்கள் வரை அழுதாலும் கண்ணீர் வராது.
இதற்கு கண்ணீர்ச் சுரப்பி வளராததே காரணமாகும்.

Colour: Cyan Magenta Black

இவ்வினாப்பத்திரம் யாழ். வலயத்தால் தயாரிக்கப்பட்டது.

சிறுவர் மலர்ச்சி

01) முதலாவது படத்திற்குப் பொருத்தமான படத்தினைத் தெரிவு செய்க.

i)  1.  2.  3. 

ii) 

1.  2.  3. 

2) வாள் : வெட்டுதல்
துறப்பணம் : துளையிடுதல்
சீவுளி : ........

1. நிறந்தீட்டுதல் 2. சீவுதல் 3. அரிதல்

3) குயில் : கூவும்
காகம் : கரையும்
கிளி : ........

1. பச்சை 2. கத்தும் 3. மிழற்றும்

5) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான உருக்கள் தரப்பட்டுள்ளன

1) தருமி = □ △ ○
கருமி = ⇨ △ ○
அரும்பு = ⇦ △ ▯ ◖

இதில் உள்ளவற்றுக்கு ஏற்ப "கரும்பு" என்பதைப் பிரதியீடு செய்தால் வரும் உருக்கள்,

1. ⇨ △ ○ ▯ 2. ⇨ ⇦ ○ △ 3. ⇨ △ ▯ ◖

6) விசிறி ——→ S K B
தனம் ——→ T P N எனின்
'சினம்' என்பதனை குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள்
1. BPS 2. KPN 3. NTP

7) 'ஆசிரியர், நாளை பாடசாலை நடைபெறலாம்' எனக் கூறினார் எனின் கூற்றுப் பிரதிபலிப்பது,
1. பாடசாலை நடைபெறாது
2. பாடசாலை கட்டாயம் நடைபெறும்
3. பாடசாலை பெரும்பாலும் நடைபெறும்

8) இப்போது ஆண்மயில் தோகையை விரித்தாடியது. இக் கூற்றுக்கு அமைய,
1. இன்று மழை பெய்யாது
2. மழை பெய்வதற்கான அறிகுறி
3. வரட்சியாக இருக்கும்

9) 'புலி பசித்தாலும் புல் தின்னாது' என்ற கூற்றுக்குச் சரியான கருத்து,
1. புலிக்குப் பசிப்பதில்லை
2. புலிக்குப் புல் விருப்பமில்லை
3. புலி மாமிச உண்ணியாகும்

10) இயற்கை ஒளி முதல் சூரியன் போல செயற்கை ஒளி முதல் அல்லாதது,
1. மெழுகுதிரி 2. சந்திரன் 3. மின்குமிழ்

11) எமது நாட்டுக்கு உரித்தான மீன் அல்லாதது,
1. அழகிய சொர்க்கம் 2. புள்ளிக்கோட்டி 3. திருக்கை

12) A என்ற நபர் B என்ற நபர் வருவதற்கு 30 நிமிடங்கள் (N) முன்பாக விளையாட்டு மைதானத்துக்கு வருகை தந்தார். ஆனாலும் C என்ற நபர் A, B ஆகிய இருவரும் வருவதற்கு முன்பாகவே விளையாட்டு மைதானத்துக்கு வந்தார் எனின் விளையாட்டு மைதானத்துக்கு வந்த மாணவர்களின் சரியான ஒழுங்கு,
1. ABC 2. CBA 3. CAB

13) பின்வரும் மூன்று சோடிச் சொற்களும் ஏதோவொரு வகையில் தொடர்புபட்டுள்ளன. அதே போல் அடுத்து வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க

1) மயில் : அகவும்
2) வண்டு : இரையும்
3) குரங்கு : அலப்பும்
4) புலி :---------------------

1. ஊளையிடும் 2. சீறும் 3. உறுமும்

14) தேன்: இனிப்பு
உப்பு: உவர்ப்பு
மிளகு : உறைப்பு
பாக்கு : ----------------

1. உவர்ப்பு 2. புளிப்பு 3. துவர்ப்பு

15) கமலன் தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கி 500m தூரம் நடந்து பின் இடது பக்கம் திரும்பி 200m சென்று வலதுபக்கம் திரும்பி250m தூரம் சென்று பாடசாலையை அடைந்தான். கமலனது வீட்டிற்கு எத் திசையில் பாடசாலை உள்ளது?
1. வடக்கு 2. வடமேற்கு
3. வடகிழக்கு

16) கமலன் வீட்டிலிருந்து புறப்பட்டுப் பாடசாலையை அடைந்தது வரை எத்தனை தடவை இடது பக்கம் திரும்பி இருப்பான்?
1. 4 2. 2 3. 1


✱ பின்வரும் பந்தியை அவதானித்து 17ம், 18ம் வினாக்களுக்கு விடை தருக.

பிரதீபன், விஜயன், கரீன், ராஜா ஆகிய நால்வரும் பலூன் உடைத்தல் போட்டியில் பங்குபற்றினர். ராஜா கரீமை விட முதல் உடைத்த போதும் பிரதீபனுக்குப் பின்னரே உடைத்தான். எனினும் பிரதீபன் விஜயனை விட முந்தி பலூனை உடைக்க முடியவில்லை. இப் போட்டியில் பலூனை உடைத்த ஒழுங்கு முறை,

| i) | ii) | iii) |
|---|---|---|
| 1) விஜயன் | 1) ராஜா | 1) பிரதீபன் |
| 2) பிரதீபன் | 2) கரீம் | 2) ராஜா |
| 3) ராஜா | 3) பிரதீபன் | 3) கரீம் |
| 4) கரீம் | 4) விஜயன் | 4) விஜயன் |


18) இவர்களில் இறுதியாக பலூனை உடைத்தவர் யார்?
1. பிரதீபன் 2. கரீம் 3. ராஜா

19) அருகிலுள்ள படம் 4 Cm நீளமும் 2Cm அகலமும் கொண்ட சிறு துண்டுகளைக் கொண்டு ஒரு கன வுருவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இக் கனவுருவைத் தயாரிக்கத் தேவையான சிறு கனவுருக்களின் எண்ணிக்கை யாது?



1. 12　2. 27　3. 15

20) அருகிலுள்ள படத்தில் உள்ளது ஒரு தோட்டக் காணியாகும். இது 10Km நீளமும் 5Km அகலமும் கொண்டது. இக்காணியைச் சுற்றி வேலியமைப்பதற்கு 1Kmக்கு 1கற்தூண் அமைக்க வேண்டும். 2தூண்கள் அமைக்க 1பைக்கற் சீமெந்து தேவை எனின். இத் தோட்டத்திற்கு அமைக்க வேண்டிய தூண்களிற்குத் தேவையான சீமெந்துப் பைக்கற்றுக்கள் எத்தனை?







1. 8　2. 30　3. 15





21) இருபத்தோராம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் வருவது?
1. 1999　2. 2009　3. 2012

22) 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி என்ன கிழமை?
1.ஞாயிறு　2. திங்கள்　3. செவ்வாய்

23) தரம்5 இல் கற்கும் அனைத்து மாணவர்களும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றலாம்.
1. இது எப்போதும் உண்மையாகும்
2. இது எப்போதும் நிகழும் நிகழ்வாகும்
3. இது பெரும்பாலும் உண்மையாகும்

★ 24ஆம், 25ஆம் வினாக்களில் ஒரு பொருளை உயரத்திலிருந்து பார்க்கும் போது அது தோன்றும் விதம் முதலில் தரப்பட்டுள்ளது. இப்பொருளை அருகிலிருந்து பார்க்கும் போது தோன்றும் விதம் எது?

24) 
1. 
2. 
3. 

25) 
1. 
2. 
3. 

26) தடாகமொன்றிலுள்ள தாமரைப் பூக்கள் ஒவ்வொரு நாளும் முதல்நாள் இருந்த தொகையில் இருமடங்காகும். 20 நாள் தடாகம் முழுவதும் தாமரைப் பூக்களால் நிறைந்திருப்பின் தடாகத்திலுள்ள தாமரைப்பூக்களில் அரைவாசி எத்தனையாம் நாள் பூக்கும்?
1. 12ம் நாள்　2. 18ம் நாள்　3. 19ம் நாள்

27) தோட்டமொன்றில் உள்ள தென்னை மரங்களின் இரு மடங்கு பனையாகும். பனைமரங்களின் 1/2 மடங்கு மா மரங்களும் உண்டு. கொய்யாவும் மாமரங்களும் சம எண்ணிக்கையில் உள்ளன. தென்னை மரங்களின் எண்ணிக்கை 40 எனின் தோட்டத்திலுள்ள மொத்த மரங்கள் எத்தனை?
1. 200　2. 160　3. 120

28) எமது நாட்டிற்கே உரித்தான முலையூட்டி எது?
1. நாகணவாய்
2. மரநாய்
3. நீர்ப்பாம்பு

29) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட தரமான பண்டம் என்பதற்கான ஆதாரம்/ சான்றேசக் குறியீடு எது?
1. SLA　2. SLS　3. ISO

30) நுளம்புகள் பெருகுவதனால் எமக்கு ஏற்படும் நோய்களில் பொருந்தாதது
1. டெங்கு
2. மலேரியா
3. சின்னமுத்து

31) ஒரு வீட்டுக்கூரை அரிய அமைப்பில் இருப்பது போல இலங்கையின் வடிவம்,
1. பூகோளம்
2. மாங்காய்
3. மேட்டு வடிவம்

32) அழுக்குகளை அகற்றுவது காகம். மண்ணை வளம்படுத்துவது மண்புழு. வயல்களில் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை அழிப்பது?
1. ஆந்தை　2. ஆடு　3. மாடு

33) ஒரு பாடசாலையிலிருந்து கல்விச் சுற்றுலாவிற்கு 479 மாணவர்கள் தயாராகினர். அம் மாணவர்களில் 39 மாணவர்கள் திடீர் சுகயீனம் காரணமாகத் தமது பயணத்தை இடை நிறுத்தினர் எனின், சுற்றுலாவிற்குச் சென்ற மாணவர்கள் எத்தனை பேர்?
1. 479　2. 578　3. 440


34) ஒரு பேருந்தில் பயணிக்கக் கூடிய நபர்களின் எண்ணிக்கை 539 எனின் 8 பேருந்தில் பயணிக்கு நபர்களின் எண்ணிக்கை?
1. 597　2.4712　3. 4720

35) மூன்று நண்பர்கள் தமக்கு விருப்பமான பழங்களினைப் பின்வருமாறு கூறினர்.
1. கமலன் : மாம்பழம் வாழைப்பழம் விருப்பமெனக் கூறினான்.
2. கரன் : பலாப் பழத்தைத் தவிர ஏனைய எல்லாப் பழங்களும் விருப்பம் என்றான்.
3. கலீம் : மாம்பழமும் பலாப்பழமும் விருப்பமில்லை என்று கூறினான்.

கரன் விரும்பும் பழங்கள் எவை?

1. மா, பலா　2. வாழை, மா
3. பலா, வாழை

36) இவ்வுருவிலுள்ள செங்கோணங்கள் எத்தனை?



1. 8　2. 10
3. 9

37) △ + △ = 24

△ - □ = 4

எனின், அக்குறியீடுகள் குறிக்கும் எண்கள்?
1. 12, 4　2. 12, 8　3. 12, 12

38) ஒரு கொய்யாப்பழத்தினதும் ஒரு விளாம்பழத்தினதும் விலை ஒரு சோடாவின் விலைக்குச் சமனாகும்.

1டசின் சோடாவின் விலை 360ரூபா ஆகும். ஒரு கொய்யாப்பழத்தின் விலை 20 ரூபா எனின் ஒரு விளாம்பழத்தின் விலை என்ன?
1. 50　2. 15　3. 10

39) விருப்பம் என்பதன் முதல் எழுத்தும் கடகம் என்பதில் வரும் முதலிரு எழுத்துக்களும் பாட்டு என்பதன் ஒத்தகருத்தும் சேர்த்தால் வேடிக்கையாகப் பேசுபவனை இவ்வாறு அழைப்பர்.
1. புத்திசாலி
2. கெட்டிக்காரன்
3. விகடகவி.

40) " மாலையில் சிறிது நேரம் விளையாடுங்கள்" என்பது,
1. விளம்பரம்　2. அறிவுரை
3. அறிவுறுத்தல்

# வினாத்தாள் - 2

1 1/4 மணி

1). பின்வரும் பாடலை வாசியுங்கள்.

மீன்கள் கோடி கோடி சூழ வெண்ணிலாவே - ஒரு
வெள்ளி ஓடம் போல வரும் வெண்ணிலாவே
வான வெங்கதிர் குளிக்கும் வெண்ணிலாவே - நித்தம்
பாற்கடலும் ஆடுவையோ வெண்ணிலாவே

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே - நீயும்
பாரில் வர அஞ்சினையோ வெண்ணிலாவே
பளிங்கு போலும் உன்னுருவில் வெண்ணிலாவே - கறை
பற்றியே இருப்பதேனோ வெண்ணிலாவே

பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே - உந்தன்
பக்கம் வந்து சேருவேனோ வெண்ணிலாவே
பால் போல் நிலவெறிக்கும் வெண்ணிலாவே - என்றன்
பாங்கில் விளையாட வாராய் வெண்ணிலாவே

கீழேயுள்ள வினாக்களுக்குப் பாடலை வாசித்து விடையளிக்குக

1) இப் பாடலில் கவிஞர் விபரிக்கும் காட்சியை எழுதுக.
..............................................................................

2) இப் பாடலில் எழுவாயாகவும் பயனிலையாகவும் வரும் சொல் எது?
..............................................................................

3) நிலாவுக்கு உவமையாகக் குறிப்பிட்ட உவமைச் சொல் 3 தருக.
..............................................................................

4) இப் பாடலில் வரும் பெறுமதி மிக்க உலோகம் ஒன்றின் பெயர் என்ன?
..............................................................................

5) **பந்தடிப்போம்** என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.
..............................................................................

6) இப் பாடலில் உள்ள உயர்திணை, ஒருமை, முன்னிலைச் சொல் ஒன்று தருக.
..............................................................................

7) வானில் வெண்ணிலா எப்படிப் பவனிவருவதாகக் கவிஞர் விபரிக்கின்றார்?
..............................................................................

8) இதில் வரும் நிறை உணவுப்பொருள் குறிக்கும் சொல் எது?
..............................................................................

2). பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான மரபுத் தொடரினை எழுதுக
9) பொறாமை ------------------------------------------
10) வாழ்க்கையில் முன்னேறுதல் ------------------------------

3). வாக்கியத்தில் பயன்படுத்தப்பட்ட நிறுத்தற் குறியீடுகளை இனங் கண்டு அவற்றின் பெயர்களை எழுதுக.
11) போதும் புலவரே! போதும்! ------------------------------
12) கிராமங்கள் அழகானவையா? ------------------------------

4). பின்வரும் சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் பொருளை எழுதுக
13) இ.ம.வ : ------------------------
14) இ.பெ.கூ : ------------------------

5). பின்வரும் சொற்களில் உள்ள உயிர்க் குறிகளினை இனங்கண்டு அவற்றின் பெயர்களினை எழுதுக?
17) விடா முயற்சி பலன் தரும் ------------------------------
18) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் ------------------------------



6). பின்வரும் பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தை எழுதுக.
15) மீன்கள் ------------------------
16) சுவாசம் ------------------------

7). பின்வரும் சொற்களினை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக
19) செய்வதைக்/ துணிப் பொம்மைகள்/ சிவநந்தினி/ கவனித்தாள் / சுர்ந்து
20) இரு /அந்த/ நிழல்/ பக்கங்களிலும் /வீதியில்/ மரங்கள்/நின்றன

8). பின்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலப் பதத்தினைத் தருக.
21) புகையிரத நிலையம் ------------------------------
22) விளாம்பழம் ------------------------------

9). ஆங்கிலப் பதத்திற்குரிய தமிழ்ப் பதத்தினைத் தருக.
23) Marcket - ..............................................
24) Church - ..............................................

10). பின்வரும் படத்திற்குப் பொருத்தமான சிங்களச் சொற்களை எழுதுக.

25)  26)  27) 

.................... .................... ....................


11). சிங்களப் பதத்திற்குரிய தமிழ் பதத்தினைத் தருக.
28) மம பாடம் கறனவா ----------------
29) பஸ் எக்க ஆவா ------------------

12). 30) குட்டி போட்டு பாலூட்டும் விலங்குகளில் மிக வேகமாக ஓடக் கூடிய பிராணி?
1. வௌவால் 2. முயல் 3. சிறுத்தை


31) உணவாகப் பயன்படுத்தும் காய் வகை அல்லாதது,
1. வெண்டி 2. பாசிப்பயறு 3. சிறகவரை

32) அண்மைக்காலமாக இலங்கையின் வடபகுதியில் காய்ச்சலினால் அதிக உயிர்களைப் பலி கொண்ட நுளம்பானது தனது முட்டைகளை இடும் நீர் எது?
1. அசுத்த நீர் 2. சுத்தமான நீர் 3. கடல்நீர்

33) இலவசக் கல்வியின் பிதா என அழைக்கப்படும் C.W.W கன்னங்கரா அவர்கள் பிறந்த ஆண்டு, மாதம், திகதி?
1) 1624 ஒக்டோபர் 14 2. 1854 ஒக்ரோபர் 18
3) 1894 ஒக்டோபர் 18

34) அருகிலுள்ள குறியீட்டினால் காணப்படும் படத்தின் மூலம் விளங்கிக் கொள்வது?

1. வைத்தியசாலை 2. அபாயம்
3. தடைமுகாம்

35) பின்வருவனவற்றில் ஈரூடகப் பிராணிகளில் அடங்காதது,
1. ஆமை 2. கொக்கு
3. தவளை

36) அருகிலுள்ள கூட்டில் வசிக்கும் பறவையின் பெயர்

1. காகம் 2. தையற்குருவி
3. தூக்கணாங் குருவி

37) குழந்தைப் பருவத்தில் பால் குடித்து வளரும் பறவை,
1. கோழி 2. கழுகு 3. வௌவால்

38) நுகர்வோரின் நோக்கங்களில் மிகவும் சரியானது எது?
1) இலாபம் உழைத்தல்
2) தரமான பொருட்களைக் குறைவான விலையில் வாங்குதல்
3) பழுதடையாத பொருட்களைக் கூடிய விலைக்கு வாங்குதல்

39) இலங்கையின் தேசியப் பறவை எது?
1. காட்டுக்கோழி 2. தீக்கோழி 3. வான்கோழி

40) வங்கிகளில் பணத்தைத் துரித கதியில் பெற்றுக்கொள்ளும் வழிமுறை,
1. காசுக் கட்டளை மூலம் பெற்றுக்கொள்ளலாம்
2. ATM காட்டினைப் பயன்படுத்துவதன் மூலம்
3. பணம் மீளப்பெறும் படிவத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்

41) அண்மைக்காலத்தில் அதிக உயிர்ச்சேதங்களையும் உடைமை யழிவுகளையும் ஏற்படுத்திய இயற்கை அனர்த்தம் நிகழ்ந்த

ஆண்டு?
1. 1984 2. 2004 3. 2006

42) இலங்கையில் அண்மைக்காலத்தில் பிரிக்கப்பட்ட மாகாணங்கள் இரண்டும் எவை?
1. மத்திய, மேல் மாகாணம்
2. வடக்கு, கிழக்கு மாகாணம்
3. மத்திய, சப்பிரகமுவா மாகாணம்


43) நீருடன் கலக்கும் திரவம் எது?
1. ஆமணக்கு எண்ணெய் 2. பெற்றோல் 3. வினாகிரி

44) மாவட்டத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்?
1. கிராமசேவகர் 2. அரச அதிபர்
3. உதவி அரசாங்க அதிபர்

45) இலங்கையின் தேசியக் கொடியில் பச்சை நிறக்கீலத்தைப் பிரதி பலிக்கும் மக்கள் பின்பற்றும் மதம்?
1. இந்து 2. இஸ்லாம் 3. பௌத்தம்

46) அண்மைக்காலத்தில் வெளியிடப்பட்ட ஆயிரம் ரூபா தாள் காசில் பொறிக்கப்பட்ட தலைவரின் பெயர்?
1. ரணில்விக்கிரமசிங்க
2. மகிந்த ராஜபக்ஷ
3. சந்திரிகா குமாரதுங்க

47) அலங்கார வேலைகளுக்குப் பயன்படும் இலையின் ஓரங்களைத் தைக்க உதவுவது?
1. கம்பளித் தையல் 2. சிறிய நூலோடல்
3. நரம்புத் தையல்





48) மேலேயுள்ள மீற்றர் கோல்களிற்கேற்ப விடையெழுதுக.
1. பென்சிலின் நீளம் எவ்வளவு? (................)
2. பென்சிலும், அழிறப்பரும் சேர்ந்த மொத்த நீளம் எவ்வளவு? (......................)

49) ஒரு நோயாளிக்கு ஒரு நாளுக்கு மூன்று மாத்திரைகள் உட்கொள்ளும் படி அறிவுறுத்தி 96 மாத்திரைகள் வழங்கப்பட்டன எனின், எத்தனை நாட்களுக்குப் போதுமான மாத்திரைகள் வழங்கப்பட்டன? (.........................)

50) சென்னை விமான நிலையத்திலிருந்து மு.ப 11.15க்குப் புறப்பட்ட விமானமொன்று ஒரு மணித்தியாலம் 50 நிமிடங்கள் பயணித்த பின் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியது. விமானம் வந்து இறங்கிய நேரம் யாது? (.........................)

51) அருகில் தரப்பட்டுள்ள உருவிற்குச் சமச்சீர் அச்சுக்களை வரையுங்கள்.




52) அருகிலுள்ள உருக்களைக் கொண்டு உருவாக்கக் கூடிய திண்ம உரு யாது? (.........................)



53) 31 070 என்பதனை எண் பெயரில் எழுதுங்கள். (.........................)

54) 4 m நீளமுள்ள பேப்பர் றியளிலிருந்து 20 cm நீளமுடைய எத்தனை தண்டுகள் வெட்டி எடுக்கலாம்? (.........................)

55) கடிகார முகத்தில் தோன்றும் நேரம் பிற்பகலைக் குறிக்கிறது எனின், இந் நேரத்தை நியம நேரத்தில் எழுதுங்கள்?




(.........................)

56) கபிலன் ரூபா 1000.00 பணத்தை வைத்துள்ளான். அதில் ரூபா 75.00 தம்பிக்குக் கொடுத்தான். இருவரிடமுள்ள பணத்தொகை சமமாகும் எனின், ஆரம்பத்தில் தம்பியிடம் உள்ள பணத்தொகை எவ்வளவு? (.........................)

57) பாடசாலை ஒன்றில் உள்ள மாணவர்கள் விரும்பும் விளையாட்டுக்கள் தொடர்பான தகவல்களினைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| விளையாட்டுக்கள் | ஆண் | பெண் |
|---|---|---|
| வலைப்பந்து | 20 | 26 |
| காற்பந்து | 15 | 10 |
| கூடைப்பந்து | 10 | 04 |
| கிரிக்கற் | 20 | 20 |
| எல்லே | 15 | -- |

1) பாடசாலையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது? (.........................)
2) அதிக மாணவர்கள் விரும்பும் விளையாட்டிற்கும் குறைந்தளவு மாணவர்கள் விரும்பும் விளையாட்டிற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? (.........................)
3) ஆண் மாணவர்கள் விரும்பும் விளையாட்டினை நிரல் வரையில் குறித்துக் காட்டுக. (.........................)




58) ஒரு மோட்டார் சைக்கிள் ஒரு நகரத்திலிருந்து இன்னொரு நகரத்திற்குச் சென்ற தூரம் கதிமானியில் பின்வருமாறு இருந்தது.

| 0 | 7 | 9 | 9 | 9 | Km |

மோட்டார் சைக்கிள் இன்னும் 1Km தூரம் சென்ற பின்னர் கதிமானியில் காணப்படும் வாசிப்பைக் கட்டங்களில் எழுதுக.

| | | | | | Km |

59) வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு முதல் பேருந்து காலை 5.05 N புறப்படும். அடுத்த பேருந்து 55 N களின் பின்பு புறப்படும் எனின், அடுத்த பேருந்து புறப்படும் நேரம் யாது? (.........................)

60) பின்வரும் தொடரை வாசித்து கருத்துச் சிதைவின்றி நான்கு சொற்களுக்குக் குறையாமல் ஆறு வாக்கியங்களினை எதிர்காலத்தில் எழுதுக.
மாணவர்கள் வகுப்பறையில் சுற்றாடற் பாடம் கற்றுக் கொண்டிருந்தனர். அப்பொழுது கணினிப் பாடத்திற்கான மூன்றாம் பாட மணியொலித்தது. எனவே, மாணவர்கள் கணினி அறையை நோக்கி விரைந்தனர். அங்கு ஆசிரியர் இல்லாத காரணத்தால் ஒழுமாற்றாக கணினியின் முன்னிருந்த நாற்காலியில் அமர்ந்தனர்.

1). ..........................................................................................
2). ..........................................................................................
3). ..........................................................................................
4). ..........................................................................................
5). ..........................................................................................
6). ..........................................................................................



# என்னாச்சி...!

கடந்த வாரம் என்னுடைய தோழி வியர்க்க விறுவிறுக்க காலையில் பேக்கரியில் இருந்து வருவதை கண்டேன்.

ஏன் இவ்வளவு காலையில் இங்கு வந்தாய் என்றேன். மகனை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் அவனுக்கு காலை சாப்பாட்டிற்காக பாண் வாங்கிக் கொண்டு செல்கிறேன் என்றாள்.

வீட்டில் இருந்து இவ்வளவு தூரம் வருகிறாயே பக்கத்தில் கடையேதும் இல்லையா? என்றபோது, அவள் சொன்னாள்

கடை இருக்கிறது. முன்பெல்லாம் நான் அங்குதான் பாண் வாங்குவேன். ஆனால், கடந்த இரண்டு வாரமாக நான் அங்கு பாண் வாங்குவதில்லை. கடைக்கு புதிய பையனை வேலைக்கு எடுத்திருக்கிறார்கள். அவன் சகோதர மொழியைச் சேர்ந்தவன். அவன் பாணை கையில் எடுத்து அதை போடுவதற்காக பொலித்தீன் பையை கையால் விரிப்பதற்கு பதிலாக வாயால் ஊதிவிட்டு பின்னர்தான் பாணை போட்டுத் தருகிறான். இந்த விடயம் எனக்கு பிடிக்கவில்லை. மேலும் இது தப்பு என்று அவனுக்கு புரியவைக்கவும் முடியவில்லை. ஏன் என்றால் எனக்கு சிங்களம் தெரியாது.

அதனால்தான் இவ்வளவு காலையில் பேக்கரிக்கு வந்து அலைந்து திரிகிறேன் என்று நொந்துகொண்டாள்.

கடையில் வேலை செய்யும் அந்த பையன் மட்டுமல்ல அநேகமானோர் தங்கள் வீடுகளிலும் இப்படித்தான் செய்கிறார்கள். வாயில் எத்தனை அசுத்தமான கிருமிகள் உள்ளன. வாயால் பொலித்தீனை ஊதிவிட்டு அதற்குள் சாப்பிடும் பொருட்களை போட்டால் எப்படி?

அத்தோடு, வீடுகளிலும் கறி சமைத்துவிட்டு உப்பு பார்ப்பதற்காக கரண்டியில் சிறிது கறியை எடுத்து சூடு ஆறுவதற்காக வாயால் ஊதிவிட்டு அடுத்தவருக்கு ருசிப்பார்க்க கொடுப்பதும் கூட தவறான விடயம். இனியாவது இப்படியான சுகாதாரமில்லாத செயல்கள் செய்வதை தவிர்த்துக்கொள்வது நல்லதுதானே.

நான் ஒரு அச்சகத்தில் மேற்பார்வையாளராக வேலை செய்கிறேன். இந்த அச்சகத்தில் மொத்தம் 12 பேர் வேலை செய்கிறார்கள். அதில் ஒருவர் ஆறுமுகம். கடந்த வாரம் ஆறுமுகத்தை தேடி உயர்தரம் படிக்கும் அவனது மகன் வந்திருந்தான். நான்தான் அவனை ஆறுமுகத்திடம் அழைத்துச் சென்றேன்.

ஆறுமுகம் அவனது மகனின் கையில் 5000 ரூபா பணத்தைக் கொடுத்ததை நான் கண்டேன். பின்னர் அந்தப் பையன் சென்றதும், ஆறுமுகத்திடம் சென்று 'படிக்கும் பையனை இந்த இடத்துக்கெல்லாம் அழைத்து பணம்கொடுப்பது சரியல்ல. நேற்றுதான் சம்பளம் வாங்கினாயே வீட்டிலேயே கொடுத்துவிட்டு வந்திருக்கலாமே?' என்றேன்.



அதற்கு ஆறுமும் சொன்ன பதில் வியக்கவும் சிந்திக்கவும் வைத்தது.

சேர் பணம் இருக்கு. என்னுடைய மகன் நண்பர்களோடு நுவரெலியாவுக்கு சுற்றுலா போகிறானாம். அதற்காக நேற்று பணம் கேட்டான்.

நான் இன்றுதான் சம்பளம் வாங்குவேன். அதனால் பிரஸுக்கு வந்து வாங்கிக்கோ என்றேன்.

காரணம் நான் எப்படி கஷ்டப்பட்டு வேலை செய்கிறேன் என்பதை அவன் உணரவேண்டும். தன்னுடைய அப்பா காற்றுக்கூட புகமுடியாத இந்த அறையில் வியர்த்து விறுவிறுத்து மெஸினில் வேலை செய்கிறார். கொஞ்சம் கவனம் சிதைந்தாலும் மெஸின் கையை துண்டாக்கிவிடும். இத்தனை ஆபத்தான நிலையில் சம்பாதிக்கும் பணத்தை அவன் வீண் செலவு செய்யும் போது என்னுடைய உழைப்பும் நான் படும் கஷ்டமும் அவன் நினைவுக்கு வரும். அதனால் வீண் விரயம் செய்யமாட்டான் என்பதற்காக இங்கு வரவழைத்து பணம் கொடுத்தேன் என்றார் ஆறுமுகம்.

ஆம் அவர் சொன்னதில் எத்தனை உண்மை இருக்கிறது என்று பிறகு எனக்கு புரிந்தது. மகன் கேட்டதும் பணத்தை தரமுடியாது என்றால் அவனுக்கு ஆறுமுகத்தின் மீது கோபம் வரும். ஆனால், ஆறுமுகமோ தன் நிலையை மகனுக்கு உணர்த்தியுள்ளார்.

பெற்றோர்கள் தன் பிள்ளைகள் தாங்கள் பட்ட கஷ்டம் தெரியாமல் வளரவேண்டும் என்று சொல்வார்கள். இல்லை, நீங்கள் என்ன கஷ்டப்படுகிறீர்கள் என்று தெரிந்தால்தான் உங்களின் அருமை அவர்களுக்கு புரியும்.

அண்மையில் நானும் அம்மாவும் கோவிலுக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு வரும் வழியில் வீட்டுக்கு தேவையான சாமான்களை வாங்கிக்கொண்டு அங்கிருந்து ஒரு ஆட்டோவில் ஏறினோம்.

ஆட்டோவில் வந்து கொண்டிருக்கும்போது ஒரு தொலைபேசி அழைப்பு வர நானும் கதைத்துக் கொண்டே வந்தேன். பின்னர் எங்களுடைய ஒழுங்கை வந்தது. சாமான்களை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். வீட்டுக்கு வந்து சில மணித்தியாலத்தின் பின்தான் நினைவுக்கு வந்தது ஆட்டோவில் பின்னால் என்னுடைய கைபையை வைத்தது. தொலைபேசியில் கதைத்துக் கொண்டே சாமான்களை இறக்கியதால் அதை தவறவிட்டுவிட்டேன்.



இனி என்ன செய்ய? போனது போனதுதான். அதில் கொஞ்சம் பணம், அலுவலகக் கடிதம், பாஸ்போர்ட், என்னுடைய அடையாள அட்டை, டயறி என்பன இருந்தன.


இந்தச் சம்பவம் நடந்த மறுநாள் காலையில் எனது வீட்டுக்கு அந்த ஆட்டோக்காரன் தேடிவந்து நான் தவறவிட்ட கைப்பையை கொடுத்தான்.

நான் அதிர்ந்து போனேன் பிளட்ஸில் உள்ள எனது வீடு எப்படி உங்களுக்கு தெரியும் என்றபோது, அதற்கு அந்த ஆட்டோகாரன் உங்களுடைய டயறியில் வீட்டு விலாசம், பெயர் என்பன இருந்தன. அதனால்தான் என்னால் திருப்பிக்கொடுக்க முடிந்தது என்றார்.

உண்மைதான் சில ஆட்டோகாரர்கள் கிடைத்தவரைக்கும் இலாபம் என்று இருந்து விடுவார்கள். ஆனால், அப்படி எல்லோரும் இருப்பதில்லையே. நம்முடைய அதிர்ஷ்டம் திரும்பக்கிடைக்கலாம் அல்லவா? அதனால் தங்களின் கைப்பையில் கைபேசி இலக்கம் அல்லது விலாசம் எழுதி வைப்பது நல்லதுதானே?

தகவல் தொகுப்பு ஆர்.அபி

# ஆ.....பத்தான அழகு!



கிளியோபாட்ராவின் காலம் கி.மு. 69 இல் இருந்து 30 வரை என்று வரலாற்றுப் புத்தகங்கள் சொல்லுகின்றன. எகிப்தை ஆண்ட பன்னிரெண்டாம் டொலமி என்கிற மன்னனுக்கும் இஸிஸ் என்கிற அவனது ஒரு அரசிக்கும் பிறந்தவள் கிளியோபாட்ரா.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த கிளியோபாட்ராவுக்கு முன்னால் ஏழு கிளியோபாட்ராக்கள் இருந்திருக்கிறார்கள். முந்தைய ஏழு பேர் பெறாத பேரையும், புகழையும் இவள் எப்படிப் பெற்றாள் என்றால் அதற்கு இரண்டு காரணங்கள்:

முதலாவது இவளது புத்திசாலித்தனம். அடுத்த காரணம் அழகு.

வெறும் முப்பத்தொன்பது வயது வரைக்கும்தான் அவள் வாழ்ந்திருக்கிறாள். மிகச் சிறிய வயதிலேயே அரசியானவள் என்றாலும், ராஜாங்கக் காரியங்கள் தவிர பல்வேறு துறைகளில் அவளுக்குப் பெரிய ஆர்வங்கள் இருந்திருக்கின்றன.

அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பது, அவற்றின் இரசாயன மருத்துவ குணங்களை ஆராய்வது போன்றவற்றில் அவளுக்கு அபாரமான திறமை உண்டு. தன் வாழ்நாளில் அவளே ஏழு விதமான செண்ட்களை கண்டுபிடித்ததாகவும் சொல்லுகிறார்கள்.

இது போதாதென்று ஒன்பது மொழிகளில் எழுத, பேச, படிக்கவும் தெரியும். கிளியோபாட்ராவின் தந்தையான டொலமிக்கு வயதானதும் தன் மகளைப் பட்டத்தில் அமர்த்த விரும்பியிருக்கிறார். அந்தக் காலத்தில் எகிப்தில் ஒரு பெண் தனியாக ஆட்சி செய்வது முடியாது. இதில் இன்னொரு விடயமும் உண்டு. பெண் தனியாக ஆள முடியாது என்பது மட்டுமல்ல, அப்போது தம்பியுடன் சேர்ந்தும் ஆளமுடியாது!

ஒரு வழி யாரையாவது கல்யாணம் பண்ணிக்கொண்டு கணவன் மனைவியாக வேண்டுமானால் ஆட்சி செய்யலாம். ஆகவே, கிளியோபாட்ரா தன் 10 வயதுத் தம்பியான அந்த டொலமியையே திருமணம் செய்துகொண்டு எகிப்தின் ஆட்சிப் பீடத்தில் உட்கார்ந்து விட்டாள். ஆக பதினெட்டு வயது ராணி பத்து வயது ராஜா ஆட்சியெல்லாம் நான்றாகத்தான் நடந்தது.

ஆனால், அந்தச் சிறிய பையன் மனதைச் சிலபேர் கெடுத்துவிட்டார்கள். நீ உன் அக்காவைத் துரத்தியடி. முழு தேசமும் உன் கைக்கு வந்துவிடும். அவள் அதிகாரம் செய்ய நீ சும்மா இருப்பதில் என்ன பெருமை இருக்கிறது? என்று தூண்டி விட்டார்கள்.

ஆகவே, டொலமி தன் முன்னாள் அக்கா, இன்னாள் மனைவி என்றும் பாராமல் கிளியோபாட்ராவுக்கு எதிராக ஒரு புரட்சியைத் தூண்டிவிட்டு அவள் உயிருக்கு உலை வைத்தான். தப்பிப் பிழைக்க விரும்பிய கிளியோபாட்ரா சிரியாவுக்குத் தப்பியோடினாள்.

இந்தச் சமயத்தில்தான் (கி. மு. 48) ஜூலியர் சீசர் எகிப்துக்கு வருகிறார். மாபெரும் ரோமானிய வீரர். சீசரை சுசக்குமா சீசருக்கு? இயல்பிலேயே மாவீரர் அல்லவா? இதோ ஒரே நாளில் எகிப்து ஆட்சியை உன்னுடையதாக்கி விடுகிறேன் பார் என்று போர் அறிவிப்பு வெளியிட்டுவிட்டார்.

யுத்தத்தில் அந்த டொலமி தோற்கடிக்கப்பட்டு கிளியோபாட்ரா மீண்டும் எகிப்து ராணியானாள்.

மீண்டும் எகிப்தின் மணி முடியைப் பெற்ற கிளியோபாட்ரா தொடர்ந்து சீசருடன் வாழ்ந்தாள். ஒரு ஆண் குழந்தையையும் பெற்றெடுத்தாள்.

அந்தக் குழந்தை சுகப்பிரசவமாக அல்லாமல் கிளியோபாட்ராவின் வயிற்றைக் கீறி சீசராலேயே வெளியே எடுக்கப்பட்டது. முதல் முதலில் சத்திரசிகிச்சை மூலம் பிறந்த குழந்தை அதுதான் என்பதாலும், அதைச் செய்தது சீசர் என்பதாலும்தான் இன்றைக்கு வரை மருத்துவத்துறை சத்திரசிகிச்சை மூலம் பிரசவம் பார்ப்பதை சிசேரியன் என்று அழைக்கிறது (?)

### கிளியோபாட்ராவின் மரணம்

சீசரை ஏற்காத எகிப்து இராஜதந்திரிகள் திட்டமிட்டு சீசரை நயவஞ்சகமாக கொன்றனர். அதன்பின் ரோமில் சீசரின் வாரிசுகளுக்கும், தளபதிகளுக்கும் பதவி சண்டை நிகழ்ந்தது. கணவர் துணையின்றி இருந்த கிளியோபாட்ரா சீசரின் படைத்தளபதியான ஆண்டனி என்பவரை சந்தித்தாள். அவர் கிளியோபாட்ராவின் அழகில் மயங்கி திருமணம் செய்துகொண்டார். ஆண்டனியின் வாரிசுகளாக மூன்று குழந்தைகளை கிளியோபாட்ரா பெற்றெடுத்தாள்.

இந்நிலையில் சீசரின் வாரிசான ஆக்டோவியஸ் சீசர் கிளியோபாட்ராவை எதிர்த்தார். எகிப்தின் ஆட்சிக்காக வைத்து எப்படியாவது எகிப்து ஆட்சி பீடத்தை பிடித்துவிட வேண்டும் என்று முடிவு செய்த கிளியோபாட்ரா சீசரை தன் வலையில் வீழ்த்தினாள். காதலை விலையாக்கினாள்.

ஆண்டனியுடன் ஆக்டோவியஸ் சண்டை மூண்டது. இதில் ஆண்டனி கொல்லப்பட்டார்.

ஆண்டனியின் மரணத்தை ஏற்றுக்கொள்ள இயலாத கிளியோபாட்ரா தன்னை மகாராணி போல அலங்கரித்துக் கொண்டு விஷப்பாம்புகளை தீண்டும் படி செய்து உயிர் துறந்தாள். கிளியோபாட்ரா பண்டைய எகிப்தில் வழக்கத்திலிருந்த கொடிய தாவர விஷத்தினை அருந்தியே இறந்தார் என்றும் சிலர் சொல்கிறார்கள்.

அழகு ஆபத்து என்ற பழமொழி உண்டு. உலகிலேயே மாபெரும் அழகியாக கருதப்பட்ட கிளியோபாட்ரா இறந்தபின்னும் அவள் அழகு அவளுக்கு பேராபத்தாக அமைந்தது.

இறந்த பிறகு அவரின் சடல உடல் மூன்று நாட்கள் வைத்து பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டது. அதுவும் ஒருவரால் மட்டும் அல்ல, நாட்டின் பல்வேறு பகுதியில் இருந்து இதற்காக புறப்பட்டு வந்தார்கள் என்றும் சில குறிப்புகள் கூறுகின்றன.

-ரிஷி-

## ஆஹா அப்படியா?

உலகில் கோடானுகோடி பேர் தோன்றி மறைந்தாலும் சரித்திரம் மிகச்சிலரை மட்டுமே ஞாபகம் வைத்திருக்கிறது. தியாகம், வீரம், சாதனை, முயற்சி என அவர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் அவர்களை சரித்திரத்தில் இடம்பிடிக்க வைத்திருக்கிறது.
சரித்திரத்தில் இடம்பிடித்த நாயகர்களின், நாயகிகளின் வாழ்க்கையில் பொதிந்த சுவாரஸ்யமான, அதிர்ச்சியான, ஆச்சரியமான சோகமான சம்பவங்களின் தொடர் இது!

# எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் நவநீதம்பிள்ளையின் அறிக்கை!



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வந்து விசாரணைகளை ஆரம்பித்துவிட்டார். விமர்சிக்க வரவில்லை, மனித உரிமைகள் மற்றும் காணாமற் போனவர்கள் பற்றிய விபரங்களைச் சேகரிக்கவே வந்துள்ளேன். வடக்கிலிருந்து கிழக்கு வரையான இடங்களுக்கு நேரில் சென்று விபரங்களைச் சேகரிக்கும் பணியில் நவநீதம்பிள்ளை வந்த தினத்திலிருந்து மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

நவநீதம்பிள்ளையின் வருகையை அறிந்ததும் இலங்கை அரசாங்கம் இரண்டு முக்கிய நடவடிக்கைகளை எடுத்தது. ஒன்று காணாமற் போனவர்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்க மூவர் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இரண்டாவது சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைக் கவனிப்பதற்கென தனியான அமைச்சு ஒன்றை நியமித்தமை. இவ்விரண்டும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லெண்ண ஆணைக்குழுவில் கூறப்பட்ட முக்கிய சிபாரிசுகளாகும்.

இப் பின்னணியில், ஐரோப்பாவில் உள்ள புலம்பெயர் இலங்கைத் தமிழர் அமைப்புகள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிபிள்ளைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். இலங்கையில் தங்கியிருக்கும்போது தமிழ் மக்களின் நலன்களை பாதிக்கும் பல பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துமாறு அப்பகிரங்க கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பகிரங்கக் கடிதத்தை உள்ளூரில் சில அமைப்புகள் கண்டித்தன. ஆனால், அப்பகிரங்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விஷயங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லெண்ண ஆணைக்குழுவின் அறிக்கையும் நேரடியாக தொடர்புபடுத்தப்பட்டிருந்தன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அப்பகிரங்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆகஸ்ட் 25 - 31 வரை இலங்கையில் தங்கியிருக்கும் நீங்கள் இராணுவ மயமாக்கல், அத்துமீறிய குடியேற்றங்கள், தமிழ்ப்பெண் கைதிகள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகள் பற்றி விசாரணை நடத்தவேண்டும். இம் மூன்று விஷயங்கள் இன்று அங்கு சமாதானத்துக்கும், நீதித்துறைக்கும் அச்சுறுத்தலாக உள்ளன. சமத்துவமின்மை மற்றும் கசப்புணர்வுக்கு இவையே வித்திடுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 85 ஆயிரம் முதல் 86 ஆயிரம் வரை இராணுவத் துருப்புகள் இருப்பது சமாதானத்துக்கு முரணானதாகும். தமிழ்ச் சமூகம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளது என்பதைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. தரை நிலைவரப்படி, பாடசாலை முதல் பொதுக் கூட்டங்கள் வரை படையினரின் கட்டுப்பாடு உள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்கியது மற்றும் மனிதாபிமான அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் இராணுவத்தினர் கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களை இராணுவத்தினர் கைப்பற்றுவதுடன், அக்காணிகளில் தென்பகுதியிலிருந்து சிங்கள மக்களைக் கொண்டுவந்து குடியேற்றியும் வருகின்றனர். வடக்கில் யாழ் குடாநாட்டில் இருந்து கிழக்கில் திருகோணமலை துறைமுகம் - பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களான தமிழ் மக்களின் தாயகம் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

இப்பின்னணியில் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விவகாரம் இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். நவநீதம்பிள்ளை எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை பேரவையின் 24 ஆவது அமர்வில் இலங்கையில் தாம் சேகரித்த விபரங்களை வாய்மொழி அறிக்கையாக வெளியிடுவார். எழுத்து மூல அறிக்கையை 2014 மார்ச்சில் நடைபெறும் 25 ஆவது அமர்வில் சமர்ப்பிப்பார்.

இதேவேளை இலங்கை தொடர்பான நிலைப்பாடு குறித்து முக்கிய பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த அமெரிக்காவும், இந்தியாவும் தயாராகி வருகின்றன. கடந்த வாரம் இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் அமெரிக்கா சென்று அங்கிருக்கும் ராஜாங்க அமைச்சின் ஆலோசகர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளார். இந்து மகாசமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பது, இலங்கையின் செயற்பாடு, இந்தியாவின் பாதுகாப்பு நலன்கள் தொடர்பாக அமெரிக்கா - இந்தியத் தலைவர்களுக்கு இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்துள்ளன. அவற்றின் உச்சக்கட்டமாக அமெரிக்காவின் ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இடையே வாஷிங்டனில் எதிர்வரும் செப்டெம்பர் 27 ஆம் திகதி முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெறவிருக்கிறது. இந்தியாவை சுற்றிவளைக்கும் சீனாவின் 'முத்துமாலை' நடவடிக்கை இப்பேச்சுவார்த்தையில் முக்கிய இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மத்தியில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை சர்வதேச சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. நவிபிள்ளையின் இலங்கை தொடர்பான ஐந்துநாள் விஜயம் குறித்து அறிக்கையை ஐக்கியநாடுகள் பொதுச் செயலாளர் பான் கி மூன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றார்.

போர்க் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புக்கூறவேண்டும் அல்லது அதுபற்றி சர்வதேச நீதிமன்ற விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக நவிபிள்ளையின் இலங்கை தொடர்பான அறிக்கை அமையுமா?

அநாமிகன்



# ஆமியில் சேர்ந்தா 35,000 ரூபாய் தாறன் என்று சொன்னாங்க!

## இராணுவத்தில் இணையும் தமிழ்ப் பெண்களின் நிலை!

தமிழ் மக்கள் வாழுகின்ற வட-கிழக்குப் பகுதியிலிருந்து இராணுவத்தை முழுமையாக அகற்றி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என ஒரு சாராரும் வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் யுத்தம் முடிவடைந்து விட்டது. இதனால் இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்க வேண்டும் என மற்றொரு சாராரும் கூறி வரும் நிலையில், தமிழ் யுவதிகள் இராணுவ தரைப்படையில் இணைக்கப்படுகின்ற சம்பவங்கள் அவ்வப்போது வட பகுதியில் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சியில் தமிழ் யுவதிகள் இராணுவத்தில் இணைத்துக் கொண்டமையையும், அவர்களில் சிலருக்கு இராணுவத்தில் இணைந்த பின் உடல்நல பாதிப்பு ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமையையும் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு விதமாக விமர்சனத்திற்கு உள்ளாக்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஏற்பட்ட விமர்சனங்களுக்குரிய காரணகாரியங்களை தமிழ் மக்கள் தெளிவாக புரிந்துகொள்ள முன்னர், வவுனியாவின் வன்னிப் படை தலைமையகத்தில் கடந்த 26 ஆம் திகதி 45 தமிழ் யுவதிகள் இலங்கை இராணுவத்தின் தரைப் படையில் இணைக்கப்பட்டிருந்தனர். பெரு விழாவாக இந் நிகழ்வு இடம்பெற்ற நிலையில் அது தொடர்பான விமர்சனங்கள் மீண்டும் எழுந்துள்ளன.

இராணுவம் என்பது ஒரு நாட்டினுடைய தேசியப்படையாகும். அது நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுக்கின்ற ஒரு கட்டமைப்பாகும். இவ்வாறு இருக்கின்ற நிலையில் இலங்கை இராணுவத்தில் தமிழ் யுவதிகள் இணைந்தால் தமிழ் மக்கள் ஏன் அதனை முழு மனத்துடன் ஏற்றுக் கொள்கிறார்கள் இல்லை என்பதை தெளிவாக அறிய வேண்டிய தேவையுள்ளது.

நாட்டின் தேசியப் படையாகிய இலங்கை இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டபோது புலிகளுக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கு எதிராகவும் செயற்பட்டிருந்ததாக குற்றச்சாட்டு உள்ளது.

தமிழ் மக்களை கைது செய்தல், மிரட்டுதல், தடுத்து வைத்தல், கொலைசெய்தல் போன்ற பல செயற்பாடுகளை யுத்த காலத்தில் செய்திருந்ததாக கூறப்படுகிறது. இதனால் தமிழ் மக்கள் இந்த இராணுவத்தை தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு இன அழிப்பு படையாகவே பார்த்திருந்தனர்.

இது ஒரு புறமிருக்க யுத்தம் முடிவடைந்த பின்னர் கூட தமிழ் மக்களது காணிகளை அபகரித்தல், தமிழ் மக்களது அரசியல் போராட்டங்களை மிரட்டி குழப்புதல் போன்ற செயற்பாடுகளை இராணுவம் செய்து வருவதாக தமிழ் மக்கள் பிரதிநிதிகள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவர்கள் இலங்கை இராணுவம் மீது விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்து வருவதுடன் இராணுவம் தொடர்பான ஒரு பயப்பீதியுடனேயே வாழ்கின்றனர். இவ்வாறு இராணுவம் தொடர்பாக விமர்சிப்பவர்கள் பல காரணங்களை அடுக்குகின்ற போதும் சிலர் இராணுவத்தில் தம்மை இணைத்தும் வருகின்றனர். ஏன் இவ்வாறு இணைகின்றார்கள் என சிந்தித்து பார்க்கவேண்டிய தேவையுள்ளது.

இது தொடர்பாக இராணுவத்தில் புதிதாக இணைந்த மன்னாரைச் சேர்ந்த யுவதியொருவர் கூறுகையில்:-

நான் மன்னாரில் ஒரு கடையில வேலை செய்தன். 5000 ரூபாய் சம்பளம் தந்தாங்க. அப்பாவுக்கும் ஏலாது. நான் தான் குடும்பத்தை பார்க்கணும். கிடைக்கிற ஐயாயிரத்தை வைத்து என்ட தேவையையே பூர்த்தி செய்ய முடியாது. பிறகு எப்படி குடும்பத்தைப் பார்க்க முடியும்? ஆமியில சேர்ந்தா 35,000 ரூபாய் சம்பளம் தாறம் என்று சொன் னாங்க. வீடு இல்லாட்டி வீட்டு வசதி தாறதாகவும் வீட்டில இருந்து வேலைக்கு போகலாம் எனவும் சொல்லியிருக்கிறாங்க. அதனால் நல்ல வேலை என்று ஆமியில சேர்ந்திட்டன் என்றார்.

குடும்ப வறுமை காரணமாகவும் தானும் தனது குடும்பத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடனும் எத்தனையோ பெண்கள் வேலை வாய்ப்புக்காக எத்தனை படிகளை ஏறி இறங்கியும் அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக் கவில்லை.

அரச வேலை தான் கிடைக்கவில்லை என்று தனியார் துறைகளில் வேலைக்கு சேர்ந்தால் அங்கும் சரியான சம்பளம் கிடைப்பதில்லை. இதனால் ஏற்பட்ட விரக்தியே தமிழ் பெண்கள் இராணுவ வேலை என்றாலும் போவோம் என கருதி போகிறார்கள் என சிலர் கூறுகின்றனர்.

இது தொடர்பில் தனது பிள்ளையை இராணுவத்தில் இணைத்த தாய் ஒருவர் இப்படி கூறுகிறார்.

இப்ப அரசாங்க வேலைக்கு தான் மவுசு. என்ர பிள்ளை தான் எங்கள பார்க்கனும். அவள் ஓ.எல் வரை தான் படிச்சிருக்கிறாள். இந்த படிப்புக்கு நல்ல சம்பளத்தோட இராணுவ வேலை தாறன் என்றாங்க. பிள்ளையும் போக விரும்பினாள் என்றார்.

இனி என்ட பிள்ளை என் குடும்பத்தை பார்ப்பாள் என்ற எதிர்பார்ப்புக்களுடன் தனது பிள்ளையை அனுப்பிய தாயின் குரல் அது.

இவ்வாறு வருமானத்திற்காகவே பெண்கள் இராணுவத்தில் இணைகின்றார்கள். இன்றைய நிலையில் இராணுவத்தில் இணையும் பெண்களுக்கு சமூக மட்டத்தில் பெரியளவில் அந்தஸ்து வழங்கப்படுவதில்லை. அவர்களை திருமணம் செய்வதற்கு கூட தமிழ் இளைஞர்கள் விரும்பாது பின்வாங்குகின்ற நிலைமைகளை நாம் காண்கின்றோம்.

ஆனால் தமிழ் மக்களது முழுமையான ஆதரவைப் பெறாத இந்த இராணுவத்தில் இணையும் பெண்களின் எதிர்காலம் என்பது எவ்வாறு அமையும் என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

-தே.வாசு-

Colour: Cyan Magenta Black

# கவிதைகள்

## மண்டேலா எனும் மாமனிதன்!



கறுப்பினத்தின்
கண்ணீர் துடைக்க
காலமெல்லாம்
கைக் குட்டையான
கறுப்பு சூரியனே
வெள்ளை நிற வெறியை!
வேரறுத்தவரே!
மண்டேலா!
இரண்டாம் காந்தியாக
இப்புவியில் வாழும்
வணக்கத்துக்குறியவரே!
வாழ்வதை விட
வாழ்வோரின் மனதில்
கல்வெட்டாய்
நிலையானவரே!
மண்டேலா!
பிடல் காஸ்ரோவையும்
காந்தமாய்!
கவர்ந்திழுத்தீர்
ஏன்?
ஒபாமாவின்
இதயத்தையும்
ஈர்த்தெடுத்தீர்
கால் நூற்றாண்டு
விடியலைக் காணாது
விடியலுக்காய் போராடி
வெற்றிச் சூரியனை
விழிகளுக்குள்
விழவைத்த
போற்றுதற்குறிய
பொறுமையாளனே மண்டேலா!
நேர்மையின்
மறு வடிவம்
மண்டேலா
நெருப்பு சூரியனை!
இரக்க மழையால்
அணைத்து விட்ட
அதிசயமே மண்டேலா!
மனிதர்கள் இப்புவியில்
மாறி மாறி
பிறக்கலாம்
மண்டேலாக்கள்
பிறப்பது
அரிதிலும் அரிதே!

பா.ரிசாந்தன் ஹெராப்டன்.

## தளபதிக்கோர் மடல்



தோழர்களை
இழந்து விட்டு
தோலுக்குத் துணையின்றி
நிற்கின்றேன்
தலைவா!
எதிரிக்கு எதிரி
நண்பன் போல
ரசிகனுக்கு ரசிகன்
தோழன்
உன் பலகோடி
ரசிகர்களை -நான்
நண்பனாக ஏற்கலாமா?
தலைவா!
உன் இதயத்தினூடாக
ஒரு நிமிடம்
யோசிப்பாயா
இந்த இதயத்தையும்
உன் நண்பனாக

ரோஷித் விஜய்,பொகவந்தலாவ.



## வாழ்வதே உழைப்பதற்கோ?

பாரதி தாசன் சொன்னது போல
எங்கம்மா களர்நிலந்தான் -அவ
படித்திட எவர்தான் வசதிகள் செய்து
கொடுத்தார் முன்னேற?
மாரியாய், கமலம், அன்னம், சொர்ணம்
எல்லோரும் இப்படித்தான்
மனங்களை அகலத் திறந்திடும் கல்வி
வரலையே மலையகத்தில்

காலையில் ஸ்டோர்ச் சங்கொலி கேட்டால்
லயமே அரண்டு எழும் - எங்கும்
கடகட சடசட படபட வென்கிற
சத்தந்தான் மூச்சு விடும்
வேலைக்குப் போகத் துடிதுடிப்பாக
ஓடிக்கொண்டிருப்பார்கள்
வேறெதும் நினைக்க அவர்களுக்கில்லை நேரம்
மலைவாழ்வே இப்படித்தான்

மலையக இயலில் மாற்றங்கள் வேண்டும்
செய்ய யார் இருகின்றார்கள்? மக்கள்
மனங்களைக் குழப்பி விசங்களை விதைத்தே
போர்யாரோ ஜொலிக்கின்றார்கள்
இளையவர் இவற்றை உணர்ந்தும் முயன்றும்
முடிவேதும் காணும்வரை
மலையகம் இருக்கும் இப்படியேத்தான்!
எவர் மாற்றப் போகின்றார்கள்

உழைப்பது மகிழ்வாய் இருப்பதற்காக
வாழ்வே உழைப்பதற்கோ? - ஒரு
பொறிமுறைக்குள்ளே வாழ்ந்திடும் இந்த
சிறைகளை அகற்ற வேண்டும்
இருநூறு ஆண்டை எட்டியும் விட்டோம்
என்ன மாற்றங்கள் கண்டோம் - எங்கள்
மலையகம் சும்மா மாறாது... மாற்றும்
வழிகளைத் தேடுவோம் வா!

நீலா பாலன்

## மணலா உன் மனம்

பெண்ணே!
உன் இதய மண்ணில்
அன்பை உரமிட்டே
காதல் செடி நாட்டினேன்!
சில நாளில் ஏனோ
அந்த
செடி வாடி விட்டது
கண்ணீர் ஊற்றியும்
பயனில்லை!
அப்போதுதான் புரிந்தது
மலர் செடி நாட்டியது
மண்ணில் அல்ல
மணலிலென்று!

எப். ஆயிஷா
கம்பளை.





## தாய்

துன்பத்தில் தோள் கொடுப்பவள் நண்பி
இதயத்தில் இடம் பெறுபவள் காதலி
பந்தத்தில் இணைபவள் மனைவி
ஆனால் ஒருவர் உதயத்தில் உறவானவள்
தாய்தான்

ஜி.காயத்திரி,
கிரேகிலி எஸ்டேட் பத்தனை.



## ஹைக்கூ கவிதை...

பிடித்து விளையாட
கரம் நீட்டினாள்
என் குழந்தை;
மேகத்துக்குள்
மறைந்துக் கொண்டது
வான் நிலவு.


இருக்கும் உணவை
உட்கொள்ள
''கை'' அலம்பினேன்;
''அம்மா தாயே பசி''
வாசலில்
பிச்சைக்காரன்

பாய் விரித்தேன்
நான் படுக்க
முந்திக் கொண்டது
என் செல்ல
நாய்க்குட்டி.

முடிந்த வரை
தடுத்துப் பார்த்தேன்
நிறுத்த முடியவில்லை;
கரை முட்டும்
கடல் அலையை

கற்பிட்டி வஹாப்





## அன்புக்கு உயிர் கொடு

காலத்தின் கட்டாயம் கலைந்தன
கூடுகள்
உயிர் காக்க பறந்த நாம்
உலகுக்கு அகதிகள்
நல்லறம் காத்து இல்லறம் கை
கோர்த்து
கல்லறை அவன் செல்ல
தனித்தவள் நான் தரணியில்
விதவையாம்
இறைவன் தீர்ப்பளித்தான்
ஆழிக்குள் எம் உறவுகள்
காவு கொடுத்தோர் நாம்
கலியுக அநாதைகள்
அகதி,விதவை,அநாதை

இருண்ட உலகில் புரண்டு
வந்தவனே!
ஈன்ற தாயின் தொப்புள்க்
கொடியன்று
நீ கொண்ட உறவேது இவ்வுலகில்
சஞ்சரித்த போது,
விழித்தெழு தோழனே,
கிலித்தெறி மடமையை,
உறவினை உயர்த்திட உதிரத்தை
பங்கிடு
அன்புக்கு உயிர் கொடு
தாழ்வு மனம் களைத்திடு
அனைவரையும் அணைத்திடு
அறவழி நடப்போம் புறப்படு

மனோ

உதய சூரியன் ''கவிதைச்சாரல்''
எக்ஸ்பிரஸ் மீடியா பப்ளிகேஷன்
இல. 65, [illegible] வீதி, கொழும்பு 15
பெயர்:------------------------------
முகவரி:------------------------------
தொலைபேசி இல:------------------------------

## தேர்தல் சிறப்பிதழ்

உங்கள் உதயசூரியனில் விசேட தேர்தல் சிறப்பிதழ்.

வேட்பாளர்களே ! கட்சிகளே ! உங்கள் செய்திகள்,

விளம்பரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்!

# இ.தொ.கா.வைப் பலப்படுத்துவதன் மூலமே இன்னுமின்னும் நன்மைகளைப் பெறமுடியும்



சிலர் சுயநலத்துக் காக வாக்கு களை பெற்றுக்கொண்டு கட்சி தாவுகின்றனர். இவர்களால் சமூகத்திற்கு ஆகப்போவது ஒன்றுமில்லை. குறிப்பாக இ.தொ.கா. விலிருந்து விலகியவர்கள் அரசியலில் நிலையாக இருந்ததுண்டா? இவர்கள் மக்களை கூறுபோட்டு தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதையே குறியாகக் கொண்டுள்ளனர். எனவே மக்கள் இ.தொ.கா.விற்கு வாக்களித்து தமது உரிமைகளையும், அபிவிருத்திகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கின்றார் மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும், இ. தொ. கா.வின் உதவி செயலாளரும், வேட்பாளருமான எம்.ரமேஷ். அவர் வழங்கிய செவ்வியின் விபரம் பின்வருமாறு.

*** உங்கள் அரசியல் வாழ்க்கை பற்றி?**

நான் மக்கள் பிரதிநிதியாக சுமார் பத்து வருடங்கள் பணியாற்றுகின்றேன். அரசியலில் மாகாண சபை உறுப்பினராகவும் இருந்திருக்கின்றேன். கல்வி அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள், மின்சாரம் மற்றும் பாடசாலை மாணவர்களின் கல்விக்குத் தேவையான அடிப்படை உதவிகளை என்னால் முடிந்தளவு வழங்கியுள்ளேன்.

*** சமூகத்திற்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

தற்போதைய சூழ்நிலையில் ஒற்றுமையே முக்கியம். சுயநல அரசியல்வாதிகளை ஓரங்கட்டி ஒற்றுமையாக இ.தொ.கா.விற்கு வாக்களிப்பதன் மூலம் எமது பேரம் பேசும் சக்தியை அதிகரித்து அரசாங்கத்திடமிருந்து மேலும் பல அபிவிருத்திப் பணிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

***இ.தொ.கா.வின் வெற்றி எவ்வாறுள்ளது?**

இ.தொ.கா. தேர்தலில் தோற்றதாக வரலாறு இல்லை. தற்போது எமக்கு இருக்கும் மக்கள் ஆதரவைப் பார்த்தால் நுவரெலியாவில் ஆறு பேரும் தெரிவு செய்யப்பட்டு விடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. மலையகத்தில் இ.தொ.கா.விற்கே அதிக செல்வாக்கு இருக்கிறது. இதில் சந்தேகம் இல்லை.

ஆறுமுகன் தொண்டமானின் வழிநடத்தலின் கீழ் ஆயிரக்கணக்கான அங்கத்தவர்கள் மற்றும் விசுவாசிகளைக் கொண்ட பலமான அமைப்பாக இ.தொ.கா. இன்றும் இருக்கின்றது. இ.தொ.கா.வை பலப்படுத்துவோமாக இருந்தால் நாம் இன்னும் பல உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிக்க முடியும். இதற்கு உதாரணமாக தோட்டங்கள் தோறும் பஸ் சேவையை நடத்தி வருகிறோம். கல்வி பயிலும் மாணவர்கள், இளைஞர், யுவதிகளின் கணினி அறிவை மேம்படுத்தும் நோக்கில் பிரஜாசக்தி, நவசக்தி நிலையங்களினூடாக கணினி அறிவை மேம்படுத்தி வருகிறோம். சுயதொழில் ஊக்குவிப்பு, கடன் உதவி வழங்கியுள்ளோம். புதிய வீடமைப்புத் திட்டங்களை உருவாக்கியுள்ளோம். அதுமட்டுமல்லாமல் இன்னோரன்ன அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கின்றோம். இதற்கும் மேல் இ.தொ.கா. மீது மக்கள் கொண்ட பற்று இச்செல்வாக்கிற்கு காரணம் எனலாம்.

நேர்காணல்:- டி.சந்ரு

# ம. ம. முன்னணி கொட்டகலையில் வீடுவீடாகப் பிரசாரம்

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் அரசியல் துறைத் தலைவருமான வீ.இராதாகிருஷ்ணன் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் மத்திய மாகாண சபைக்கு, நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான ஆதரவு திரட்டுவதில் ஈடுபட்டுள்ளார்.

அண்மையில் கொட்டகலை நகர வர்த்தகர்கள், வாக்காளர்களின் வீடுகளுக்கும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் சென்று ஆதரவினை மலையக மக்கள் முன்னணிக்கு கோரினர்.

இவருடன் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமும் வேட்பாளருமான அ.லோரன்ஸ் மற்றும் வேட்பாளர்கள், மலையக மக்கள் முன்னணியின் கொட்டகலை நகர அமைப்பினர் ட.விஸ்வநாதன் உட்பட ஆதரவாளர்களும் இப்பிரதேசத்தின் சில பகுதிகளுக்கு வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

கொட்டகலை நிருபர்.




## டிஜிடல் வீடியோ கெமரா பயிற்சி

*Digital Video Camera Course*

அதி நவீன டிஜிடல் வீடியோ கெமராக்களின் ஆக்கிரமிப்புக்கு ஈடுகொடுக்கும் வகையில் தமிழ் மொழியிலான குறுகிய கால பயிற்சி. அப்புதலையில் தங்குமிட வசதியுடன். சனி, ஞாயிறு நாட்களில் காலை 9 மணி முதல் 4 மணி வரை. Script Writing, Production Planning, Art Direction, Photography, Light Techniques, Editing & Nol (Wedding Filming Tech) 25 வருட தொழில் அனுபவம். Ocic Sri Lanka Cinema & Video Production Course சான்றிதழ் பெற்ற **கவிமோகன்ராஜ்** அவர்களால் கற்பிக்கப்படும்.

Reg No: W-53795

**MARUTHI MEDIA**
**No. 15, Beragala Sub Post Office Road, Beragala, Haldamulla. ☎: 077-7463148**

## தேவை

கொழும்பு-15, முகத்துவாரம் மின்றோ றெஸ்டூரன்டில் (Minro Restaurant) பரிமாறுவதற்கு பணியாளர்கள் மற்றும் ஒரு காசாளரும் தேவை.

தொடர்புகளுக்கு: ☎: 0770673266

## தையல் கலை, அழகுக் கலை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

A/L பரீட்சை முடிந்த மாணவிகளுக்கு விசேட பயிற்சி

- ❖ 1 மாத கால சாறி பிளவுஸ் பயிற்சி
- ❖ 6 மாத கால சகலவிதமான ஆடைகளுக்குமான பயிற்சி
- ❖ 1 மாத கால சல்வார் பயிற்சி

அழகுக் கலை NVQ முறைப்படி 6 மாத கால பயிற்சி

| கண்டி CSC | மாத்தளை நஹோதயம் | கம்பளை IHS | நாவலப்பிட்டி Computer Studies Center | ஹட்டன் ஷைலியம் Acadamy | கடுகஸ்தொட்டை Steps |
|---|---|---|---|---|---|
| Sep: 1, 3 9.00 AM | Sep: 1, 2 1.30 PM | Sep: 7, 14 8.00 AM | Sep: 7, 14 10.30 AM | Sep: 7, 14 2.00 PM | Sep: 2, 9 3.00 PM |

என்றும் தரத்துடன் திருமதி ஜெரின் 077-5454002, 077-5454110

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி

## 29.08.13 முதல்

## 04.09.13 வரை

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | மகிழ்ச்சி | தனம் | அமைதி | இன்சொல் | செலவு | இலாபம் | முயற்சி |
| ரிஷபம் | இலாபம் | சுகம் | நட்பு | வெற்றி | முயற்சி | ஆதரவு | சுகம் |
| மிதுனம் | முயற்சி | நற்செயல் | புகழ் | பக்தி | இன்சொல் | பகை | நட்பு |
| கடகம் | உயர்வு | நன்மை | சாந்தம் | ஓய்வு | பொறுமை | பொறுமை | மறதி |
| சிம்மம் | நன்மை | செலவு | கவனம் | முயற்சி | பாசம் | கீர்த்தி | நிம்மதி |
| கன்னி | வரவு | மேன்மை | பயம் | தெளிவு | பெருமை | நற்செயல் | சாதனை |
| துலாம் | வெற்றி | சாதனை | உதவி | ஊக்கம் | ஓய்வு | தீரம் | ஆர்வம் |
| விருச்சிகம் | சுகம் | ஆதாயம் | இலாபம் | பாசம் | கீர்த்தி | சாதனை | இலாபம் |
| தனுசு | பிரயாணம் | சாந்தம் | வெற்றி | ஆக்கம் | மகிழ்ச்சி | உற்சாகம் | பொறுமை |
| மகரம் | பெருமை | புகழ் | யோகம் | தனம் | பயம் | போட்டி | யோகம் |
| கும்பம் | நற்செய்தி | பக்தி | செலவு | குழப்பம் | நற்செயல் | ஆதாயம் | ஆக்கம் |
| மீனம் | பாராட்டு | உற்சாகம் | போட்டி | நன்மை | சுகம் | பாரட்டு | ஆதாயம் |

தனக்குத்தானே உதவிக்கொள்ளாமல் எவனாலும் அடுத்தவனுக்கு உதவ முடியாது என்பது உலகின் மிக அழகிய இயல்புகளில் ஒன்று.

- எமர்சன்

உங்களைத் தவிர வேறு எதுவும் உங்களுக்கு அமைதியைத் தர முடியாது. மற்றவரை அறிந்தவன் புத்திசாலி, தன்னைத்தான் அறிந்தவன் ஞானி.

- லா ஓட்ஸ்

ஒருவனிடம் துக்கமும் தூக்கமும் எப்போது குறையுமோ, அப்போதே அவன் மேதையாகிறான்.

காந்திஜி

எக்கணமும் சுறுசுறுப்பாக இருப்பவர்களிடம் திறமைகள் தாமே வந்து ஒட்டிக்கொள்ளும். தங்களுக்குச் சாதகமான சூழ்நிலைகளை பயன்படுத்திக் கொள்பவர்கள் மட்டுமே நிலையான புகழை ஈட்ட முடியும்.



## வாழ்க்கைக்கு வழிசொல்லும் விழிப்புணர்வுத் தொடர்

## இதை நீயே உருவாக்குகிறாய்

ஒருவர் தான் எப்படி வாழவேண்டும் என்பதை ஒரு குட்டிக்கதை மூலம் தெரிந்துக் கொள்வோம்.

பல வருடங்களாக தச்சன் பணி செய்து வந்த தொழிலாளி ஒருவன் தன் பணியிலிருந்து ஓய்வு பெற விரும்பினான். எஜமானனிடம், தான் தன் குடும்பத்துடன் அமைதியாகக் காலம் கழிக்க விரும்புவதைத் தெரிவித்தார்.

எஜமானனுக்குத் தன் தொழிலாளியை விட மனமில்லை. இருந்தாலும், கடைசியாக ஒரே ஒரு வீடு கட்டித் தந்துவிட்டு ஓய்வு பெறுமாறு கேட்டுக்கொண்டார். தச்சன் சரி என ஒப்புக் கொண்டாலும், அவர் மனம் வேலையில் ஆழ்ந்து ஈடுபடவில்லை. ஏனோ தானோவென்று மட்டமான பொருள்களைக் கொண்டு வீடு கட்ட ஆரம்பித்தார்.

தன் கடைசிப் பணியை அப்படி அசிரத்தையுடன் செய்தது துரதிர்ஷ்டம்தான். எப்படியோ ஒரு வழியாக வீடு கட்டி முடிந்ததும் வீட்டை வந்து பார்த்தார் எஜமானன்.

அமைதியாக வீட்டின் சாவியைத் தச்ச ரிடம் கொடுத்து, இதோ, இந்த வீடு உனக்காக நான் அளிக்கும் பரிசு என்றார். அதிர்ச்சி! வெட்கம்! அடடா, இது தனக்கான வீடு என்று முன்பே தெரிந்திருந்தால் நன்றாகக் கட்டியிருக்கலாமே?

தான் மோசமாகக் கட்டிய வீட்டில், தானே வாழ வேண்டிய நிலைமை அந்தத் தச்சனுக்கு. மனிதர்களும் இப்படித்தான். தங்கள் வாழ்க்கையை ஏனோ தானோ வென்று வாழ்ந்து கழிக்கிறார்கள். தங்களுடைய திறமையை முழுமையாகப் பயன்படுத்தாமல் சோம்பி வாழ்கிறார்கள். திறமை காட்ட வேண்டிய சந்தர்ப்பங்களைக் கோட்டைவிட்டு விடுகிறார்கள். நம் வாழ்க்கையும் அந்த வீட்டைப் போன்றதுதான். ஒவ்வொரு ஆணி அடிக்கும் போதும், மரத்துண்டுகளைச் சேர்க்கும் போதும் புத்திசாலித்தனத்தோடு செயல்படுங்கள்.

இந்த வாழ்க்கை உனக்காகத்தான், உனக்குதான் அளிக்கப்பட்டுள்ளது. அதை நீயே உருவாக்குகிறாய். ஒரு நாள் நீ வாழ்ந்தாலும் அமைதியோடும் கௌரவத்தோடும் வாழ வேண்டும்.

## ஒரு போதும் ஈடாகாது

இருபது வயது வரை என் அம்மா என்னை நன்றாகப் பார்த்துக் கொண்டார். அவர் முதுமையடைந்தவுடன் அவர் மரணம் அடையும் வரை இருபது ஆண்டுகள் நான் அவரை அதை விட நன்றாகப் பார்த்துக் கொண்டேன்.

கணக்கு நிகராகி விட்டதல்லவா என்று நபிகள் நாயகத்திடம் ஒருவர் கேட்டார்.

நபிகள் சொன்னார், கணக்கு நிகராகாது. உன் அம்மா உன்னை வளர்த்தது, உன்னை வாலிபனாக்கும் எண்ணத்தில்.

நீ பார்த்துக் கொண்டதோ அவர்கள் மரணம் வரை அவர்களைப் பராமரிக்கும் எண்ணத்தில்.

அவர் உன்னை வாழ்வுக்காக வளர்த்தார். நீ அவரை சாவுக்காக பராமரித்தாய். இரண்டும் ஒருபோதும் ஈடாகாது என்று.

# மனதை நெகிழ வைத்த மகத்தான சேவை







ஆயிரம் கோவில்களில் அபிஷேகங்கள் செய்வதை விட, நலிந்தவர் ஒருவருக்கு உதவுதல் ஆயிரமடங்கு உயர்வானது. அதுவும் உடலாலும், மனதாலும் நலிந்து போயிருக்கின்ற மக்களுக்கு கைகொடுக்கும் ஒரு மகத்தான பணியில் உதயசூரியனும் இணைந்துக் கொண்டதில் பெருமகிழ்ச்சி கொள்கிறது.

உதயசூரியனின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஊவா மாகாண சமூக சேவைகள் அமைச்சுடன் இணைந்து நடத்திய நடமாடும் சேவை ஆயிரத்திற்கும் அதிகமான மக்களுக்கு நன்மை தருவதாக அமைந்தது.

பதுளை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய தோட்டங்களில் ஒன்றான நாவில மற்றும் கவரகல தோட்டங்களை மையப்படுத்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் நாவில, கவரகல, இந்தகல போன்ற தோட்டப்புறங்களைச் சேர்ந்த மக்கள் கலந்துக்கொண்டு நன்மையடைந்தனர்.

ஊவா மாகாண சமூகசேவைகள் அமைச்சு, சமூக சேவைகள் திணைக்களம், ஆயுர்வேத திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம், மாகாண சுகாதார அமைச்சு, எல்ல பிரதேச செயலகம் போன்றன இதன் போது பங்குபற்றி தமது சேவைகளை வழங்கியிருந்தன.

இந்த தோட்டப் புறங்களைச் சேர்ந்த மக்களைப் பொறுத்தவரை மேற்படி திணைக்களங்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதென்பது அத்தனை இலகுவானதல்ல. சுமார் 19 கிலோ மீற்றர் தூரம் பயணித்தே இவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும். அதுவும் ஒரே பயணத்தில் இச்சேவைகள் கிடைத்துவிடுவதுமில்லை. அதிலும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் நோயாளிகள், முதியோர்களைப் பொறுத்தவரை இந்த சேவைகளை பெற்றுக்கொள்வதென்பது மிகக் கடினம் என்பதற்கு இச்சேவையின் போது தேவை கருதி திரண்டிருந்த மக்கள் கூட்டமே சான்றாக இருந்தது.

அந்த வகையில் ஊவா மாகாண சமூக சேவைகள் அமைச்சினால் மாற்றுத்திறனாளிகளுக்கான சக்கர நாட்காலிகள், ஊன்றுகோல்கள் மற்றும் முதியோர்களுக்கான பொதுசன உதவித் தொகை போன்றன வழங்கப்பட்டன.

பிறப்பில் இருந்து மாற்றுத்திறனாளிகளாக காணப்பட்டவர்களுக்கு பல வருடங்கள் கடந்தும் எந்தவொரு உதவியும் கிடைக்காத நிலையில் இந்த நடமாடும் சேவையின் மூலம் அவர்களுக்கான உபகரணங்களும், உதவித் தொகையும் வழங்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

ஊனமுற்றோரும் முதியோர்களும் மேற்படி உதவிகளைப் பெற்றுக் கொண்டு தமக்கு இத்தகைய சிறப்பான சேவையை வழங்கிய அமைச்சர் செந்தில் தொண்டமானுக்கு கண்ணீருடன் கைகூப்பி தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் பதிவாளர் திணைக்களத்தின் ஊடாக பிறப்பு, இறப்பு, திருமணச்சான்றிதழ் பெற்றுக்கொடுத்தல், எல்ல பிரதேச செயலகத்தினால் தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொடுத்தல் என்பனவும் அதேபோல் சுகாதார அமைச்சு மற்றும் ஆயுர்வேத திணைக்களம் என்பவற்றினால் மருத்துவ முகாமும், பற்சிகிச்சை என்பனவும் மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையில் இந்த நடமாடும் சேவையில் 45 மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாட்காலிகளும், ஊன்றுகோல்களும், 07 காதுகேளாதவர்களுக்கான இயந்திரங்களும், 25 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளும் , 125 முதியோர்களுக்கான பொதுசன உதவிகளும், 200 பேர்வரையிலானோருக்கு பிறப்புச் சான்றிதழும், 500 இற்கும் மேற்பட்ட மக்களுக்கு ஆங்கில மற்றும் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சைகளும், 70 பேர் வரையிலானோருக்கு பற்சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் ஊவா மாகாண சமூக சேவைகள் அமைச்சர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டிருந்ததுடன், ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் டி.எம்.வனிதா திசாநாயக்கவும் பங்குகொண்டிருந்தார். அத்தோடு, இந்நிகழ்வில் உதயசூரியன் பத்திரிகை ஆசிரியர் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எஸ்.சந்திரமோகன்

# பூசாரியை பலிகொண்ட ஆவி



இதுவரைக்கும் பேய்பிடித்து ஆடுபவர்களை பூசாரி இப்படி ஓட்டினார், அப்படி ஓட்டினார். பேய்கள் பூசாரிக்கு அடங்கிவிடும் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆனால், அவர்கள் பேய்களை ஓட்டுவதற்கு அவர்கள் உயிரையே பணயம் வைக்கிறார்கள். பேய்களை அடக்க அவர்கள் எவ்வளவு பெரிய ஆபத்தை சுமக்கிறார்கள் என்பதை யசந்தவை சந்திக்கும் வரை, அவரது கதையைக் கேட்கும் வரை நான் அறிந்திருக்கவில்லை.

பேய், ஆவி, எல்லாம் பொய். அதுவும் பேய் பிடித்து ஆடுவதென்பது சுத்தப் பேத்தல். அதிலும் அந்தப் பேய்களை பூசாரிகள் விரட்டுவதாகக் கூறுவது உச்சக்கட்ட ஏமாற்றுவேலை என்பது எனது பொதுவான அபிப்பிராயம்.

நான் படித்தவன், பாமரன் அல்ல என்கிற எண்ணம் எனக்குள் இந்த அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருந்தது. நான் கொழும்பில் ஒரு தனியார் நிறுவனத்தில் உயர் பதவியில் இருக்கிறேன். அதேபோன்று உயர் பதவியில் இருப்பவன் யசந்த. குருணாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவன்.

யசந்தவிற்கு தந்தை இல்லை, தாய் மட்டும்தான். ஒருநாள் அவன் தன் தந்தை எப்படி இறந்தார் என்பதை சொன்னபோது இப்படியெல்லாம் கூட நடக்குமா? என எண்ணி வியந்தேன்.

அதைப்பற்றித்தான் இப்போது உங்களிடம் பகிர்ந்துகொள்ளப் போகிறேன்.

யசந்த குருணாகல் பிரதேசத்தில் வசிக்கும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவன். யசந்தவின் பெரியப்பாவின் தொழில் பேய் ஓட்டுவது, மந்திரம் செய்வது. யசந்தவின் தந்தை அவருக்கு உதவியாளராக பணியாற்றிக் கொண்டிருந்தார்.

தன் தந்தையும், அவரது சகோதரும் பேய் ஓட்டுவார்கள் என்று யசந்த சொன்னபோது நான் ஏளனமாகச் சிரித்தேன்.

பேய் ஓட்டுறது அத்தனை சாதாரணமில்லை. பேய் ஓட்டும்போது கொஞ்சம் கவனம் சிதறிவிட்டாலும் கூட அவங்க உயிரே போய்விடும். அதுமட்டுமில்லாமல் பேய் ஓட்டுபவர்கள் விடிவதற்குள் பேய் ஓட்டிய ஊரைவிட்டு வெளியேறிவிட வேண்டும். தவறினால் விபரீதம் நடந்துவிடும். அப்படி ஒரு கவனயீனத்தாலும், போதையாலும் நான் என் பெரியப்பாவையும், என் அப்பாவையும் இழந்தேன் என யசந்த சொன்னபோது எனக்கு தூக்கிவாரிப் போட்டது.

### துர்மரணத்தை நான் நேரிலே பார்த்தேன்.

எங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஊரில் 28 வயது நிரம்பிய பெண் ஒருவருக்கு பேய் பிடித்துவிட்டதாம். தென்னந் தோட்டத்திற்கு வேலைக்குச் சென்ற குறித்த பெண் மயக்கமடைந்து கிடந்தாளாம். அவளை வீட்டுக்கு தூக்கிவந்து மயக்கம் தெளிவித்தபோது வேறு வேறு குரல்களில் பேசினாளாம். அவளுக்கு பேய்பிடித்துவிட்டதாகக் கூறி என் அப்பாவையும், சித்தப்பாவையும் அழைத்துச் சென்றார்கள்.

பெரியப்பா பேயை ஓட்டும் வேலைகளில் ஈடுபட்டிருக்க, யசந்தவின் அப்பா அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்துகொண்டிருந்தார். பூஜை நள்ளிரவு வரை நீடித்தது. பேய்பிடித்த பெண் ஆவேசமாக ஆடினாள். பெரியப்பா சாட்டையை எடுத்து அடி அடியென்று அடித்து, மிரட்டி, கெஞ்சி, சமாதானமாகப் பேசி என என்னவெல்லாம் செய்து பார்த்தும் பேய் வழிக்கு வரவில்லை.

நீண்டநேர பிரயத்தனத்திற்குப் பின் அந்த ஆவி கேட்ட பொருட்களையெல்லாம் கொடுத்து வழிக்கு கொண்டுவந்தார்கள். குறித்த ஆவி ஒரு சாடியில் அடைக்கப்பட்டது. அப் பெண்ணின் உச்சந்தலையிலிருந்து எடுக்கப்பட்ட தலைமுடி, ஆடையின் ஒரு பகுதி எல்லாவற்றையும் கொண்டு மயானத்திற்கு புறப்பட்டார்கள்.

நள்ளிரவு நேரம்! மயானத்தில் பூஜை செய்து பேயை அங்கேயே அடைத்துவிட்டு வந்துவிட வேண்டும். அதன்பிறகு அந்தப் பேய் அங்கு இங்கு என எங்கும் நகர முடியாது என்பார்கள்.

சுடுகாட்டுக்குப் பெரியப்பா, யசந்தவின் அப்பாவுடன் இன்னுமொருவர் என மூவரும் சென்றனர்.

அங்கு பூஜைகள் நடந்தன. பெரியப்பா ஏதேதோ மந்திரம் சொன்னார். கருவாடு, சாராயம் மற்றும் கொண்டுவந்த பொருட்கள் எல்லாம் மயானத்தில் இறைக்கப்பட்டன. அங்கிருந்த பெரிய மரத்தில் தகடும், கொண்டுவந்த முடியும் ஆணிவைத்து அறையப்பட்டது. பிறகு ஒரு போத்தல் சாராயத்தையும் பெரியப்பா மடமடவென குடித்தார். யசந்தவின் அப்பாவும் ஏற்கனவே நல்ல போதையில் இருந்தார்.

வழக்கமாக பேயோட்டும் போது இருவருமே மிதமான போதையில் இருப்பது வழக்கம்.

யாரும் திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்குப் போங்க. என்ன நடந்தாலும் திரும்பிப் பார்க்கக்கூடாது என்று கூறிவிட்டு பெரியப்பா முன்னால் நடந்தார்.

மற்ற இருவரும் பின் தொடர்ந்தார்கள். வழியில் தேசிக்காயை வெட்டி நாற்புறமும் வீசிக்கொண்டே சென்றார் பெரியப்பா.

புதைகுழியில் இருந்து சற்றுதூரம் வந்ததும் தனக்குப் பின்னால் யாரோ வருவது போல யசந்தவின் தந்தை உணர்ந்தார்.

யாரும் திரும்பிப் பார்க்க வேண்டாம் என்று பெரியப்பா சொன்னபடியால் அவர் திரும்பிப் பார்க்கவில்லை. இருந்தும் அந்த சத்தம் இப்போது அவருக்கு மிக அண்மையில் கேட்டது.

அந்தச் சமயம் பெரியப்பா சீக்கிரம் சீக்கிரம் திரும்பிப் பார்க்காம நடங்க என்று கட்டளையிட்டார்.

மறுகணம் அந்த விபரீதம் நடந்தது.

முன்னால் சென்று கொண்டிருந்த பெரியப்பா யாரோ தூக்கிவீசியதைப் போல எகிறிச் சென்று கீழே விழுந்தார்.

யசந்தவின் தந்தையும் உடன் வந்த மற்றொருவரும் பதறிப் போனார்கள்.

ஏற்கனவே அவர் நன்றாகக் குடித்திருந்தபடியால் மயங்கிவிட்டார் என நினைத்தனர். யசந்தவின் அப்பாவும் உடன் வந்த மற்றொருவரும் அவரைத் தூக்கிக் கொண்டு நடந்தனர்.

அவர்களால் பெரியப்பாவை சுமக்க முடியவில்லை. உடல் பாறாங்கல்லாய்க் கனத்தது.

சிரமப்பட்டு வீட்டுக்கு கொண்டு சென்றார்கள். வீட்டுக்கு வந்தவேளை அவர் உயிர் பிரிந்திருந்தது. அவரது வாயிலும் மூக்கிலுமிருந்து இரத்தம் வடிந்து உறைந்திருந்தது. யசந்தவின் அப்பாவிற்கும் என்ன செய்வது ஏது செய்வதென்று புரியவில்லை. பேயோட்டியவர்கள் அந்த நாள் விடிவதற்கு முன் அந்த ஊரிலிருந்தே சென்றுவிட வேண்டும்.

ஆனால், பெரியப்பாவின் துர்மரணம் நிகழ்ந்தபின் எப்படி அங்கிருந்து செல்வது? அவரது மரணத்திற்கு என்ன காரணம்? வீட்டிற்கு என்ன பதில் சொல்வது என அவர் குழம்பிப் போயிருந்தார்.

விடிந்தது! யசந்தவின் அப்பாவையும், பெரியப்பாவின் சடலத்தையும் ஊர்மக்கள் கொண்டுவந்து சேர்த்தார்கள். ஆம் அப்போது யசந்தவின் அப்பா சுய நினைவில் இல்லை. அதன்பிறகு செய்யாத மருத்துவங்கள் இல்லை.

யசந்தவின் அப்பாவிற்கு அவ்வப்போது சுயநினைவு வரும். சில நேரங்களில் பேய்பிடித்தவர் போல் நடந்துகொள்வார். வீட்டில் யாரையும் அவருக்கு அடையாளம் தெரியவில்லை. ஏதேதோ பேசுவார். நாளுக்கு நாள் அவரது உடல்நிலை மோசமானது. யசந்தவும் அவரது குடும்பத்தினரும் அந்த ஊரைவிட்டே வந்தார்கள். புதிய இடம், புதிய சூழல் அவரை குணப்படுத்தும் என நம்பினார்கள்.

ஒரு நாள் காதிலும், மூக்கிலும் இரத்தம் வடிய பெரியப்பாவைப் போலவே இவரும் இறந்துபோனார். அவரையும் பேய் அடித்து கொன்றுவிட்டது. ஆனால், மருத்துவர்கள் அதிக இரத்த அழுத்தம் காரணமாக மூளையில் நரம்பு வெடித்துவிட்டது என்று கூறினார்கள். அந்தப் பெண்ணின் உடலிலிருந்து ஓட்டிய பேய்தான் இந்த இருவரையும் காவு கொண்டுவிட்டது என்று யசந்த சொன்னான்.

யசந்தவின் நம்பிக்கை சரியா? தவறா? என என்னால் இன்னும் அனுமானிக்க முடியவில்லை.

தகவல், தொகுப்பு :- அரி

# School கெட்டப் யாருக்கு பொருத்தமாக உள்ளது?







நடிகை சங்கீதா குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி கதாநாயகி வரை 50 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். மகாநதி படத்தில் காவேரியாக நடித்துள்ளார். இவர் பூவே உனக்காக, எல்லாமே என் ராசாதான் படத்தின் மூலமும் பிரபலமானவர்.

தொகுப்பு:- அபி




இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (இல-68, எலிஹவுஸ் றோட், கொழும்பு-15) 29.08.2013 வியாழன் 94, பரமானந்த மாவத்தை கொழும்பு-13, தினக்குரல் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.